## இந்நூலில்...

உலகில் கிபி 570க்குப் பின்னரும் மகான்கள், ரிஷிகள், முனிவர்கள், தத்துவஞானிகள் என பலர் வாழ்ந்து மறைந்துள்ளார்கள். இந்நிலையில், முஹம்மத்(ஸல்) அவர்களை மட்டும் இறைவனின் இறுதித்தூதர் என குர்ஆன் கூறுவதேன்? முஸ்லிம்கள் அதை உறுதியாக நம்புவதேன்? இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை முஸ்லிம்கள் தங்களின் உயிரிலும் மேலாக மதிப்பதேன் என்ற விவாதங்களும், ஆய்வுகளும் இன்று வரையிலும் உலகம் முழுக்க நடந்து வருகின்றன. அவ்வகையில் இந்நூலும் சிறிதோர் ஆய்வே!

முஹம்மத்(ஸல்) குறித்து அறியாதோர் அறிந்து கொள்ள இந்நூலில் மிகச்சுருக்கமான வரலாறு முதல் அத்தியாயமாகக் தொகுக்கப்பட்டுள்ளது. ஆனாலும், முழுமையான வரலாற்றைப் படித்த திருப்தி வாசகர்களுக்கு ஏற்படக்கூடும்.


முஹம்மத் இறைத்தூதர் ஏன் என்பதற்கு விளக்கமாக, மனிதம், சமூகம், தேசம், ஆன்மிகம், அரசியல், கல்வி, பொருளாதாரம், அறிவியல் என பல துறைகளை ஆய்ந்து, தக்க சான்றுகளுடன் இந்நூலில் இரண்டாவது அத்தியாயம் தொகுக்கப்பட்டுள்ளது.

இறைவன், இறைத்தூதர்கள், இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்), திருக்குர்ஆன், இஸ்லாம், முஸ்லிம் என்றால் என்ன என்பதை இந்நூலின் வாயிலாக மிகச் சரியாக அறியலாம்.

**IPRC - ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**
New Majestic Guest House, Near Cinipriya Complex & Anna Bus Stand,
19. Vinayagamoorthi St, Sathamangalam, Madurai. 625020. India.
Phone: 0452-2527421, 0452-4354541, Mobile: 93440-96221, 93644-14441
E-mail: iprcindia2000@gmail.com

# முஹம்மத் இறைத்தூதர் ஏன்?

மவ்லவீ Dr. M.M. அப்துல் காதிர் உமரீ



*வெளியீட்டு எண்: 6*

# முஹம்மத் இறைத்தூதர் ஏன்?


ஆசிரியர்

மவ்லவீ. **Dr. M.M.** அப்துல் காதிர் உமரீ

திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர்

இஸ்லாமியப் பதிப்பகம் மற்றும் ஆய்வு மையம், இந்தியா.



வெளியீடு:

**IPRC**

**இஸ்லாமியப் பதிப்பகம் மற்றும் ஆய்வு மையம்**

**ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**

## MUHAMMAD IRAITHOODHAR YEAN? - BOOK DETAILS

- Author:
  **MOULAVI, DR. M.M. ABDUL KADIR UMARI**
- Pages:
  **80**
- Price:
  **INR 40/-**
- Third Edition:
  Hijri 1437 Shawwal (July 2016) Copies 2000
- Type Setting and Designed by:
  **SAFA GRAPHICS** - Madurai - 625020.
  Mobile: 0452-4354541, 93440-96221.
  E-mail: safagrafix@gmail.com
- Published by:
  **IPRC - ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**
  New Majestic Guest House,
  Near Cinipriya Complex & Anna Bus Stand,
  19. Vinayagamoorthi St, Sathamangalam,
  Madurai. 625020. India.
  Phone: 0452-2527421, 0452-4354541,
  Mobile: 93440-96221, 93644-14441
  E-mail: iprcindia2000@gmail.com
- Sole Distributor:
  **SAJIDA BOOK CENTRE**
  248. Thambuchetty Street,
  Mannadi, Chennai- 600001
  Phone: 044-25224821 Mobile: 9840977758



**ஆசிரியர்**

மவ்லவீ. **Dr. M.M. அப்துல் காதிர் உமரீ**

திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர்

இஸ்லாமியப் பதிப்பகம் மற்றும் ஆய்வு மையம், இந்தியா.



**© IPRC - ISLAMIC PUBLICATIONS & RESEARCH CENTRE**

*All rights reserved for IPRC and Author only. No part of this publication may be reproduced or transmitted in any form or any information storage or retrieval system, without permission and written order from The Translater.*




بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

*அளவற்ற அருளாளன், நிகரற்ற கருணையாளன் அல்லாஹ்வின் பெயரால்...*

# பதிப்புரை

*புகழனைத்தும் ஏக இறைவனுக்கே!*

*வாசக அன்பர்களே!* **'முஹம்மத் இறைத்தூதர்: ஏன்?'** *என்னும் இந்நூல் இஸ்லாமிய பதிப்பகம் மற்றும் ஆய்வு மையத்தின் 6 ஆவது வெளியீடாகும். எங்கள் நிறுவனம் திருக்குர்ஆன் தமிழாக்கம் வெளியிட்டிருப்பதை வாசகர்கள் அறிவீர்கள்; இறைவனுக்கே புகழனைத்தும்.*

*புள்ளிவிபரப்படி இன்று உலகில் மற்ற பெயர்களைவிட முஹம்மத் என்ற பெயரை அதிகம் சூட்டுகிறார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை முஸ்லிம்கள் அந்த அளவிற்கு தங்களின் உயிரினும் மேலாக நேசிக்கிறார்கள். முஹம்மத்(ஸல்) இறைவனின் தூதர் என்பதும், அவர்களின் வாழ்க்கை முறை முழு மனித குலத்திற்கு வழிகாட்டியாக அமைந்துள்ளதுமே இதற்கு முக்கியக் காரணமாகும்.*

*உலகில் புகழ்பெற்றோர் பலர் இருக்கும்போது முஹம்மத்(ஸல்) அவர்களை மட்டும் இறைவனின் இறுதித்தூதர் என முஸ்லிம்கள் உறுதியாக நம்புவது ஏன் என்ற சிறியதோர் ஆய்வே இந்நூல். திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர் Dr. M.M. அப்துல் காதிர் உமரீ இந்நூலைத் தொகுத்துள்ளார். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) குறித்து முறையாக அறிவதற்கு இந்நூல் துணைநிற்கும் என நம்புகிறோம். யாரும் மறுக்கமுடியாத அளவிற்கு ஆணித்தரமான வாதங்களை ஆதாரங்களுடன் நூலாசிரியர் தரமாக எடுத்து வைத்துள்ளார். முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதோர், ஆய்வாளர் என பலதரப்பு மக்களும் படித்தறிய வேண்டிய மிக முக்கிய நூலாக இதைக் கருதுகிறோம்.*

*இந்நூலில் ஏதேனும் குறை இருப்பின் சுட்டிக்காட்டுங்கள் இன்ஷா அல்லாஹ் அடுத்த பதிப்பில் சீரமைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். மக்களுக்கு பயனுள்ள இன்னும் பல ஆய்வுகள், தமிழாக்கம் மற்றும் தொகுப்புகளை எங்கள் நிறுவனம் தொடர்ந்து அளித்து வருவதற்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.*

*அன்புடன்*

***Dr. A. சையது அலீ ஃபாத்திமா***

*பொறுப்பாளர், IPRC*

*24.05.1437 ஹிஜ்ரி*

*(02.06.2016 கி.பி)*

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளாளன், நிகரற்ற கருணையாளன்
அல்லாஹ்வின் பெயரால்...

# முன்னுரை

*புகழனைத்தும் வல்ல இறைவனுக்கே!*

*மனிதர்கள் ஏக இறைவனை மறுத்து, அவனுக்கு இணைவைத்து வந்த ஒவ்வொரு காலக்கட்டத்திலும் இறைவன் தன் தூதர்களை அனுப்பிவந்தான். இறைத்தூதர்கள் மனிதர்களிலிருந்தே அனுப்பப் பட்டார்கள். அவர்கள் மனிதர்களுக்கு நன்மை மற்றும் தீமையைப் பிரித்து நேர்வழியைக் காட்டிவந்தார்கள். இறைத்தூதர்களில் சிலருடன் இறைவன் தன் வேதத்தையும் அருளிவந்தான். இவ் வரிசையில் இறுதியாக இறைவன் அனுப்பிய தூதர்தான் முஹம்மத் (ஸல்). அவர்களுக்கு இறைவன் அருளிய இறுதிவேதம் திருக்குர்ஆன்.*

*உலகில் கிபி 570க்குப் பின்னரும் மகான்கள், ரிஷிகள், முனிவர்கள், தத்துவஞானிகள் என பலர் வாழ்ந்து மறைந்துள்ளனர். ஆனால், முஹம்மத்(ஸல்) அவர்களை மட்டும் இறைவனின் இறுதித்தூதர் என குர்ஆன் கூறுவது ஏன்? முஸ்லிம்கள் அதை உறுதியாக நம்புவதேன்? இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை முஸ்லிம்கள் தங்களின் உயிரிலும் மேலாக மதிப்பது ஏன் என்ற விவாதங்களும், ஆய்வுகளும் இன்று உலகம் முழுக்க நடந்து வருகின்றன.*

*இந்த ஆய்வில் நுழைவதற்கு முன்பு முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிவது அவசியம் எனக் கருதுகிறேன். எனவே, இந்நூலின் முதல் அத்தியாயத்தில் அவர்களின் வரலாறு குறித்து மிகமிக சுருக்கமாகப் பேசியுள்ளேன். இரண்டாவது அத்தியாயத்தில், முஹம்மத் இறைத்தூதர் ஏன் என்பதை தக்க சான்றுகளுடன் விளக்கியுள்ளேன்.*

*இந்நூலை நிதானமாக வாசித்து, யோசித்து, ஆராய்ந்து, சிந்தித்து இதன் உண்மை நிலையை எற்றுக் கொள்வதையும், ஏற்காமல் போவதையும் வாசகர்களின் சுயவிருப்பத்திற்கே விட்டுவிடுகிறேன்.*

*இவ்வாறே எனக்கு இறைவன் கட்டளையிட்டுள்ளான்.*

*மார்க்கத்தில் (இஸ்லாமில்) நிர்ப்பந்தமில்லை. வழிகேட்டிலிருந்து நேர்வழி மிகத்தெளிவாய் இருக்கிறது. எனவே, வழிகெடுப்பவற்றை நிராகரித்து ஏக இறைவனை நம்புகிறவர் அறுந்துவிடாத வலுவான கயிற்றைப் பற்றிக் கொண்டார். ஏக இறைவன் செவியுறுபவன்; நன்கறிபவன். (திருக்குர்ஆன் 2:256)*



*“இந்தச் சத்தியநெறி உங்கள் இரட்சகனிடமிருந்து உள்ளது; எனவே, விரும்புகிறவர் இதை நம்பட்டும்; விரும்புகிறவர் இதை மறுக்கட்டும்” என்றும் கூறுக! (திருக்குர்ஆன் 18:29)*

*இறைவனின் இக்கட்டளைப்படியே வாசகர்களின் நடுநிலையான சிந்தனைக்கே இந்நூலின் கருத்துக்களை விட்டுவிடுகிறேன். கருத்துப் பரிமாற்றங்களை விரும்பு வாசகர்களை என்னுடைய மின்னஞ்சல் மற்றும் அலைபேசிக்கு அழைப்புவிடுக்கிறேன். விரும்பும் வாசகர்கள் தக்கமின்றிஅதில் பங்குபெறலாம். நாகரிமாக விவாதிக்கலாம்; நடுநிலையான தீர்வுக்கு வரலாம்.*

*இந்நூலை வாசிக்கும் வாசக அன்பர்களுக்கும், வெளியிடும் IPRC நிறுவனத்திற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக என்னை இப்பணியில் ஈடுபடுத்திய வல்ல இறைவனுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*என்றும் அன்புடன்*

***மவ்லவீ Dr. M.M. அப்துல் காதிர் உமரீ***
*அலைப்பேசி: 9344096221*
*வாட்ஸ்அப்: 9364414441*
*மின்னஞ்சல்: akumari1970@gmail.com*

*******

# பொருளடக்கம்...

## அத்தியாயம் 1


| | |
|---|---|
| வரலாற்றுச் சுருக்கம் | 09 |
| ஆரம்ப கால வாழ்க்கை | 09 |
| உலகின் அன்றைய நிலை | 10 |
| தூதுத்துவம் | 11 |
| இறைவழிக்கு மக்களை அழைத்தல் | 12 |
| அன்றைய மதீனா | 17 |
| மதீனாவில் இஸ்லாமிய அரசு அமைத்தல் | 17 |
| அடிப்படைச்சட்டம் | 17 |
| ஹுதய்பிய்யா உடன்படிக்கை | 19 |
| நிபந்தனைகள் | 19 |
| மன்னர்களுக்கு அழைப்பு | 20 |
| ஒப்பந்தம் முறிதல் | 20 |
| குடும்ப வாழ்க்கை | 21 |
| இறுதி நாள்கள்... | 22 |
| அரஃபா உரை | 22 |
| மரணம்... | 28 |


## அத்தியாயம் 2


| | |
|---|---|
| முஹம்மத் இறைத்தூதர் ஏன்? | 30 |
| தேசியவாதம் | 30 |
| சூழ்நிலையின் உருவாக்கம் | 31 |
| தன்னிலைப் பாதிப்பு | 32 |
| சீர்திருத்த மேதைகள் | 35 |
| வரலாறுகள் காணாத வரலாறு | 38 |
| இறுதித்தூதர் அரபகத்தில் ஏன்? | 41 |
| அவரென்ன தத்துவ ஞானியா? | 43 |





| | |
|---|---|
| சிந்தனைப் புரட்சி | 49 |
| தன்னிறைவான உலகம் | 53 |
| விஞ்ஞான உலகின் வழிகாட்டி | 54 |
| தூதுத்துவம் சிந்தனைக்கு எதிரானதா? | 62 |
| தலைவர்களும் தொண்டர்களும் | 64 |
| ஆன்மிகம் | 68 |
| அரங்கமும், அந்தரங்கமும் | 68 |
| மக்களைக் கவர்ந்த விதம் | 70 |
| ஆன்மிகவாதிகளின் ஆன்மிக அறிவு | 73 |
| ஆன்மிகவாதிகளின் வாழ்க்கை நிலை | 74 |
| எதிரிகளின் வாக்கு மூலம் | 75 |

**முஹம்மத் உங்களில் எந்த ஆணுக்கும் தந்தையாய் இருக்கவில்லை. ஆனால், அவர் அல்லாஹ்வின் தூதர்; இறைத்தூதர்களில் இறுதியானவர். மேலும், அல்லாஹ் ஒவ்வொரு பொருள் குறித்தும் நன்கறிந்தவன்.**

திருக்குர்ஆன் 33:40

# அத்தியாயம் 1

# வரலாற்றுச் சுருக்கம்

*இறைத்தூதர் முஹம்மத்(ஸல்)[1] அரபு நாட்டில் உள்ள மக்காவில் கி.பி. 571-ல் பிறந்தார்கள். பிறப்பதற்கு முன்னரே தந்தையை இழந்தார்கள்; அநாதையாகப் பிறந்தார்கள். தம் ஆறாவது வயதில் தாயையும் இழந்தார்கள். தாய் தந்தை இல்லாத அநாதை யாக எட்டு வயது வரை தம் பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களின் பராமரிப்பில் வளர்ந்தார்கள். பின்னர் பெரிய தந்தை அபூ தாலிப் அவர்களின் பராமரிப்பில் வளர்ந்தார்கள்.*

*ஏக இறைவனை வணங்குவதற்கான உலகின் முதல் இறைஇல்லம் ‘கஅபா’ மக்காவில் உள்ளது.[2] இறைத்தூதர் இப்ராஹீம்(அலை)[3] மற்றும் அவர்களின் மகன் இறைத்தூதர் இஸ்மாயீல்(அலை) ஆகிய இருவரும் சேர்ந்து இந்த இறைஇல்லத்தின் கட்டடத்தை எழுப்பினார்கள். இந்த இறையில்லத்தைத் தரிசிப்பதற்கு அரபுலக மக்கள் அனைவரும் புனிதப்பயணமாக வருவது வழக்கம். இதன் மூலம் அப்பகுதி உலகின் பெரும் வணிகத் தலமாகத் திகழ்ந்தது. இறைத்தூதர் இஸ்மாயீல்(அலை) அவர்களின் சந்ததியில் பனூ ஹாஷிம் வம்சாவழியில் முஹம்மத்(ஸல்) பிறந்தார்கள்.*

## ஆரம்ப கால வாழ்க்கை

*முஹம்மத்(ஸல்) ஆரம்ப காலத்தில் மக்கா பகுதியில் ஆடுகளை மேய்த்து வந்தார்கள். இதனால் அவர்களுக்கு எழுத்தறிவுக்கும், படிப்பறிவுக்கும் வாய்ப்பில்லாமல் போனது. அவர்கள் பிற்காலத்தில் இறைச்செய்தியை மக்களிடம் பொறுமையுடன் கொண்டு சேர்ப்ப தற்கான ஒரு பயிற்சிக் களமாய் ஆடுமேய்த்தல் அமைந்திருந்தது.*

*இளமைப் பருவத்தில் முஹம்மத்(ஸல்) தம் சிறிய தந்தை அபூ தாலிப் அவர்களுடனும், வேறு பலருடனும் சேர்ந்து வணிகம் செய்துவந்தார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின்*

1. ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்பதன் சுருக்கம். இறைவனின் கருணையும் அமைதியும் அவர்கள் மீது உண்டாகட்டும் என பொருள். இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்காக அவர்களின் ஏவல்படி இவ்வாறு பிரார்த்திக்க வேண்டும்.

2. காண்க திருக்குர்ஆன் 3:96.

3. (அலை) என்பது அலைஹிஸ்ஸலாம் என்னும் பிரார்த்தனையின் சுருக்கம். இறைத்தூதர்களின் பெயர் குறிப்பிட்டால் இவ்வாறு பிரார்த்திக்க வேண்டும். இதன் பொருள் அவர்களின் மீது அமைதி நிலவட்டுமாக என்பதாகும்

நாணயம், நேர்மை மற்றும் உண்மையில் நிலைத்திருக்கும் பண்பு இந்த வணிகத்தில் வெளிப்பட்டது. இதனால் மக்கள், **'அல் அமீன்' - நம்பிக்கைக்கு உரியவர், 'அஸ் ஸாதிக்' - உண்மையாளர்** என அவர்களை அழைத்துவந்தார்கள். எல்லாத் தரப்பு மக்களாலும் விரும்பப்படுபவராய் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) திகழ்ந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் இளமைக் காலத்தில் ஒருமுறை கஅபா புணரமைப்புப் பணி நடந்தது. அப்போது **'ஹஜ்ருல் அஸ்வத்'** எனும் கருப்புக் கல்லை அந்த ஆலயத்தில் பதிப்பது யார் என்பதில் மக்காவாழ் வம்சாவழியிடையே பெரும் பிரச்னை எழுந்தது. இறுதியாக, "மறுநாள் காலை இறை இல்லத்திற்கு முதன் முதலாக வருபவரே இதில் தீர்ப்பளிப்பார்" என அனைத்துத் தரப்பு மக்களாலும் ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது.

இந்த இறைஇல்லத்தில் மறு நாள் காலை முதன்முதலாக கால் பதித்தவர் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்). இவரின் மீதிருந்த நம்பிக்கையால் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

ஒரு போர்வையைக் கொண்டுவருமாறு இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) பணித்தார்கள். அப்போர்வையின் நடுவில் கல்லை தூக்கி வைத்தார்கள். நான்கு வம்சாவழித் தலைவர்களையும் அழைத்து அதன் நான்கு முனையைப் பிடித்து தூக்கிவரச் செய்து அக்கல்லை தம் கையால் எடுத்து உரிய இடத்தில் பதித்தார்கள். இதன் மூலம் பெரும் கலவரம் தடுக்கப்பட்டு அமைதி நிலவியது.

தம் இருபத்தி ஐந்தாம் வயதில் மக்காவின் பெரும் செல்வச் சீமாட்டி அன்னை கதீஜா(ரலி)[4] அவர்களை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மணந்தார்கள். கதீஜா(ரலி) ஏற்கனவே இரண்டு திருமணம் ஆன விதவைப்பெண்மணி. இவர் மூலமாக இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இரண்டு ஆண் மற்றும் நான்கு பெண் குழந்தைகள் பிறந்தார்கள். ஆண் குழந்தைகள் இருவரும் குழந்தை பருவத்திலேயே இறந்துபோனார்கள். இதனால் அவர்களுக்குப் பின்பு உரிமை கொண்டாடும் ஆண் வாரிசு இல்லாமல் போனது.

## உலகின் அன்றைய நிலை

மூடநம்பிக்கையால் அன்று உலகம் இருண்டு காணப்பட்டது. இறைவனுக்கு விரோதமான போக்கும், உரிமைப் பறிப்பும்

4. ரலியல்லாஹு அன்ஹு அல்லது ரலியல்லாஹு அன்ஹா என்பதன் சுருக்கம். இறைவன் அவர்களைப் பொருந்திக் கொண்டான் என்பது இதன் பொருள்.



மேலோங்கியிருந்தது. நம் இந்தியாவில் பெண்களை உடன் கட்டை ஏற்றிவந்தார்கள். அரபு நாட்டு மக்கள் தங்கள் பெண் குழந்தைகளை அவமானச் சின்னமாகக் கருதி உயிருடன் புதைத்து வந்தார்கள். அற்பமான பிரச்னைகளுக்கும்கூட பல ஆண்டுகள் போரிட்டு வந்தார்கள். மனித உயிர்களுக்கு மதிப்பே இல்லை; யார் யாரைக் கொலை செய்தாலும் கேட்பார் அற்ற நிலை இருந்தது. மக்களில் ஒரு பிரிவினர் பல்வேறு வகையில் இறைவனை மறுத்து வந்தார்கள். ஒரு சாரார் இறைவனுக்கு இணைவைத்து வந்தார்கள். மனிதன் செய்யும் ஒவ்வொரு தீமைக்கும் ஆணிவேராய் இறை மறுப்பும், இணைவைப்பும் திகழ்ந்தது.

அந்த மக்களின் மூதாதையர் இறைத்தூதர் இப்ராஹீம்(அலை) மற்றும் இறைத்தூதர் இஸ்மாயீல்(அலை) போதித்து வந்த ஓர் இறைக்கொள்கையை காலப்போக்கில் மக்கள் மாற்றிவிட்டார்கள். இதன் விளைவாக ஏக இறைவனை வணங்குவதற்காக கட்டப்பட்ட இறையில்லத்தில் 360 சிலைகளை கடவுளர்களாக வைத்து வணங்கி வந்தார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வருகைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்பு அம்ர் இப்னு லுஅய் என்பவன் முதன் முதலாக இங்கு சிலையை இறக்குமதி செய்து, அதை வணங்கத் தொடங்கினான்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) பிறந்த காலம் தொட்டே சிலை வணக்கத்தில் ஈடுபடவில்லை. மக்களின் இந்த மூடநம்பிக்கையை வெறுத்தார்கள். தனிமையை நாடிச் சென்றார்கள். மக்களின் நிலையை நினைத்து கவலையுற்றார்கள்.

## தூதுத்துவம்

மக்காவிற்கு அருகிலுள்ள **'ஹிரா'** குகையில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அடிக்கடி தனிமையில் தங்கிவந்தார்கள். அப்போது அவர்களுக்கு வயது நாற்பது; **'ஹிரா'** குகையில் அவர்கள் இருந்த போது, தூதுத்துவப் பணிக்காக இறைவனை முஹம்மத்(ஸல்) அவர்களைத் தேர்வு செய்தான்.

இறைவன் வானவர் ஜிப்ரீல்(அலை) அவர்களை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களிடம் அனுப்பினான். முதன்முதலாக பின்வரும் இறைவசனங்களை வானவர் ஓதிக்காண்பித்தார்.

"படியுங்கள்!" என வானவர் கூறினார்.

''எனக்குப் படிக்கத்தெரியாதே!'' என முஹம்மத்(ஸல்) கூறினார்கள்.

பின்னர் வானவர் அவர்களைச் சிரமப்படும் அளவிற்கு இறுகக் கட்டியணைத்தார்; பின்னர் விட்டுவிட்டார். இவ்வாறே மும்முறை வானவர் செய்துவிட்டு,

“படைத்த உம் இரட்சகனின் பெயரால் படிப்பீராக!

‘அலக்’ எனும் (அட்டைப் பூச்சிபோல்) தொங்கும் நிலையிலிருந்து மனிதனை அவன் படைத்தான்.

படிப்பீராக! உம் இரட்சகன் கண்ணியம் மிக்கவன்.

அவனே எழுது கோலால் கற்றுக்கொடுத்தான்.

மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்.”[5]

இதுதான் இறைச்செய்தியின் ஆரம்பம்.

தமக்குப் புதுமையான ஒரு சம்பவம் நிகழ்ந்ததால் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அச்சப்பட்டார்கள். தம் மனைவி கதீஜா(ரலி) அவர்களிடம் சென்று நடந்த இச்செய்தியைக் கூறினார்கள்.

“தாங்கள் உறவினர்களுடன் இணங்கி வாழ்கிறீர்கள்; சிரமப் படுவோரின் சுமைகளைச் சுமக்கிறீர்கள்; வறியவர்களுக்காக உழைக்கிறீர்கள்; விருந்தினர்களை உபசரிக்கிறீர்கள்; சோதனை களுக்கு உட்பட்டோருக்கு உதவுகிறீர்கள். எனவே, இறைவன் மீது ஆணையாக உங்களை இறைவன் இழிவுபடுத்தவே மாட்டான்.” என கதீஜா(ரலி) கூறினார்.

இருப்பினும் அவர்களின் அச்சத்தைப் போக்க தம் சிறிய தந்தை வரக்கா இப்னு நவ்ஃபல் என்பவரிடம் அழைத்துச் சென்றார். அவர் முந்தைய வேதங்களில் ஞானம் பெற்றவர்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு நடந்த நிகழ்வுகளை அவர் கேட்டறிந்தார். முஹம்மத்(ஸல்) இறைவனின் தூதராகத் தேர்வுசெய்யப்பட்டுள்ளார் என்பதை அவர் தெளிவுபடுத்தினார். அதற்கான அறிவிப்புகள் முந்தைய வேதங்களில் காணப் படுவதாகவும் கூறினார்.[6]

## இறைவழிக்கு மக்களை அழைத்தல்

பின்னர், சிறிது காலம் கழித்து மீண்டும் வானவர் மூலம் இறைவன் தன் செய்தியை அனுப்பினான்.

5. காண்க திருக்குர்ஆன் 96:1-5.

6. காண்க ஸஹீஹ் அல் புகாரீ ஹதீஸ் எண்: 3.



“போர்வை போர்த்திருப்பவரே!

எழுவீராக! (அச்சுறுத்தி) எச்சரிப்பீராக!

உம் இரட்சகனைப் பெருமைப்படுத்தவும் செய்வீராக...!”[7]

சிலைவணக்கத்திலிருந்த மக்களை இறைவழிக்கு அழைக்கப் பணித்த முதல் வசனங்கள் இவை.

இதன் பின்னர் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) இறைவழியின்பால் மக்களை அழைக்கும் தம் பணியைத் தொடங்கினார்கள். இதன் பயனாக அன்னை கதீஜா, அலீ, அபூ பக்ர், ஜைத்(ரலி) முதலியோர் இஸ்லாமிய அழைப்பை ஏற்று சிலைவணக்கத்திலிருந்து விடு பட்டார்கள்.

பின்னர் மக்களை இறைவழியின்பால் வெளிப்படையாக அழைக்கு மாறு இறைவன் கட்டளையிட்டான்.

மக்காவில் ‘ஸஃபா’ என்னும் மலைக் குன்று ஒன்று இருக்கிறது. ஒருநாள் இறைத்தூதர்(ஸல்) அதன் மீது ஏறினார்கள்.

“உதவி! உதவி! அதிகாலை ஆபத்து!” எனக் கூவினார்கள்.

உடனே அவர்களை நோக்கி குறைஷியர் ஒன்றுகூடினர்.

“உங்களுக்கு என்ன (நேர்ந்தது)?” என மக்கள் கேட்டார்கள்.

“எதிரிகள், காலையிலோ, மாலையிலோ உங்களைத் தாக்குவதற்கு வருகிறார்கள் என நான் அறிவித்தால் என்னை நம்புவீர்களா?” என இறைத்தூதர்(ஸல்) கேட்டார்கள்.

“ஏனில்லை; (உறுதியாக நம்புவோம்)” என மக்கள் கூறினார்கள்.

“ஒரு கடினமான தண்டனைக்கு முன்பு நான் உங்களை எச்சரிக் கிறேன்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

உடனே, “உனக்கு நாசம் உண்டாகட்டும். இதைச் சொல்லத்தான் எங்களை இங்கே ஒன்று கூட்டினாயா?'' என அபூ லஹப் கேட்டான். இவன் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர்களில் ஒருவன்.[8]

இதன் பின்னர், இறைவன் ஒருவனை மட்டுமே வணங்கவேண்டும் என்ற ஏகத்துவப் பிரச்சாரத்திற்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர் என முஹம்மத்(ஸல்) அவர்களைப் புகழ்ந்துவந்த அதே மக்கள் இப்போது பைத்தியக்

7. திருக்குர்ஆன் 74:1-3.

8. காண்க: ஸஹீஹ் அல் புகாரீ ஹதீஸ் எண்: 4801.

காரர், பொய்யர், சூனியக்காரர் என்றெல்லாம் வசைபாடத் தொடங்கினார்கள். இறைவன் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும் என்ற ஏகத்துவப்பிரச்சாரம் வலுப்பட்டது. ஆனால், அதே வேளையில் எதிர்ப்பும் அதிகரித்துக் கொண்டே போனது. இருப்பினும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அதைக் கண்டு கொஞ்சமும் கலங்கவில்லை. மக்களின் மூடத்தனமான வாழ்க்கைக்கு எதிரான தம் பிரச்சாரத்தைத் தொடர்ந்தார்கள்.

இவர் எழுதப்படிக்கத் தெரியாதவர்; ஆடு மேய்த்தவர்; அநாதை. ஆனால், இவர் ஓதும் வசனங்கள் அரபுலகின் இலக்கணத் தரத்தின் உச்சத்திலும், இலக்கியங்களை விஞ்சியதாகவும், முற்றிலும் உண்மையாகவும் இருக்கிறதே என்பது அம்மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

இறைவன் - அவன் ஒருவனே. இறைவன் (எந்த ஒரு தேவைக்கும் அப்பாற்பட்டவன். அவன் (யாரையும் பிள்ளையாகப்) பெறவுமில்லை; (பிள்ளையாக யாராலும்) பெறப்படவுமில்லை. இன்னும், அவனுக்கு நிகராய் எவருமிலர் என (தூதரே) கூறும்![9] என்ற கட்டளையை இறைவன் பிறப்பித்தான்.

இவ்வசனங்கள் மூன்று வரிகளில் இறைவனை தெளிவாக அறிமுகம் செய்கின்றன. இறைவனைத் தவிர யாரையும் எதையும் வணங்கவே கூடாது என்ற ஏகத்துவச் சிந்தனையே அம்மக்கள் அனைவரையும் வியக்கவைத்தது.

இத்தோடு நின்றுவிடாமல் மரணத்திற்குப் பிறகு உள்ள மனிதனின் வாழ்க்கைக் குறித்தும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) கூறினார்கள். அந்த மக்களை அது வியக்கவைத்தாலும், இறைத்தூதர்(ஸல்) அவர்களை அவர்கள் பரிகசித்தார்கள்.

இக்கொள்கையை பலர் எதிர்த்தபோதிலும் ஏற்றுக் கொள்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றது. கொள்கையை ஏற்றவர்களில் எவரும் பின்வாங்கவில்லை. இவ்வாறு கொள்கையில் உறுதியாய் இருந்தவர்களை அந்த மக்கள் பல்வேறு வகையில் கொடுமைப்படுத்தினார்கள். அன்றைய கருப்பு அடிமையாய் இருந்த பிலால், அம்மார், சுமய்யா(ரலி) முதலியவர்களை இஸ்லாமை ஏற்றுக் கொண்ட ஒரே காரணத்திற்காக துன்புறுத்தினார்கள். சிலரை கொலையும் செய்தார்கள்; சிலரை இரண்டு துண்டுகளாப் பிளந்தும் போட்டார்கள். எத்தனை

9. காண்க: திருக்குர்ஆன் அத்தியாயம் 112.



கொடுமைகள் இருப்பினும் இஸ்லாமியக் கொள்கை வீறுநடை போட்டது.

அடுத்த கட்டமாக இறைவன் ஒருவனை மட்டுமே வணங்கவேண்டும் என்ற இப்பிரச்சாரத்தைத் தடுக்கும் பல்வேறு யுக்திகளில் இறைமறுப்பாளர்கள் இறங்கினார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை சமரசம் செய்ய முனைந்தார்கள்.

“என் வலக்கையில் சூரியனையும், இடக்கையில் நிலவையும் கொண்டுவந்து வைத்தாலும், என் கொள்கை வெற்றி பெறும் வரை அல்லது நான் மரணிக்கும் வரை இப்பிரச்சாரத்தைக் கைவிட மாட்டேன்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.[10]

நபித்தோழர்களுக்கு இறைமறுப்பாளர்களால் அக்கிரமங்கள் அதிகரித்தன. அவர்களை அபீஸீனியா (எத்தியோப்பியா)விற்கு புலம் பெயர்ந்து செல்லுமாறு இறைத்தூதர்(ஸல்) பணித்தார்கள். அந்நாட்டு மன்னரால் பிரச்னை ஏதும் வராது என இறைத்தூதர்(ஸல்) கருதினார்கள். அவ்வாறே இருந்தது. ஆனால், முஸ்லிம்கள் அங்கு நிம்மதியாக வாழ்வதை இறைமறுப்பாளர்களால் பொறுக்க முடியவில்லை. முஸ்லிம்களை அழித்தொழிக்கும் நோக்கில் அங்கும் சென்று அரசரிடம் முறையிட்டார்கள். அரசரின் விசாரணைக்குப் பின்னர் இறைமறுப்பாளர்கள் தம் முயற்சியில் தோல்வியுற்றவர்களாக மக்கா திரும்பினார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) ஏகத்துவப் பிரச்சாரத்தைத் தொடங்கிய பத்தாவது ஆண்டில் மிகக்கடுமையான பல சோதனைகளை எதிர்கொண்டார்கள். சமூகத்தால் ஊர்நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களுக்குப் பக்க பலமாய் இருந்த அவர்களின் பெரிய தந்தை அபூ தாலிப் மரணமடைந்துவிட்டார்; மனைவி கதீஜா(ரலி) அவர்களும் மரணமடைந்துவிட்டார்கள். இவ்வாறு கடுமையான சோதனைகள் நிகழ்ந்தன. வரலாற்றில் இந்த ஆண்டை ‘சோதனை ஆண்டு’ எனக் குறிப்பிடுகிறார்கள்.

எவ்வளவோ சோதனைகளைத் தாங்கியும் மக்கள் இஸ்லாமை ஏற்கவில்லை என்பதால் இப்போது இறைத்தூதர்(ஸல்) தம் பிரச்சாரத்தை அண்டை நாடான தாயிஃப் பக்கம் திருப்பினார்கள். அம்மக்களோ அவர்களை கல்லால் அடித்துத் துன்புறுத்தினார்கள். அப்போது வானவர் ஜிப்ரீல்(அலை) அங்கே வந்தார்கள்.

10. இப்னு ஹிஷாம் (வரலாற்று நூல்)

"இந்த தேசத்தின் இருபக்கமும் உள்ள மலைகளை மோதச்செய்து அந்த மக்களை அழித்துவிடவா?" என இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் கேட்டார்கள்.

"வேண்டாம்! சத்தியத்தை இவர்கள் ஏற்காவிட்டாலும் இவர்களின் சந்ததிகள் ஏற்றுக் கொள்ளக் கூடும்" என இறைத்தூதர்(ஸல்) கூறிநார்கள்.[11]

இப்படிப்பட்ட சோதனைகள் மிகுந்த சூழலில் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு 'மிஃராஜ்' எனும் விண்வெளிப் பயணம் நிகழ்ந்தது.

ஓர் இரவில் இறைவன் தம் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை மக்காவின் கஅபாவிலிருந்து ஜெருசலத்திலுள்ள **'மஸ்ஜிதுல் அக்ஸா'** எனும் இறையில்லத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கிருந்து ஜிப்ரீல்(அலை) அவர்களின் மூலம் **'புராக்'** எனும் ஒரு வாகனத்தில் விண்வெளிக்கும் இறைவன் அழைத்துச் சென்றான். அங்கு பல நிகழ்வுகள் நடந்தன. இறுதியாக ஐவேளைத் தொழுகை கடமையாக்கப்பட்டது. பின்னர் அவர்களை அதே இரவில் அவர்களின் இல்லத்திற்கு இறைவன் திருப்பினான்.[12]

இந்நிகழ்வை இறைத்தூதர்(ஸல்) கூறியதும், இறைமறுப்பாளர்கள் மேலும் நகைக்க ஆரம்பித்தார்கள். நாளுக்கு நாள் எதிர்ப்பு வலுத்துக் கொண்டே போனது. இந்நிலையில் இறைவனின் அடுத்த கட்டளை வந்தது.

இறைத்தூதர்(ஸல்) மக்காவிலிருந்து சுமார் 250 மைல் தொலை விலுள்ள மதீனாவிற்குப் புலம் பெயர்ந்தார்கள். இதற்கு **ஹிஜ்ரா** என்று பெயர். இஸ்லாமிய மறுமலர்ச்சியின் ஆண்டுக் கணக்கு **ஹிஜ்ரி** என்பது இதிலிருந்துதான் துவக்கப்பட்டது.

ஹிஜ்ரத்திற்கு முன்னதாகவே ஹஜ்ஜுக்கு வந்த மதீனாவின் ஒரு குழு இஸ்லாமை ஏற்றுக்கொண்டது. இறைத்தூதர்(ஸல்) அவர்களை மதீனாவிற்கு வருமாறும் அழைத்தது. அங்கு அவர்களை தம் மனைவி மக்களைவிட அதிக அக்கறையுடன் பாதுகாப்பதாகவும் வாக்களித்தது. இந்தக் குழு மதீனாவில் இஸ்லாமிய பிரச்சாரம் செய்தும்வந்தது. இந்நிலையில்தான் இறைத்தூதர்(ஸல்) மதீனா விற்குப் புலம்பெயர்ந்தார்கள். மக்காவிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள்

11. இப்னு ஹிஷாம் (வரலாற்று நூல்)

12. காண்க: ஸஹீஹ் அல் புகாரீ ஹதீஸ் எண்: 3393.



அனைவரும் **'முஹாஜிர்கள்'**, மதீனா வாழ் மக்கள் **'அன்ஸாரிகள்'** என அழைக்கப்பட்டார்கள்

## அன்றைய மதீனா

அன்று மதீனா ஒரு தனி தேசம். ஆனால், அங்கு ஓர் அரசு இல்லை; முறையான நிர்வாகமும் இல்லை. மக்கள் தனித்தனிக் குழுக்களாக வாழ்ந்து வந்தார்கள். **'அவ்ஸ்'** மற்றும் **'கஸ்ரஜ்'** ஆகியவை மதீனாவின் பெரும் கோத்திரங்கள். இவர்கள் தவிர இவர்களைச் சார்ந்த பத்து பிரிவுகள் இருந்தன. அங்கு கிருத்தவர்களும் யூதர்களும் வாழ்ந்து வந்தார்கள். யூதர்கள் அந்நாட்டின் வந்தேறிகள். அவர்கள் மதீனாவின் பூர்வீக மக்களுக்குக் கட்டுப்பட்டு வாழவேண்டிய சூழல் இருந்தது. அவர்களுக்கு நிரந்தரக் குடியுரிமை மறுக்கப் பட்டிருந்தது. இத்தனை பிரிவுகளுக்குள் அடிக்கடி போர் மூழ்வது வழக்கமாய் இருந்தது. அப்போது,

**"எங்களுக்காக இறைவனின் இறுதித்தூதர் ஒருவர் வருவார் அவரின் உதவியால் உங்களை நாங்கள் வெல்வோம்" என யூதர்கள் கூறுவதும் வழக்கமாய் இருந்தது.** இவர்களின் அச்சுறுத்தல் ஒருவகையில் மதீனாவாசிகளுக்கு இறைத்தூதரின் வருகையை முன்னறிவிப்புச் செய்துவிட்டது.

## மதீனாவில் இஸ்லாமிய அரசு அமைத்தல்

மதீனாவில் இஸ்லாமை ஏற்றுக் கொண்ட முஸ்லிம்களும், முஸ்லிம் அல்லாத மதீனா வாழ் மக்களும், கிருத்தவர்களும், யூதர்களும் இறைத்தூதர்(ஸல்) அவர்களை நாட்டின் அதிபராய் ஏற்றுக் கொண்டார்கள். இதன் தலைமை பீடமாக மதீனாவின் இறையில்லம் (மஸ்ஜிதுன் னபவீ) அமைந்தது. அப்போது இறைத் தூதர்(ஸல்) அரசியல் சாசனம் ஒன்றை முன்மொழிந்தார்கள். மொழி, இனம், குலம், தேசம், மதம் ஆகிய பிரிவினைகளைக் கடந்து உலக அமைதியையும், உலகளாவிய சகோதரத்துவத்தையும் வலி யுறுத்தியது. காரணம், அந்த அரசியல் சாசனம் முழுக்க முழுக்க இறைச்சட்டங்களின்படியே அமைந்திருந்தது.

## அடிப்படைச்சட்டம்

இறைத்தூதர்(ஸல்) முன்மொழிந்த அச்சட்டம்,

- தேசத்தின் அமைதிக்கு உத்திரவாதம் அளித்தது.
- வெளியிலிருந்து வரும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக தேசத்தின் பாதுகாப்புக்கு உறுதியளித்தது.
- ஒழுக்கக் கேடான, தீய காரியங்கள் அனைத்தும் தடை

செய்யப்பட்டன. மனித உரிமைகள் பேணப்பட்டு நீதி நிலைநிறுத்தப்பட்டது.

இஸ்லாமிய வாழ்க்கைநெறி குறித்த இறைச்சட்டங்கள் மதீனாவில் முழுமையாக வழங்கப்பட்டன. இறைத்தூதர்(ஸல்) அந்த மக்களுக்கு அளித்த வாழ்க்கைநெறி அவர்களை முழுமையாக மாற்றியமைத்தது.

இப்படிப்பட்ட உலகின் மிகச்சிறந்த முன்மாதிரி மிக்க ஒரு சமுதாயத்தைத்தான் இறைமறுப்பாளர்கள் அழித்தொழிக்கத் துடித்தார்கள். மதீனாவில் இந்த முன்மாதிரியான சமுதாயத்தை இறைமறுப்பாளர்கள் நிம்மதியாக வாழவிடவில்லை. அவர்களின் மீது போர் தொடுத்தார்கள். அப்போது இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) தற்காப்பு நடவடிக்கையை மேற்கொண்டார்கள்.

மக்கா தேசத்தில் வாழ்ந்த இறைமறுப்பாளர்கள் மதீனாவில் வாழ்ந்துவந்த இறைநம்பிக்கையாளர்களையும் அந்த தேசத்தையும் அழிப்பதற்கு மாபெரும் படையுடன் போருக்காக புறப்பட்டு வந்தபோது இறைவன் பின்வரும் வசனத்தை அருளினான்

“போர் தொடுக்கப்பட்டோர் அக்கிரமம் இழைக்கப்பட்டிருக் கிறார்கள் என்பதால் (தற்காப்பான போருக்கு) அனுமதி அளிக்கப் பட்டிருக்கிறது. அவர்களுக்கு உதவ ஏக இறைவனே ஆற்றல் மிக்கவன்.”[13]

பத்ரு எனும் இடத்தில் வெறும் 313 முதல் 320 நபர்களுடன் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அப்படையை எதிர்கொண்டு போரிட்டார்கள். இறைநம்பிக்கையாளர்களுக்கு இறைவன் வெற்றியைக் கொடுத்தான். மக்காவில் இறைநம்பிக்கையாளர்களைக் கொடுமைப்படுத்திய பலர் இப்போரில் மாண்டனர்.

சிறிது காலத்திற்குப் பின்னர் மக்காவாழ் இறைமறுப்பாளர்கள் மீண்டும் போர் தொடுத்தார்கள். அந்தப் போர் மதீனாவின் எல்லைப் பகுதிக்கு அப்பால் மதீனா நகருக்கு அடுத்துள்ள உஹத் எனும் மலையடிவாரத்தில் நடந்தது. ஆரம்பத்தில் மதீனா இராணுவத்திற்கு வெற்றி கிடைத்தது. இடையில் சற்று கவனமின்மையால் மதீனா இராணுவம் கடுமையான இழப்புக்குள்ளானது. இறுதியில் மதீனாவின் இஸ்லாமிய இராணுவத்திற்கே வெற்றி கிடைத்தது. எதிரிப்படைகள் பின்வாங்கி ஓடிப்போயின.

13. காண்க: திருக்குர்ஆன் 22:39.



இப்போரில், மதீனாவில் வாழ்ந்த யூதர்களும், நயவஞ்சகர்களும் தேசிய சட்டத்தை மீறி மதீனா இராணுவத்திற்கு எதிராய் எதிரிப் படைக்கு உதவினார்கள்.

தொடர்ந்து பல போர்கள் திணிக்கப்பட்டன. இவற்றில் அகழ்ப் போர் குறிப்பிடத்தக்கது.

மதீனாவின் இஸ்லாமிய அரசை அழிப்பதற்காக யூதர்களையும் உள்ளடக்கிய பத்தாயிரம் பேர் கொண்ட படை ஒன்று விரைந்தது. அது மதீனாவை முற்றுகையிட்டது. அப்போது நபித்தோழர்களில் ஒருவரான ஸல்மான் ஃபார்ஸி(ரலி) அவர்களின் ஆலோசனைப்படி மதீனாவைச் சுற்றி அகழ் தோண்டினார்கள். இதனால் எதிரிப்படை ஒரு மாதகாலம் முற்றுகைக்குப் பின்னர் பலனின்றி திரும்பினார்கள்.

## ஹுதய்பிய்யா உடன்படிக்கை

ஹிஜ்ரி ஆறாம் ஆண்டில் மதீனா தேசத்தின் அதிபர் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கும், இதுவரை அவர்களுக்கு எதிராக போரிட்ட மக்கா தேச இறைமறுப்பாளர்களுக்கும் இடையில் ‘ஹுதய்பிய்யா’ என்னும் இடத்தில் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது.

இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் முஸ்லிம் சமுதாயத்திற்கு எதிராகவே அமைந்திருந்தன. இருப்பினும் இறைவனின் கட்டளைப் படி அவற்றை இறைத்தூதர்(ஸல்) ஒப்புக்கொண்டார்கள். இது வரையில் தோல்வியைத் தழுவியிராத ஒரு தளபதி போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு சம்மதம் தெரிவித்தது உலக வரலாற்றில் இதுவே முதன்முறை எனலாம்.

## நிபந்தனைகள்

- “பத்தாண்டுகளுக்குப் போர் நிறுத்தி வைக்கப்படுகிறது.”
- “முஹம்மத் அவர்களோடு ஒப்பந்த உறவுகளை வைத்துக் கொள்ள விரும்புவோர், அவ்வாறு செய்து கொள்ளலாம். அதுபோன்றே, மக்காவாசிகளோடு அப்படிப்பட்ட உறவுகளை வைத்துக்கொள்ள விரும்புவோர், அவ்வாறு செய்து கொள்ளலாம். இதற்கு முழுச்சுதந்திரம் உண்டு.”
- “ஒரு நபர் அவரின் பொறுப்பாளரின் அனுமதியின்றி முஹம்மத் அவர்களிடம் செல்வாரானால் அவர் தன் பொறுப்பாளரிடமே திருப்பி அனுப்பப்படுவார். ஆனால், முஹம்மத் அவர்களைப் பின்பற்றுவோர் எவரேனும் மக்காவாசிகளிடம் வந்துவிட்டால் அவர் (மதீனாவிற்குத்) திருப்பி அனுப்பப்படமாட்டார்.”

இந்த ஒப்பந்தத்திற்குப் பின்னர் மக்காவாசிகள் மதீனாவிற்கும் மதீனாவாசிகள் மக்காவிற்கும் வந்து செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. இஸ்லாமிய வளர்ச்சிக்கு இது ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

## மன்னர்களுக்கு அழைப்பு

'ஹுதய்பிய்யா' உடன்படிக்கைக்குப் பின்னர் இறைத்தூதர்(ஸல்) அன்றைய வல்லரசுகளுக்கு இஸ்லாமின்பால் அழைப்பு விடுத்தார்கள். தம் நாட்டுத் தூதர்களின் மூலம் இறைத்தூதைக் கடிதமாகக் கொண்டு சென்றார்கள்.

அக்கடிதத்தின் இறுதியில்,

"வேதக்காரர்களே! நாம் ஏக இறைவனைத் தவிர வேறு எதையும் வணங்கமாட்டோம். அவனுக்கு எதையும் இணைவைக்க மாட்டோம். ஏக இறைவனை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுளர்களாக எடுக்க மாட்டோம் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பொது வான வாக்கியத்தின்பால் வாருங்கள்!"[14] எனும் வசனம் இணைக் கப்பட்டிருந்தது. இது ஒரு பொதுவான அழைப்பாய் இருந்தது.

## ஒப்பந்தம் முறிதல்

'ஹுதய்பிய்யா' ஒப்பந்தம் கையெழுத்தாகி இரண்டே ஆண்டுகளில் மக்காவின் இறைமறுப்பாளர்கள் பல முறை அந்த ஒப்பந்தத்தை மீறினார்கள். இறுதியாக மதீனாவைச் சார்ந்தோரின் பல உயிர்ச் சேதங்களுக்குப் பின்னர் மக்காவின் மீது போர்தொடுக்கும் கட்டாயத்திற்கு இறைத்தூதர்(ஸல்) தள்ளப்பட்டார்கள். பத்தாயிரம் பேர்கொண்ட படையுடன் மக்கா நோக்கிப் புறப்பட்டார்கள். யுத்தமின்றி மக்கா கைப்பற்றப்பட்டது. மனிதகுல வரலாற்றில் ஒரு தேசம் அமைதியாகக் கைப்பற்றப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

இறைத்தூதர்(ஸல்) உயிராய் நேசித்த அவர்களின் தோழர்களைக் கடுமையாகக் கொடுமைப்படுத்தி கொலை செய்த ஒவ்வொரு வருக்கும்கூட அன்று பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. குறிப்பாக இறைத்தூதரின் பால்குடிச் சகோதரரும், நெருங்கிய நண்பரும், பெரிய தந்தையுமான ஹம்ஜா(ரலி) அவர்களைக் கொன்று, ஈரலைக் கடித்துத் துப்பிய ஹிந்தா என்ற பெண்மணிக்கும், அவரின் அடிமை வஹ்ஷி என்பவருக்கும்கூட மன்னிப்பு வழங்கப்பட்டது.

ஏக இறைவனை மட்டும் வணங்கவேண்டிய இறைஇல்லம் சிலை களால் களங்கப்படுத்தப்பட்டிருந்தது. சிலைகள் அனைத்தையும் இறைத்தூதர்(ஸல்) அகற்றினார்கள். மக்காவைச் சுற்றி இருந்த அனைத்துச் சிலைகளையும் அகற்றினார்கள்.

14. காண்க: திருக்குர்ஆன் 3:64 .



சத்தியம் வந்தது அசத்தியம் அழிந்தது அசத்தியம் அழியக்கூடியதே![15]

அடிமையாய் இருந்து இஸ்லாமை ஏற்ற பிலால்(ரலி) அவர்களுக்கு மாபெரும் பொறுப்பு ஒன்றை இறைத்தூதர்(ஸல்) கொடுத்தார்கள். அது பாங்கு என்னும் தொழுகைக்காக மக்களை அழைக்கும் பொறுப்பாகும். இந்தப்பொறுப்பை நிறைவேற்றியவர் மறுமையில் சிறப்பு மிக்கவராக கழுத்து உயரமாக்கப்பட்டு மக்களில் உயர்ந்த வராக இருப்பார். நீண்ட இடைவேளைக்குப்பின் கஅபாவில் ஏகத்துவம் மிளிர்ந்தது.

இம்மாபெரும் வெற்றிக்குப் பின்னரும் இறைத்தூதர்(ஸல்) இறைக் கட்டளைப்படி மதீனாவிற்கே திரும்பினார்கள். இதன் பின்னர் தான் ஏகத்துவ ஒளி முழு அரபகத்திலும் மிளிரத் தொடங்கியது.

## குடும்ப வாழ்க்கை

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தங்களின் கடினமான அரசியல் வாழ்க்கைக்கு இடையில் சிறந்த குடும்பத் தலைவராகவும் திகழ்ந் துள்ளார்கள். அவர்களுக்கு இணையான குடும்பத் தலைவரைப் பார்க்கமுடியாது. குடும்ப அமைப்பு குறித்த அவர்களின் அறிவுரையும் ஈடு இணையற்றது.

"...தங்கள் மனைவியரிடம் சிறந்தவர்களே உங்களில் சிறந்தவர்கள்" என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.[16]

இறைத்தூதர்(ஸல்) தங்களின் இளமைக் காலம் முழுவதையும் தம்மைவிட பதினைந்து வயது மூத்தவரான கதீஜா(ரலி) அவர் களுடன் கழித்தார்கள். அவர்கள் சிறந்த குடும்பத்தலைவர் என்பதை அறிந்திருந்ததால் அன்னை கதீஜாவின் மரணத்திற்குப் பின்னர் இறைத்தூதரின் உற்ற நண்பர்களான அபூ பக்ர், உமர்(ரலி) ஆகியோர் தம் புதல்வியைத் திருமணம் செய்து கொடுத்தார்கள்.

தம்மைவிட வயதில் மூத்தவரான கதீஜா(ரலி) அவர்களுடனும், தம்மைவிட மிகச்சிறுவயதுடைய ஆயிஷா(ரலி) அவர்களுடனும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்து முன்மாதிரியாய்த் திகழ்ந்தார்கள்.

இறைத்தூதர்(ஸல்) திருமணம் செய்த பெண்களில் அன்னை ஆயிஷா(ரலி) அவர்களைத் தவிர மற்ற அனைவரும் ஏதோ ஒரு வகையில் கணவனை இழந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

15. காண்க: ஸஹீஹ் அல் புகாரீ ஹதீஸ் எண்: 1664, 4287.

16. நூல்: திர்மிதீ, ஹதீஸ் எண்: 1172

அவர்களின் முதல் மனைவி கதீஜா(ரலி) அவர்களும் விதவை என்பதை முன்னர் குறிப்பிட்டுள்ளோம்.

இஸ்லாமிய வாழ்க்கைநெறி மனித குலத்திற்கு வெளிச்சமாகும் பொருட்டு இறைத்தூதர்(ஸல்) அவர்களின் இல்லற வாழ்க்கையும் ஒளிவுமறைவின்றி பதிவு செய்யப்பட்டுள்ளது.

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் தனிப்பட்ட, சமூக, அரசியல் வாழ்க்கை முழுவதுமே மனித குலம் முழுமைக்கும் ஒரு முன் மாதிரியாய் அமைந்துள்ளது.

இறைத்தூதரிடம் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது.[17]

## இறுதி நாள்கள்...

மதீனாவில் இஸ்லாமிய அரசை நிறுவியதோடு இறைத்தூதர்(ஸல்) அனுப்பட்ட நோக்கம் பெருமளவு நிறைவேறியது. ஹிஜ்ரி பத்தாவது ஆண்டு (கி.பி. ஏழாம் நூற்றாண்டில்) இறைத்தூதரின் வாழ்க்கை இறுதி நாள்களை நோக்கி நகர்ந்தது. இஸ்லாமின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்காக இறைத்தூதர்(ஸல்) மக்காவிற்கு வந்தார்கள். மக்காவின் அரஃபா மற்றும் மினா மைதானங்களில் மக்களிடையே உரை நிகழ்த்தினார்கள். மனித குலம் முழுமைக்கும் உலகின் இறுதிநாள் வரை மாற்றியமைக்க முடியாத உரிமைப் பிரகடனமாய் அவ்வுரை அமைந்தது. இதை அரஃபா உரை எனக் குறிப்பிடுகிறார்கள்.

### அரஃபா உரை

புகழனைத்தும் ஏக இறைவனுக்கே! அவனைப் புகழ்கிறோம்; அவனிடமே உதவி தேடுகிறோம்; அவனிடமே பாவமன்னிப்புக் கோருகிறோம். நம் மனோ இச்சைகளின் கெடுதியைவிட்டும், நம் செயல்களின் தீங்கைவிட்டும் அவனிடமே காவல் தேடுகிறோம். யாருக்கு ஏக இறைவன் நேர்வழி காட்டியுள்ளானோ அவரை வழிகெடுப்பவர் எவருமிலர்; யாரை அவன் வழிகெடுத்து விட்டானோ அவருக்கு நேர்வழி காட்டுபவர் எவருமிலர். ஏக இறைவனைத் தவிர வேறு கடவுள் இல்லை. அவன் தனித்தவன்; அவனுக்கு இணை ஏதுமில்லை என நான் சாட்சியளிக்கிறேன். முஹம்மத் அவனுடைய அடியாரும் தூதருமாய் இருக்கிறார் என்றும் நான் சாட்சியளிக்கிறேன்.[18]

17. காண்க: திருக்குர்ஆன் 33:21.

18. அல் பிதாயா - இப்னு கஸீர் 5/189



மக்களே! என் பேச்சைக் கவனமாகக் கேளுங்கள்! இவ்வாண்டிற்குப் பின்பு மீண்டும் உங்களை இவ்விடத்தில் சந்திப்பேனா என்பது எனக்குத் தெரியாது.[19]

மக்களே உங்களின் இறைவன் ஒருவனே! ஓர் அரபிக்கு அரபி அல்லாத ஒருவரைவிடவோ, அரபி அல்லாத ஒருவருக்கு ஓர் அரபியைவிடவோ மேன்மையோ சிறப்போ இல்லை. ஒரு வெள்ளையருக்கு ஒரு கருப்பரைவிடவோ, ஒரு கருப்பருக்கு வெள்ளையரைவிடவோ சிறப்பேதும் இல்லை. இறையச்சமே ஒருவரின் மேன்மையை நிர்ணயிக்கும். நிச்சயமாக ஏக இறைவனிடம் உங்களில் மிகச்சிறந்தவர் உங்களில் இறையச்சம் அதிகமாய் உள்ளவரே.[20]

மக்களே ஏக இறைவனை அஞ்சுங்கள்! அடிமையான கருப்பர் ஒருவர் உங்களுக்கு தலைவராய் ஆக்கப்பட்டாலும், அவர் இறைவேதத்தைக் கொண்டு உங்களை வழிநடத்தி அதை உங்களுக்கிடையில் நிலைநிறுத்தும் காலமெல்லாம் அவருக்கு செவியுறுங்கள்; கீழ்படியுங்கள்.[21]

மக்களே! இந்த (துல்ஹஜ்) மாதமும், இந்த நாளும் (துல் ஹஜ் 9ஆம் நாளும்) இந்த நகரமும் (மக்கா நகரமும்) எந்த அளவிற்குப் புனிதமானவையோ அதே அளவிற்கு உங்கள் உயிர்களும், உடைமையும், மானமும், மரியாதையும் உங்களுக்குப் புனிதமானவையே.[22]

அறிந்து கொள்ளுங்கள்! எனக்குப் பின்பு ஒருவரையொருவர் கழுத்தை வெட்டிக் கொண்டு வழிகெட்டவர்களாக இறைமறுப்பாளர்களாக மாறிவிடாதீர்கள்.

உங்களின் இறைவனை நீங்கள் சந்திக்கும் வரை (நீதியில் நிலைத்திருங்கள்). நீங்கள் அனைவரும் இறைவனின் முன்னிலையில் ஒன்று சேர்க்கப்படுவீர்கள். அப்போது உங்களின் செயல்கள் குறித்து இறைவன் விசாரிப்பான். மார்க்கத்தைத் தெளிவாக உங்களுக்கு எடுத்துரைத்துவிட்டேன். உங்களில் ஒருவர் பிறரின் பொருளுக்குப் பொறுப்பேற்றிருந்தால் அதன் உரிமையாளரிடம் உரிய முறையில் ஒப்படைத்துவிடட்டும்.[23]

19. இப்னு மாஜா 1892,1893

20. அஸ் ஸில்லதுஸ் ஸஹீஹா 2700, அத் தர்கீப் வத் தர்ஹீப் 2963, பைஹகீ.

21. நஸாயீ 4192, திர்மிதீ 1706.

22. ஸஹீஹ் அல் புகாரீ 1741, 1742. ஸஹீஹ் முஸ்லிம் 2334.

23. ஸஹீஹ் அல் புகாரீ 4406,

மக்களே! முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்களே! உங்களின் அடிமைகள் விஷயத்தில் பொறுப்புடன் நடந்துகொள்ளுங்கள்! அவர்களைச் சீராகப் பராமரியுங்கள்! நீங்கள் உண்பதுபோல அவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள்; நீங்கள் உடுத்துவது போல அவர்களுக்கும் உடுத்தக் கொடுங்கள்!

குறைஷிகளே! மறுமைக்கான தயாரிப்புடன் நாளை மக்கள் வரும்போது, உலகச் சுமைகளை உங்களின் பிடரியின் மீது சுமந்தவர்களானக வராதீர்கள்! அப்போது எந்த விஷயத்திலும் இறைவன் புறத்திலிருந்து உங்களுக்கு பாதுகாப்பு அளிப்பவனாக நான் இருக்கமாட்டேன்.

அறியாமைக் கால விவகாரங்கள் அனைத்தும் என் கால்களுக்குக் கீழே புதைக்கப்பட்டுவிட்டன. அறியாமைக் காலத்தில் நிகழ்ந்த கொலைகளுக்குப் பழிவாங்குதல் அனைத்தும் ரத்துச்செய்யப் பட்டுவிட்டன. நம்மிடைய நடந்த கொலைகளில் ரபீஆ இப்னு ஹாரிஸின் மகன் கொலை செய்யப்பட்டதற்கான பழிவாங்குதலை முதலில் நான் தள்ளுபடி செய்கிறேன். - பனூ ஸஅத் குலத்தாரிடம் அவன் பால்குடிச் சிறுவனாக இருந்துவந்தான். அவனை ஹுதைல் குலத்தார் கொன்றுவிட்டனர்- அறியாமைக் காலத்தில் இருந்த வட்டியும் என் பாதங்களுக்குக் கீழே புதைக்கப்படுகிறது. நம்மவர் கொடுத்திருந்த வட்டியில் அப்பாஸ் இப்னு அப்துல் முத்தலிப்புக் குரிய வட்டியை முதலாவதாக நான் தள்ளுபடி செய்கிறேன். அவருக்குரிய வட்டி அனைத்தும் அசலுடன் தள்ளுபடி செய்யப் படுகின்றன.[24]

மக்களே! சொத்தில் ஒவ்வொருவருக்கும் அவரவரின் உரிமையை இறைவன் வழங்கியுள்ளான். இனி எவரும் தன் வாரிசுகளுக்கு உயில் எழுதக்கூடாது.

அறிந்து கெள்ளுங்கள்! குழந்தை விரிப்புக்கே சொந்தமானது.

திருமணத்திற்குப் பின்பு ஒரு பெண் விபச்சாரம் செய்து அதன் மூலம் குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தை திருமணம் முடித்துள்ள ஆணுக்கே உரியதாகும்.

திருமணத்திற்குப் பிறகும் விபச்சாரத்தில் ஈடுபடுபவர் கல்லெறிந்து கொல்லப்படவேண்டும்.

தந்தை அல்லாத ஒருவரை தம் தந்தையாக அழைப்பவரின் மீதும், தம் எஜமானனுடன் தன்னை இணைத்துக் கொண்டவரின் மீதும்

24. ஸஹீஹ் முஸ்லிம் 2334. இப்னு மாஜா 3055. திர்மிதீ 3078.



ஏக இறைவன், வானவர்கள் மற்றும் மக்கள் அனைவரின் சாபமும் உண்டாகட்டும். அவர்களின் கடமையான உபரியான எந்த வணக்கமும் ஏற்றுக் கொள்ளப்படாது.[25]

ஒரு பெண் கணவனின் வீட்டிலிருந்து அவனுடைய அனுமதி இல்லாமல் எதையும் செலவிடக்கூடாது.

“உணவையுமா” என அப்போது கேட்கப்பட்டது.

“ஆம்! அதுதான் நம்முடைய செல்வங்களில் மிகச் சிறந்தது” என்று இறைத்தூதர்(ஸல்) பதிலளித்தார்கள்.[26]

இரவலாக வாங்கப்பட்ட பொருள் உரியவரிடமே ஒப்படைக்கப் படவேண்டும். பாலைக் கொண்டு பயன்பெற அளிக்கப்பட்ட கால்நடைகள் (பயன்பெற்றப்பின்னர்) உரிமையாளரிடமே திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். இழப்பீடு நிறைவேற்றும் பொறுப்பு தலைவனையே சாரும்.[27]

மக்களே கவனியுங்கள்! பெண்கள் விஷயத்தில் ஏக இறைவனை அஞ்சிக் கொள்ளுங்கள். அவர்களுக்கு நன்மையே நாடுங்கள். அவர்கள் உங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள்! ஏக இறைவனின் அமானிதமாக அவர்களைப் பெற்றுள்ளீர்கள். உங்களின் மனைவியர் மீது உங்களுக்கு உரிமைகள் இருப்பதுபோலவே உங்கள் மீதும் அவர்களுக்கு உரிமைகள் உள்ளன. நீங்கள் விரும்பாத வர்களை அவர்கள் உங்களின் வீடுகளுக்குள் அனுமதிக்காதிருப்பது அவர்களின் கடமையாகும். மானக்கேடான காரியங்கள் செய்யாமல் இருக்கவேண்டும். அவர்கள் குற்றம் இழைத்தால் அவர்களைத் தண்டிக்கிற உரிமை உங்களுக்கு உண்டு. அதாவது அவர்களை உங்களின் படுக்கையைவிட்டு ஒதுக்கிவையுங்கள்! காயம் ஏற்படாத வகையில் இலேசாக அடியுங்கள்; அவர்கள் தங்களின் தவறிலிருந்து விலகிக்கொண்டால் அவர்களுக்கு முறையாக உணவும் உடையும் அளியுங்கள்! அவர்களுக்கு நன்மையையே நாடுங்கள்!

ஏனெனில் உங்களிடம் உங்களின் உதவியாளர்களாகவும், உங்களையே சார்ந்தவர்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து அதைத் தவிர (பாலுறவு கொள்வதைத் தவிர) வேறுஎதையும் உரிமையாகக் கொள்ளமாட்டீர்கள். ஏக இறைவனின்

25. நஸாயீ 3642, அபூ தாவூத் 2870.

26. அபூ தாவூத் 3565.

27. அபூ தாவூத் 3565. திர்மிதீ 2120.

பெயரை முன்மொழிந்து அவர்களுடன் மணவாழ்க்கை ஒப்பந்தம் செய்துள்ளதை நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள்.[28]

மக்களே! நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். என் பேச்சைக் கவனமாகக் கேளுங்கள். என்னுடைய பிரச்சாரத்தை உங்களுக்கு எடுத்துரைத்துவிட்டேன். உங்களிடையே இறைவேதத்தையும், அவனுடைய தூதரின் வழிமுறையையும் விட்டுச் செல்கிறேன். அவற்றை நீங்கள் பின்பற்றினால் வழிதவறமாட்டீர்கள்.[29]

மக்களே! உங்களின் இந்நகரத்தில், தான் வணங்கப்படுவது குறித்து ஷைத்தான் நம்பிக்கை இழந்துவிட்டான். இருப்பினும் அவன் மகிழும் விதமாக அற்பமாக நீங்கள் கருதும் சில விஷயங்களில் அவனுக்குக் கீழ்ப்படிவீர்கள். எனவே உங்களின் மார்க்க விஷயத்தில் அவனிடம் எச்சரிக்கையாய் இருங்கள்.[30]

(பிற்காலத்தில் தோன்றும் பெரும் பொய்யன்) அல் மஸீஹுத் தஜ்ஜால் குறித்து எச்சரிக்கிறேன். இறைவன் அனுப்பிய இறைத் தூதர்களில் எவரும் தம் சமுதாயத்தாரை தஜ்ஜால் குறித்து எச்சரிக்காமல் இருந்ததில்லை. இறைத்தூதர் நூஹ்(அலை) அவனைப் பற்றி எச்சரித்தார்கள். அவர்களுக்குப் பின்னால் வந்த இறைத்தூதர்களும் (அவனைக் குறித்து) எச்சரித்தார்கள்.

அவன் (இறுதிகாலத்தில்) தோன்றுவான். அவன் தன்மைகளில் ஏதேனும் சில உங்களுக்குப் புலப்படாமல் போனாலும், உங்களின் இறைவன் உங்களுக்குத் தெரியாதவனல்ல என்பது உங்களுக்கு நன்றாகவே தெரியும். இதை மும்முறை கூறினார்கள். உங்களின் இறைவன் ஒற்றைக் கண்ணன் அல்ல. அவனோ (தஜ்ஜாலோ) வலக்கண் குருடானவன். அவன் கண் (ஒரே குலையில்) துருத்திக் கொண்டிருக்கும் திராட்சையைப்போல இருக்கும்.[31]

அந்நஸீ (மாதத்தின் நாள்களை முன்பின் ஆக்குதல்) இறைமறுப்பை அதிகரிக்கும் செயலாகும். இதனால் இறைமறுப்பாளர்களே வழிகெடுக்கப்படுகிறார்கள். அவர்களே ஒரு மாதத்தின் நாள்களை முன்பின் ஆக்கி ஓர் ஆண்டில் அம்மாதங்களில் போரிடுவதை ஆகுமாக்கிக் கொள்கிறார்கள். மற்றோர் ஆண்டில் அதே மாதத்தில் போரிடுவது கூடாது என தடுத்துக் கொள்கிறார்கள். தாங்கள்

28. ஸஹீஹ் முஸ்லிம் 2334. திர்மிதீ 1163, 3087.

29. ஸஹீஹ் முஸ்லிம் 2334. இப்னு மாஜா 3074.

30. முஸ்தத்ரகுல் ஹாகிம்.

31. ஸஹீஹ் அல் புகாரீ 4402.



தடுத்திருக்கும் மாதங்களின் எண்ணிக்கையை இறைவன் தடுத்துள்ள மாதங்களின் எண்ணிக்கைக்கு சரியாய் ஆக்கி இறைவன் தடுத் திருக்கும் மாதங்களையும் தாங்கள் ஆகுமானதாய் ஆக்கிக்கொள்வ தற்காகத்தான் இவ்வாறு செய்கிறார்கள்.[32]

அறிந்து கொள்ளுங்கள்! வானங்களையும் பூமியையும் இறைவன் படைத்த நாளிலிருந்தே அதன் அமைப்புப்படி இப்போதும் காலம் சுற்றிவருகிறது. ஏக இறைவனிடம் மாதங்களின் எண்ணிக்கை பனிரெண்டாகும். வானங்களையும் பூமியையும் இறைவன் படைத்த அன்று இவ்வாறுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை. அவை துல் கஅதா, துல் ஹஜ் மற்றும் முஹர்ரம். நான்காவது ரஜப் மாதமாகும்.[33]

ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்கு சகோதரர் ஆவார். முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்களே! மனமுவந்து கொடுத்தால் தவிர, ஒரு முஸ்லிமின் பொருள் மற்றொரு முஸ்லிமுக்கு ஆகுமானதன்று. உங்களுக்கே நீங்கள் அநீதி இழைத்துக் கொள்ளாதீர்கள்.[34]

மக்களே! உங்களின் இறைவனை வணங்குங்கள்! அவனையே அஞ்சுங்கள்! கடமையான ஐவேளைத் தொழுகையைத் தவறாது பேணுங்கள்! நோன்பு நோற்றுவாருங்கள்! மனமுவந்து ஸகாத் கொடுத்துவாருங்கள்! இறைஇல்லத்தை (கஅபாவை) ஹஜ் செய்யுங்கள்! உங்களில் அதிகாரம் வகிப்பவர்களுக்குக் கட்டுப் படுங்கள்! (அப்போதுதான்) நீங்கள் சுவர்க்கம் செல்வீர்கள்.[35]

ஒருவர் குற்றமிழைத்தால் அதற்கான தண்டனை அவருக்கே கொடுக்கப்படும். மகனின் குற்றத்திற்காக தந்தையோ, தந்தையின் குற்றத்திற்காக மகனோ தண்டிக்கப்பட மாட்டார்.[36]

என் பிரார்த்தனையைத் தவிர இறைத்தூதர் ஒவ்வொருவரின் பிரார்த்தனையும் (உலகிலேயே) முடிந்துவிட்டது. மறுமை நாளுக்கு அதை நான் என் இறைவனிடம் சேமித்து வைத்துள்ளேன். அறிந்து கொள்ளுங்கள்! மறுமையில் இறைத்தூதர்கள் தங்களின் சமுதாயத்தினர் அதிகமாக இருப்பதைக் கண்டு மகிழ்வார்கள். அப்போது என்னைக் கேவலப்படுத்திவிடாதீர்கள்! நான் உங்களுக்

32. இப்னு மாஜா 3055.

33. ஸஹீஹ் அல் புகாரீ 4662. அபூ தாவூத் 1942

34. திர்மிதீ 3078.

35. திர்மிதீ 616.

36. ஜாமிவுத் திர்மிதீ 2159, 3078. ஸஹீஹ் அத் திர்மிதீ 373, 461. இப்னு மாஜா 1015.

காக கவ்ஸர் எனும் நீர்தடாகத்தின் அருகில் அமர்ந்திருப்பேன்.

மக்களே! எனக்குப் பின்னர் எந்த இறைத்தூதருமிலர். உங்களுக்குப் பின்னர் எந்தச் சமுதாயமும் இல்லை. இங்கு வந்திருப்பவர்கள் வராதிருப்பவர்களுக்கு (இச்செய்தியை) எட்டச் செய்யுங்கள்! செய்தி சென்று சேர்பவர்களில் சிலர் நேரடியாகக் கேட்பவரை விட நன்றாய் ஆராயும் தன்மை கொண்டவராய் இருக்கலாம்.[37]

இவ்வாறு இறைத்தூதர்(ஸல்) உரை நிகழ்த்திவிட்டு மக்களை நோக்கி,

“மறுமை நாளில் என்னைப் பற்றி உங்களிடம் விசாரிக்கப்படும் போது என்ன சொல்வீர்கள்?” எனக் கேட்டார்கள்.

“(இறைச்செய்திகள்) அனைத்தையும் தெரிவித்துவிட்டீர்கள்; தங்களின் பொறுப்பை தாங்கள் நிறைவேற்றிவிட்டீர்கள்; நன்மையை நாடினீர்கள் என நாங்கள் சாட்சியளிப்போம்'' என மக்கள் கூறினார்கள்.

அப்போது இறைத்தூதர்(ஸல்) தம் ஆட்காட்டி விரலை வானத்தின் பால் உயர்த்தி சைகை செய்துவிட்டு பின்னர் மக்களின் பால் தாழ்த்தி, “இறைவா இதற்கு நீயே சாட்சி” எனக்கூறி தங்களின் அரஃபா உரையை நிறைவு செய்தார்கள்.[38]

இவ்வாறு அவர்கள் உரை நிகழ்த்திய இடத்தில் திருக் குர்ஆனின் 5:3 வசனம் அருளப்பட்டது.

இன்று உங்களுக்காக உங்களின் மார்க்கத்தைப் பூர்த்தியாக்கி விட்டேன். உங்கள்மீது என் அருட்கொடையையும் பூர்த்தி ஆக்கி விட்டேன். இன்னும், உங்களுக்காக இஸ்லாமை உங்களின் மார்க்கமாகத் தேர்ந்தெடுத்துள்ளேன்.[39]

## மரணம்...

இறைத்தூதர்(ஸல்) தம் அறுபத்தி மூன்றாம் வயதில் நோய்வாய்ப் பட்டு மரணித்தார்கள். மதீனாவின் மஸ்ஜிதுன் னபவிக்கு அடுத்தாற் போல அமைந்திருந்த தம் இல்லத்திலேயே அடக்கம் செய்யப் பட்டார்கள். அவர்கள் தங்களின் இல்லத்தாருக்கு விட்டுச் சென்ற சொத்து மிகச்சொற்பமானது. அப்போது அவர்களின் போர்கவசம்

37. காண்க! ஸஹீஹ் அல் புகாரீ 67, 105, 1741.

38. காண்க! ஸஹீஹ் முஸ்லிம் 2334.

39. காண்க! திருக்குர்ஆன் 5:3. மற்றும் ஸஹீஹ் அல் புகாரீ 4406, 4407



ஒன்று இஸ்லாமிய அரசின் குடிமகன் யூதரிடம் அடமானம் வைக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர்களின் “இறைவனைத் தவிர வேறு கடவுள் இல்லை'' என்னும் புரட்சித்தூது உலக இறுதிநாள் வரை நிலைத் திருப்பதாகும். இதுதான் இஸ்லாத்தின் அடிப்படையாகும்.

“என் நிலையும் எனக்கு முன்பிருந்த இறைத்தூதர்களின் நிலையும் ஒரு வீட்டைக் கட்டி அதை அழகாக அலங்கரித்து, ஒரு மூலையில் ஒரு செங்கல் அளவிற்குள்ள இடத்தை மட்டும் விட்டுவிட்ட ஒருவரின் நிலைபோன்றதாகும். மக்கள் அதைச் சுற்றிப் பார்த்து விட்டு ஆச்சரியப்பட்டார்கள்.

“இச்செங்கல் (இங்கே) வைக்கப்பட்டிருக்கக் கூடாதா?' எனக் கேட்டார்கள்.

நானே அச்செங்கல். மேலும், நானே இறைத்தூதர்களில் இறுதி யானவன்' என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்'' என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.[40]

அந்த இறுதித்தூதரின் வழிநடக்கும் சமுதாயம் உலகில் ஒப்பற்ற சமுதாயமாய்த் திகழும் என்பது உறுதி. இப்படிப்பட்ட சமுதாயத்தின் அங்கமாவதற்கு நீங்களும் முயலுங்கள். உங்கள் முயற்சியை இறைவன் உங்களுக்குப் பயனுள்ளதாய் ஆக்கட்டும்!

*******

40. ஸஹீஹ் அல் புகாரீ ஹதீஸ் எண்: 3535

## அத்தியாயம் 2
## முஹம்மத் இறைத்தூதர்; ஏன்?

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை முஸ்லிம்கள் தங்கள் உயிரினும் மேலாக மதித்து, அவர்களின் மீது அன்பு வைத்துள்ளனர். அவர்களின் கட்டளைகளைச் சிறிதும் மாற்றமின்றி, அப்படியே நிறைவேற்றுகிறார்கள்.

இன்றைய உலகில் இஸ்லாமை தங்களின் வாழ்க்கைநெறியாக ஏற்பதற்கு மக்கள் முன்வந்துள்ளார்கள்; இஸ்லாமை ஏற்று வாழ்ந்தும் வருகிறார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை முஸ்லிம்கள் தங்கள் உயிரினும் மேலாக மதித்து, அவர்களின் மீது அன்பு வைத்திருக்கிறார்கள். அவர்களின் கட்டளைகளைச் சிறிதும் மாற்றமின்றி, அப்படியே நிறைவேற்றுகிறார்கள். எனவே, இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தம்மை 'இறைத்தூதர்' எனக் கூறியுள்ளதை ஆய்விற்கு எடுக்கவேண்டும். முஹம்மத்(ஸல்) 'இறைத்தூதர்' என்றால், பேரும் புகழும் பெற்று வாழ்ந்த மற்ற தலைவர்களின் நிலை என்ன? அவர்கள் யார் என்பன போன்ற வினாக்களுக்கு விடைவேண்டும். முஹம்மத்(ஸல்) அவர்களை 'இறைத்தூதர்' என முஸ்லிம்கள் எந்த அடிப்படையில் நம்புகிறார்கள் என்பதையும் உற்று நோக்க வேண்டும். அவ்வாறான சிறிய ஓர் ஆய்வையே இங்கு சமர்ப்பிக்கிறேன்.

## தேசியவாதம்

ஒரு தேசம் அடக்கு முறைக்குள்ளாகும்போது தேசியவாதம் உருவாகிறது. அந்த அடக்குமுறை தன் நாட்டைச் சார்ந்தவர்களால் அல்லது பிறநாட்டவர்களாக இருக்கலாம். இயற்கையாகவே இப்படிப்பட்ட சூழல் ஒரு தலைவர் உருவாகக் காரணமாக அமைகிறது. இதனடிப்படையில் பல தேசங்களில் தலைவர்கள் உருவானார்கள் என்பது சரித்திரம் கண்டுள்ள உண்மை! இன்றைய உலகிலும் கூட தேசியவாதம் பேசி, பல உயிர்கள் பலியாகியுள்ளன. இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாகத் தாங்கள் பிறந்த நாட்டையே விட்டுவெளியேறு கிறார்கள். சிலர் தங்களின் சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்கிறார்கள். இக்கொடுமையிலிருந்து நாம் மீட்கப்படுவோமா? நம்மை யார் மீட்பது என அவர்கள் ஏங்குகிறார்கள்.



தேசியவாதம் எவ்வாறு தலைவர்களை உருவாக்குகிறது என்பதற்குச் சில நிகழ்வுகளை உதாரணமாகக் குறிப்படலாம்.

## சூழ்நிலையின் உருவாக்கம்

இவ்வுலகில் தலைவர்களென்ற போற்றுதலுக்கும், பெருமைக்கும் உரிய சொந்தக்காரர்களில் பலரும் மக்களின் எழுச்சியாலும், புரட்சியாலும் உருவாக்கப்பட்டவர்கள்தாம்! எந்த நாடு அந்நியர்களின் கொடுங்கோன்மைக்கு உள்ளாகிறதோ, அங்கு மக்களின் கொந்தளிப்பு அதிகமாகிறது. மக்கள் அடக்கு முறைக்குள்ளாகும் இதுபோன்ற சூழ்நிலையில் தலைவர்கள் உருவாவது இயற்கையானதே! அமெரிக்க ஏகாதிபத்திய வெறியாட்டத்தால் வியட்நாமில் மக்கள் தலைவராக **ஹோஸிமின்** உருவானார். இதே போன்று ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்திலிருந்து கொலம்பியா, பெரு போன்ற தென் அமெரிக்க நாடுகளை விடுவித்ததில் **சைமன் பொலுசியர்** என்னும் தலைவர் உருவானார். இத்தலைவர்கள் அங்குள்ள மக்களுக்குப் புனிதமானவர்களாகத் தெரிகிறார்கள். ஏன், சிலர் இவர்களைத் தங்களின் வணக்கத்திற்குரியவர்கள் போலவும் ஆக்கியுள்ளார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை மனிதப் புனிதராக முஸ்லிம்கள் பாவிப்பது இதுபோன்ற காரணத்தினாலா? அப்படியே இது உண்மையெனில், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மக்களின் எழுச்சியையும், உணர்வுகளையும் பயன்படுத்திக் கொண்டு தலைவராக ஆனார்களா? தேசியவாதம் உருவாக்கிய தலைவரா இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) என்பதை வரலாற்று ஒளியில் ஆய்வது அவசியம்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தேசிய வாதத்தை முன் வைத்துச் சூழ்நிலையால் உருவாக்கப்பட்ட தலைவரல்லர். அவ்வாறு தாம் ஒரு தலைவராக வேண்டுமென அவர்கள் நினைத்திருந்தால் மிகவும் எளிதாக அவர்கள் அதைச் சாதித்திருப்பார்கள். ஏனெனில் இது போன்ற தலைவர்களை உருவாக்குவதற்கு இன்றைய வியட்நாம் மற்றும் தென்அமெரிக்கா போன்ற அடக்குமுறைக்குள்ளான தேசங்களைவிட அன்றைய அரபு தேசத்தின் சூழல்நிலைகள் மிகச்சாதமாகவே இருந்தன.

அன்றையக் காலகட்டத்தில் அரபுலகின் வளமான பகுதிகள் அந்நியர்களின் ஆக்கிரமிப்பில் இருந்தன. வடக்குப் பகுதியை

ரோமர்களும், தெற்குப் பகுதியைப் பாரசீகர்களும் ஆக்கிரமித்துத் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார்கள்.

தாம் ஒரு தலைவராகவோ, மன்னராகவோ ஆகவேண்டுமென இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) நினைத்திருந்தால் நாட்டின் இச்சூழ் நிலைகளைத் தமக்குச் சாதமாகப் பயன்படுத்தி, அரபு மக்களின் ஏகோபித்த ஆதரவையும் ஒன்று திரட்டி, அரசர் பதவியை எளிதாகத் கைப்பற்றியிருக்க முடியும்.

பொதுவாகச் சிறு பிரச்சினைகளுக்காக அரபு மக்கள் பல ஆண்டுகள் யுத்தம் செய்து, 'இரத்தத்தால் கை கழுவும் வழக்கமுடையவர்கள். "நம்நாடு; நம்மக்கள்; நம் தேசத்தை நாம் பாதுகாக்க வேண்டும்" என்ற முழக்கத்துடன், நாட்டின் பிரச்சினை தேசியப்பிரச்சினை என்பதை அரபு மக்களின் சிந்தனையில் விதைத்திருந்தால், அவர்கள் அதில் ஒரு முடிவைக் காணும் வரை ஓயமாட்டார்கள்; உறங்கவும் மாட்டார்கள். ஆனால், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அப்படியொரு வழிமுறையைக் கையாண்டதே இல்லை.

தாம் ஓர் அரசராகவோ, மக்கள் தலைவராகவோ ஆகவேண்டும் என்ற சிந்தனையோ, ஆசையோ இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்குத் துளியும் இல்லை. உங்கள் இறைவன் ஒருவனே; நீங்கள் அவனை மட்டுமே வணங்கவேண்டும்; அவனுக்கு நிகராக யாரையும் எதையும் ஏற்படுத்தக் கூடாது என்று செய்தியை மக்களிடம் மக்களிடம் கூறுமாறு இறைவன் அவர்களுக்குப் பணித்தான்; அவர்கள் அதை மட்டும்தான் செய்தார்கள். அதைத் தவிர அவர்களுக்கு வேறு எந்த எதிர்பார்ப்பும் இருக்கவில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்), உலகின் பிற தலைவர்களைப் போல உருவானவர் அல்லர் என்பதையும், தம் புகழுக்காக நாட்டு மக்களின் உணர்வுகளையும், சூழல்களையும் பயன்படுத்தவில்லை என்பதையும், மற்ற எவ்விதச் சூழ்நிலையால் உருவான தலைவர் அல்லர் என்பதையும் மேற்கண்ட நிகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

## தன்னிலைப் பாதிப்பு

பன்னாட்டுத் தலைவர்களின் வரலாற்றைப் புரட்டும்போது ஓர் உண்மை தெரியவருகிறது. சிலர் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பால் கொதித்தெழுந்தார்கள்; போராட்டக்களம் புகுந்தார்கள்; அரசர்கள் என்றும், தலைவர்கள் என்றும், தேசியத் தந்தை என்றும் போற்றப்பட்டார்கள்.



தங்களின் பாதிப்பிற்கு இவர்கள் இவ்வாறு வடிகால் தேடியதைத் பெருங்குற்றம் என எம்மால் கூறமுடியாது. உண்மையில் அது மனிதனிடம் காணப்படும் இயற்கையான பண்புதான். இவ்வாறு தன்னிலைப் பாதிப்பிற்குள்ளாகி, பேராட்டக் களம் புகுந்தோரின் வரிசையில் நம் இந்திய நாட்டின் தந்தை என அழைக்கப்படும் காந்திஜி அவர்களும் இடம் பெறுகிறார்கள்.

காந்திஜி தம் இளமைக் காலத்தில் பாரிஸ்டர் பட்டப் படிப்பிற்காக இங்கிலாந்து நாட்டிற்குப் பயணமானார். அவர் சென்ற அந்நேரத்தில் இந்திய மக்கள் ஆங்கிலேய அரசால் அடக்குமுறைக்குள்ளாகி இருந்தார்கள். வெள்ளையர்களுக்கு எதிரான போராட்டங்களும் நடந்து கொண்டுதான் இருந்தன.

காந்திஜி தம் பட்டப்படிப்பை முடித்துவிட்டுத் தாயகம் திரும்பினார். அப்போதும் ஆங்கிலேய அரசால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் தலைவிரித்தாடிக் கொண்டுதான் இருந்தன. இதற்கிடையில் காந்திஜி தென் ஆஃபிரிக்காவை நோக்கி மீண்டும் தம் வெளிநாட்டுப் பயணத்தைத் தொடர்ந்தார். அங்கு பல ஆண்டு காலம் வழக்கறிஞராக இருந்தார். ஒருமுறை டர்பனிலிருந்து பிரிட்டோரியா நோக்கி இரயில் பயணம் சென்றபோது, கருப்பு நிறத்தவராக இருந்த ஒரே காரணத்திற்காக, முதல் வகுப்பில் பயணம் செய்யக்கூடாது; மூன்றாம் வகுப்பில்தான் பயணம் செய்ய வேண்டும் என ஆங்கிலேய அதிகாரி ஒருவரால் வழியில் இரயிலைவிட்டு வெளியில் தள்ளப்பட்டார். காந்திஜிக்கு இது பெருத்த அவமானமாக இருந்தது. மனதளவில் பெரிதும் பாதிக்கப் பட்டார். ஆங்கிலேய அதிகார வர்க்த்தின் இச்செயல் கொடுமை யானது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

மேற்கண்ட இந்நிகழ்வு நடக்கும் வரை காந்திஜி ஆங்கிலேய அரசின் மீது நன்னம்பிக்கை வைத்திருந்தார். ஆனால், தம்மை அவர்கள் இவ்வாறு அவமானப்படுத்தியதும், ஆங்கிலேயர்கள் மீது அவருக்கு இருந்த அந்த நன்னம்பிக்கை போய்விட்டது. இதை காந்திஜி அவர்களே சத்திய சோதனை (MY EXPERIMENT WITH TRUTH) எனும் தம்முடைய நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

*``Hardly ever I have known any body to cherish such loyalty to British as I did".*

**"ஆங்கிலேய அரசிற்கு நான் விசுவாசகமாக இருந்த அளவிற்கு எவரும் விசுவாசகமாக இருந்திருக்க முடியாது."**

*``I thought on the whole British rule is benefical to the ruled"*

**“ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது பிரிட்டிஷ் ஆட்சி, ஆளப்படுவோருக்கு நன்மையானதே என அந்நாட்களில் நான் நம்பினேன்.”**

தென்னாஃப்ரிக்காவில் நடந்த இழிவிற்குப் பின்னரே ஆங்கிலேய அரசின் மீது தாம் கொண்டிருந்த மோகத்தை விலக்கியதாக, காந்திஜி தம் நூலில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

காந்திஜி அவர்களுக்கு ஆங்கிலேய அரசின் மீது நம்பிக்கை இருந்த அதே காலகட்டத்தில்தான், அந்த அரசுக்கு எதிராக இந்திய தேசிய காங்கிரஸ் போன்ற தேசியவாத அமைப்புக்களும், பல தீவிரவாத அமைப்புக்களும் நாட்டின் விடுதலை வேண்டி ஆங்கிலேய அரசுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்தன. நாட்டின் விடுதலைக்காக பல உயிர்கள் பலியாகிக் கொண்டிருந்தன. அப்போதெல்லாம் காந்திஜி சுதந்திரப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தவில்லை. தனிப்பட்ட முறையில் தமக்கு ஏற்பட்ட இழிவிற்குப் பின்னரே பொது வாழ்வில் ஈடுபட காந்திஜி முன்வந்தார். காந்திஜியின் தியாகங்களை எம்மால் மறுக்கமுடியாது.

இவ்வாறு தங்கள் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட அவமானங்களின் காரணமாக ஆத்திரமடைந்த பலர் தலைவர்களாக உயர்ந் துள்ளார்கள் என்பது வரலாற்று உண்மை. அதற்காக அவர்களில் யாரையும் எம்மால் குற்றம் சுமத்த முடியாது. பொதுவாக மனிதப் பண்பு இவ்வாறே இருக்கும். அதிலும், காந்திஜியைப் பொறுத்தவரை அவர்கள் தாமே முன்வந்து சொன்ன செய்திகள் இங்கு தரப்பட்டுள்ளன.

பிற தலைவர்களைப் போன்றே இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களும் தங்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட தனிப்பட்ட பாதிப்புகளுக்காகவும், பிரச்சினைகளுக்காகவும் ஆத்திரப் பட்டார்களா? குறிப்பிட்ட ஒரு சாராருக்கு எதிராகத் பிரச்சாரத்தை மேற்கொண்டார்களா? நாம் இதை நிதானமாக ஆராயவேண்டும். இந்த ஆய்வில் “இது ஏன்?” என்ற எம் கேள்விக்கான பதில் பின்வருமாறு கிடைக்கிறது.

“நான் இறைவனின் தூதர்” என மக்களிடம் முஹம்மத்(ஸல்) அறிவிப்பதற்கு முன்பு, அவர்களை அவர்களின் சமுதாயமோ, பிறசமுதாயமோ, ஏன் தனி ஒரு மனிதன்கூட அவர்களை சிறிதும் இழிவாகக் கருதியதே இல்லை. அவர்களை அனைவரும் கண்ணியமாகவே நடத்தினார்கள்.



“நான் இறைத்தூதர்” என அவர்கள் தம்மை அறிமுகம் செய்த பின்னரே அவர்களுக்கு எதிரான வசைபாடல்களும், தாக்குதல்களும் அரங்கேறின. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் கொள் கையைப் பிரகடனம் தமக்கு ஏற்பட்ட பாதிப்பின் வெளிப்பாடு அல்ல. மாறாக, இறைவனின் அறிவுறுத்தல்படி கொள்கைப் பிரகடனம் செய்ததால் மட்டுமே தம் நாட்டு மக்களாலேயே அவர்கள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளானார்கள். தலைவர்களின் உருவாக்கமும், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் உருவாக்கமும் இவ்வாறு வேறுபடுகிறது.

## சீர்திருத்த மேதைகள்

இஸ்லாம் ஒழுக்க மாண்புகளை அறிவுறுத்துகிறது. ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்தல் இறைவழிபாட்டின் அம்சம் எனப் போதிக்கிறது. ஒழுக்கக் கேடுகளுக்கு அழித்தொழித்து, சீரிய சமூகத்தை உருவாக்க கடுமையான தண்டனைகளை விதிக்கிறது.

“ஒழுக்கக் கேட்டில் விஞ்சியிருந்த சமுதாயத்தைச் சீர்படுத்தும் நோக்கிலேயே இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) ‘தூதுத்துவம்’ எனும் கொள்கைப் பிரகடனம் செய்தார்கள்” என்ற சிந்தனை மேலை மற்றும் கீழை நாட்டு எழுத்தாளர்களிடம் வேரூண்டி யுள்ளது. உண்மைக்கு எதிராக தங்களின் சுய கௌரவத்தை நாடுவோரும் இவ்வாறு கூறி மகிழ்கிறார்கள். இது இவர்களின் கணிப்புதான்; வரலாற்று ஒளியில் ஆய்வு செய்து உண்மையை வெளிக்கொண்டு வருவதே நீதியாகும்.

ஒழுக்கக் கேட்டைச் சுட்டிக் காண்பித்து, ஒழுக்க மேம்பாட்டைப் போதித்தற்காக இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை அரபு சமுதாயம் ஒரு போதும் கொடுமைப்படுத்தியதில்லை. மாறாக “உங்களின் இறைவன் ஒருவனே அவனை மட்டுமே நீங்கள் வணங்கவேண்டும்; அவனுக்கு நிகராக யாரையும் எதையும் ஏற்படுத்தாதீர்கள்” என்ற செய்தியை மக்களிடம் ஆணித்தரமாக எடுத்துரைத்த ஒரே காரணத்திற்காக மட்டுமே கொடுமைப் படுத்தினார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) கூறிய இச்செய்தியை மட்டும்தான் இறைமறுப்பாளர்களால் சகிக்கமுடியவில்லை. ஒழுக்கத்தை மையமாக வைத்துத்தான் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தூதுத் துவப் பிரச்சாரத்தை மேற்கொண்டார்கள் என்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. ஒழுக்கநெறியைப் பொறுத்தவரையில்

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் குழந்தைப் பருவத் திலிருந்தே இயல்பாக இருந்தது. ஒழுக்கநெறிக்காகத்தான் தூதுத் துவப் பிரகடனம் என்றால் அரபு மக்கள் இறைத்தூதரை ஆரம்பத் திலிருந்தே வெறுத்து ஒதுக்கி இருக்க வேண்டும். ஆனால், ஆரம்பத்தில் ஒழக்க நெறிக்காகத்தான் அவர்கள் போற்றப் பட்டார்கள். நாற்பது வயதில்தான் அவர்கள் தம்மை இறைவனின் தூதர் என அறிவித்தார்கள்.

இதை முதலில் சொல்லவேண்டும்; இதை இரண்டாவதாகச் சொல்லவேண்டும்; இதை இறுதியாகச் சொல்லவேண்டும் என்ற எந்தத் திட்டமிடுதலையும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் வைத்திருக்கவில்லை. தம்மிடம் வரும் இறைச் செய்தியை மட்டுமே அவர்கள் அம்மக்களின் முன்பு வைத்தார்கள்.

தான் தோன்றித்தனமாகவோ அல்லது ஒழுக்கத்தைப் போதிப்ப தற்காகவோ 'தூதுத்துவம்' எனும் போர்வையை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) போர்த்திக் கொள்ளவில்லை. இதுதான் உண்மை என்றால், தம் மக்கா வாழ்க்கையிலேயே ஒழுக்கநெறிகளை இறைத் தூதர் முஹம்மத்(ஸல்) மையப்படுத்திருக்க வேண்டும். ஏனெனில், மக்கா வாழ்க்கையின்போது மக்கள் ஒழுக்கக் கேட்டின் உச்சத்தில் இருந்தார்கள். ஆனால், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் போதனை முறை அப்போது அவ்வாறு இல்லை. ஏகத்துவத்தை மையப்படுத்திய இறைவன் இட்ட கட்டளையை மட்டுமே நிறைவேற்றி வந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மதீனா வந்தடைந்து, அங்கு ஓர் இஸ்லாமிய அரசை நிறுவிய பின்பு இறைவன் அவர்களுக்கு இஸ்லாமிய வாழ்க்கை முறைச் சட்டங்களை ஒவ்வொன்றாக வழங்கினான். அவற்றை அவர்கள் மக்களுக்கு அறிவித்தார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் தோழர்களும் அவர்கள் கூறிய சட்டங்களையும், ஒழுக்கப் போதனைகளையும் அப்படியே பின்பற்றி, அவற்றிற்கு செயல்வடிவம் கொடுத்தார்கள். நபித் தோழர்கள் இப்பக்குவத்தை முன்பே பெற்றிருந்தாலும், அவர்கள் மதீனா வாழ்க்கையில் செதுக்கப்பட்டார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மக்கா வாழ்க்கையைக் கடந்து, மதீனா வந்தடைந்த ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரே மது விலக்குச் சட்டம் அருளப்பட்டது. அப்போது அவர்களின் வயது 56 அதன் பின்னர் அவர்களின் 62-வது வயதில்தான் பொருளாதாரச்



சுரண்டலான வட்டி முறைக் கொடுக்கல் வாங்கல் பொருளாதாரத் தடைச் சட்டம் வழங்கப்பட்டது.

தம் தோழர்கள் மனப்பக்குவம் அடைந்த பின்னரே ஒழுக்க மேம் பாட்டுப் போதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகக் கூட ஒழுக்க மேம்பாட்டுப் போதனைகளை இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) தாமதப்படுத்தி இருக்கலாம் அல்லவா என்ற ஒரு கேள்வியும் எழலாம்.

அவர்களின் இறுதிக் காலகட்டத்தில் இஸ்லாமில் இணைந்த தோழர்களுக்கு ஏன் அவர்கள் அப்படி ஓர் அவகாசம் அளிக்க வில்லை? மதீனா வாழ்க்கையில் இஸ்லாமை ஏற்ற தம் தோழர்களை உடனடியாக அனைத்துச் சட்டங்களையும் கடைப்பிடித்தாக வேண்டும் என்ற கட்டாயத்தை ஏன் கொண்டு வந்தார்கள்?

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் தூதுத்துவத்தை உறுதிபடுத்தும் வகையில் முக்கியமான மற்றோர் அம்சமும் இருக்கிறது.

ஒழுக்க மேம்பாட்டையே உயிர் மூச்சாய்க் கொண்ட சீர்திருத்த மேதைகள் பலரை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களைத் தவிர ஒழுக்க மேம்பாட்டைச் செயல் வடிவம் பெறச் செய்வதில் வேறு எவரும் வரலாற்றில் சிறப்பு மிக்கவராகத் திகழவில்லை. ஒழுக்கமேம்பாடு குறித்து பேசிய பலரின் முகவரிகள் வரலாற்றில் காணப்பட்டாலும் அவர்களின் ஒழுக்கப் போதனைகள் காணாமல் போய்விட்டன. முஹம்மத்(ஸல்) இறைவனின் தூதர் என்ற காரணத்தாலே அவர்களின் வாழ்க்கை மற்ற அனைவரையிலும் மாறுபட்டுத் திகழ்கிறது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) வாழ்ந்த அதே கால கட்டத்தில், அவர்களின் கண் முன்னே இறைவனை மறுத்த ஆண்களும் பெண்களும் நிர்வாணமாக 'கஅபா' எனும் இறை இல்லத்தை வலம் வந்துள்ளார்கள். ஆனால் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) இறைச் செய்தி வரும்வரை அதுபற்றி எதுவுமே கூறவில்லை.இறைக்கட்டளை வந்தபின்னரே வழிகேடுகளைக் கண்டிக்கத் தொடங்கினார்கள். அதற்குப் பின்னர் 14 நூற்றாண்டுகளுக்கு மேலாகியும் இஸ்லாமைப் பின்பற்றும் முஸ்லிம்கள் தங்களின் ஒழுக்கத்தில் குறைவைக்க வில்லை. "நாகரிகத்தின் உச்சத்திலிருக்கிறோம்" என முழங்கும்

மேலை நாடுகளின் குடும்ப அமைப்புகூட இன்று சீரழிந்தே காணப்படுகிறது. மேலைநாடுகளில் சிலருக்கு தம் தந்தை யாரென்றே தெரியவில்லை. இன்னும் சிலருக்கோ தம் தாய்கூட யாரென தெரிவதில்லை. நாகரிகம் உச்சம் என்பதற்கு இதுதான் இலக்கணமா? இறைச்செய்திகளைப் பின்பற்றுவோருக்கும் அவற்றை அலட்சியம் செய்வோருக்கும் இடையில் காணப்படும் வேறுபாடு இதுதான்.

## வரலாறுகள் காணாத வரலாறு

தலைவர்கள், மகான்களென போற்றப்படுவோரின் வாழ்கை முறையை ஆய்விற்கு எடுக்கும்போது, பெரும்பாலானவர்களின் வாழ்க்கைக் குறிப்பு உண்மைக்குப் புறம்பான பல தகவல்களையே தருகின்றன. கடந்த சில நூற்றாண்டுக்குள் வாழ்ந்த தலைவர்களுள் சிலரை மட்டும் இந்நூலில் உதாரணத்திற்கு எடுத்துள்ளேன். இருப்பினும்கூட இவர்கள் குறித்து தெளிவானதொரு வாழ்க்கை வரலாறு எதுவும் காணப்படவில்லை.

இவர்களில் பலர் தாங்கள் வாழ்ந்த காலகட்டத்திலேயே மக்களால் அலட்சியப்படுத்தப்பட்டவர்கள். ஆனால், அவர்கள் மறைந்த பின்னர், அவர்களைப் பற்றித் துதிபாடி, அவர்கள் சார்ந்திருக்கும் இன மக்களை மகிழ்வித்து, அதன் வாயிலாகத் தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நினைத்தவர்களின் கற்பனைகளே தலைவர்களின் பெயரில் மிகுதியாய்ப் பதிவாகியுள்ளன.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை இத்தகைய பலவீனத்திலிருந்து பாதுகாக்கப்பட்டிருக்கிறது. அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்வுகளை, தான் தோன்றித்தனமாக எவரும் பதிவுசெய்யவில்லை. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பதிவு செய்வதற்காக சுமார் 18 இலட்சத்திற்கும் மேற்பட்ட பலரின் வாழ்க்கை வரலாறுகள் அலசி ஆராயப்பட்டன.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) குறித்து ஒரு செய்தி கூறப்பட்டால், அதைக் கூறும் வரிசையில் இருப்பவர்களில் எவரேனும் ஒருவர் பொய்யர் என்றோ, இனந்தெரியாதவர் என்றோ, ஞாபக சக்தி குன்றியவர் என்றோ, செய்தியைத் தன்னிடம் சொன்னவரை தான் கண்டதில்லை என்றோ, செய்தியைச் சொல்லும் ஒருவர், தான் செய்தியைப் பெற்றதாகக் குறிப்பிடும் நபரை சந்திக்க வாய்ப்பில்லாத தலைமுறை கடந்தவர் என்றோ, தீயசெயல்கள் செய்பவர் என்றோ தெளிவாக அறியப்பட்டால் அவரின் மூலம் கிடைத்த அச்செய்தி ஒருபோதும் ஆதாரமாகப் பதியப்பட்டதில்லை.



பிற வரலாறுகளைப் போல வந்தவர் நின்றவர் என யாரும் தன்னிச்சையாக, இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) குறித்து, இவ்வாறு செய்தார்கள், அவ்வாறு செய்தார்களென கூறினாலோ, எழுதினாலோ அது இஸ்லாமிய அறிஞர்களாலும், வரலாற்று ஆய்வாளர்களாலும் ஏற்கப்படாது. கடுமையான இந்த நியதிக் குட்பட்டுத்தான் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் மெய்யான வரலாறு தொகுக்கப்பட்டுள்ளது.

ஹதீஸ் எனும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பைத் தொகுத்தவர்களில் ஒருவர் இமாம் புகாரீ ஆவார்கள். ஓர் ஊரில் ஒரு பெரியவரிடம் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) குறித்த செய்தி இருப்பதாக இமாம் புகாரீ கேள்விப்படுகிறார். நீண்ட நெடுந்தூரம் பயணம் செய்து அவரைக் காண இமாம் புகாரீ சென்றார்கள்.

அந்தப் பெரியவர் ஒரு பையைக் காண்பித்துத் தம் ஒட்டகத்தை அழைக்கும் காட்சியை இமாம் புகாரீ கண்டார்கள். அந்தப்பையில் தனக்குரிய உணவு இருக்கும் என நம்பி ஒட்டகம் அதன் அருகில் வந்தது. ஆனால், அதற்கான உணவு ஏதுமில்லை. அவர் அந்த ஒட்டகத்தைப் பிடித்துக் கட்டினார். அப்பெரியவர் அப்பையை உதறியபோது அதனுள் இரை ஏதுமில்லை இக்காட்சியைத் தூரத்திலிருந்து கவனித்த இமாம் புகாரீ அப்பெரியவரிடம் இருப்பதாகச் சொன்ன அச்செய்தியைப் பெறாமலேலே திரும்பி விட்டார்கள். “வெற்றுப்பையை இரை உள்ளது போன்று காண்பித்து வாயில்லாப் பிராணியை ஏமாற்றும் இவர் எவரைத் தான் ஏமாற்றமாட்டார்? இவர் சொல்லை எப்படி நம்புவதென்ற காரணத்தால் இமாம் புகாரீ அம்மனிதரைச் சந்திக்காமலே திரும்பினார்கள். உலகம் தோன்றிய காலம் முதல் இன்று வரை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாற்றைத் தவிர்த்து வேறு எவரின் வரலாறாவது இவ்வாறு தெளிவாகத் தொகுத்தளிக் கப்பட்டுள்ளதா? அதை நிரூபிக்கமுடியுமா? இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாற்றைத் தொகுத்த வரலாற்று ஆசிரியர்கள் இந்த அளவிற்கு எச்சரிக்கையாகச் செயல்பட்டதற்கு முக்கிய காரணம் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் கடுமையான எச்சரிக்கைதான்!

தம் வாழ்க்கை முறை எவ்வித ஒளிவு மறைவுமின்றி மிகைப்படுத்தப் படாமல் உள்ளது உள்ளபடியே உலக மக்களைச் சென்றடைய வேண்டுமென்ற நோக்கிலேயே அவர்கள் போதித்த போதனைதான்.

“என் மீது பொய்யான ஒன்றை இட்டுக்கட்டுகிறவர், தன் இருப் பிடத்தை நரகமாக ஆக்கிக்கொள்ளட்டும்” என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.[41]

“மர்யமின் மகன் ஈசா(அலை) அவர்களைக் கிறித்தவர்கள் மிகைப் படுத்திப் புகழ்ந்ததைப் போல என்னை நீங்கள் மிகைப் படுத்திப் புகழாதீர்கள் நான் ஓர் அடியானே! (என்னை) ‘இறைவனின் அடியான்’ என்றும் அவனுடைய ‘தூதர்’ என்றும் கூறுங்கள்!” என இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) கூறினார்கள்.[42]

“என்னிடமிருந்து வந்த ஒரு வசனமேனும் சரி, அதை அனைவரிட மும் கொண்டு செல்லுங்கள்”[43]

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் இவ்வாறான போதனை களுக்குட்பட்டே அவர்களின் வரலாறு தொகுக்கப்பட்டுள்ளது. இதனால்தான் இவர்களின் வரலாறு உண்மையில் மற்ற அனைவரின் வரலாறுகளையும்விடச் மெய்யான, சிறந்த, முற்றிலும் மாறுபட்ட, சரியான, துல்லியமான பதிவாகக் காணப்படுகிறது.

சில தலைவர்களும், அரசர்களும் தங்கள் குறித்த புகழாரங்களை மிகைப்படுத்திக் கூறி, தாங்களே அவற்றைத் தொகுத்துள்ள வரலாறுகளும் உள்ளன. தங்களின் வரலாற்றைத் தாங்களே எழுதும் (Autobiography) நபர்கள் சுவைக்காகச் சிலவற்றை மிகைப் படுத்தியுள்ளார்கள். ஆனால், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாறு இவ்வாறான எந்தக் குறைகளையும் இல்லாமல் மாசற்றதாய் உள்ளது. எனவேதான், பெரும் வரலாற்று ஆசிரியர்களும், ஆய்வாளர்களும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாறு வெளிச்சத்தைப் போன்று வெளிப்படையானது; இதுபோன்றதொரு வரலாறு எந்த மனிதருக்கும் இல்லை; அதில் எவரும் இருளைக் காணமாட்டார் என குறிப்பிட வேண்டிய நிர்பந்தத்திற்குள்ளானார்கள்.

41. காண்க! ஸஹீஹ் அல் புகாரீ

42. காண்க! ஸஹீஹ் அல் புகாரீ

43. காண்க! ஸஹீஹ் அல் புகாரீ ஹதீஸ் எண்: 3461



# இறுதித்தூதர் அரபகத்தில் ஏன்?

முஹம்மத்(ஸல்) இறைவனின் இறுதித்தூதர்! அவர்களை இறைவன் அரபகத்தில் அனுப்பினான். இந்த இறுதித்தூதரின் மூலம் இஸ்லாம் மீண்டும் மனிதகுலத்திற்கு நினைவூட்டப்பட்டு, அகிலமெங்கும் வேர்விட்டு சீரியவழி காட்டிக் கொண்டிருக்கிறது. இது முஸ்லிம்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகவும் இருக்கிறது.

இறுதியான அந்தத் தூதர் ஏன் அரபகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்? வேறு எங்காவது அனுப்பப்பட்டிருக்கலாமே என்பது சிலரின் ஐயம் அல்லது ஆதங்கம் எனலாம்.

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு முன்னர் பல காலகட்டங்களில், பலர் பல்வேறு மொழியினருக்கும், பல்வேறு நாட்டவர்களுக்கும் இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் அந்த இறைத்தூதர்களைப் பொய்ப்பித்தும், அவர்கள் கொண்டு வந்த வேதங்களைப் புறக்கணித்தும், புனைந்தும் சேதப்படுத்தினார்கள். எல்லா நாட்டினருக்கும், எல்லா மொழி யினருக்கும் வழிகாட்டியாக அமைந்து, பல்வேறு கொள்கைகளைக் கடைப்பிடித்துச் சிந்தனைத் தடுமாற்றத்தில் இருக்கும் மனித சமுதாயத்தை நேர்வழிப்படுத்த வேண்டும். இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட இறைவேதமும் இதையே கூறுகிறது.

இது (குர்ஆன்) உலக மக்கள் அனைவருக்கும் நல்லுபதேசமாகும்.[45]

சமயச் சார்புடையவர்களும், சமயச் சார்பற்றவர்களுமாகிய உலக மக்களை பொதுவாக ஆறு அணியினராகப் பிரிக்கலாம்.

1. ஒவ்வொன்றையும் படைத்துப் பாதுகாத்து வரும் ஒரே இறைவனை மட்டும் வணங்குவோர்.
2. யூதக் கொள்கை; இரண்டு தெய்வக் கொள்கை உள்ளவர்கள்
3. கிருஸ்துவம்; மூன்று தெய்வக் கொள்கை உள்ளவர்கள்.
4. நெருப்பை அல்லது நெருப்பு, சூரியன், சந்திரன் போன்ற இயற்கையை வணங்குவோர்.
5. சிலைகளை மற்றும் மனிதர்களையும், அதாவது படைப் பினங்களில் எல்லாவற்றையும் வணங்குவோர்.
6. இறைமறுப்பு; கடவுளே இல்லை என மறுப்போர்.

45. காண்க! திருக்குர்ஆன் 68:52

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) இறைவனின் தூதராக அனுப்பப் பட்ட அன்றையக் காலகட்டத்தில் மேற்குறிப்பிட்ட கொள்கை யாளர்கள் மொத்தமாக வாழ்ந்த ஒரே இடம் அரபகம் மட்டும்தான். எனவே, இந்த மக்களின் சிந்தனைத் தடுமாற்றத்திற்கு சரியான முறையில் விளக்கமளித்துத் தெளிவுபடுத்தினாலே, இஸ்லாமிய வாழ்க்கைநெறி உலகெங்கும் பரந்து செல்வதற்கும், மக்கள் அதை ஏற்பதற்கும் வாய்ப்பாக இருக்குமென்ற அடிப்படையில் இறைவன் தன் இறுதித்தூதரை அரபகத்திற்கு அனுப்பி இருக்கலாம். மற்ற தேசங்களுக்கு இறுதித்தூதர் அனுப்பப்பட்டிருந்தால் பிரச்சினைகள் அனைத்தும் தீர்வைக் கண்டிருக்கும் என உறுதிபடக் கூறமுடியாது.

உதாரணமாக, இறுதித்தூதர்(ஸல்) இந்தியாவுக்கு அனுப்பப் பட்டிருந்தால் இயற்கையையும், சிலைகளையும், மனிதர்களையும், மற்ற படைப்பினங்களையும் வணங்கும் அணியினருக்கு மட்டுமே விளக்கம் அளித்திருக்க முடியுமே தவிர, அனைத்துக் கொள்கை யுடைய மக்களுக்கும் தெளிவான விளக்கம் அளித்திருக்கமுடியாது. ஏனெனில், இந்திய மக்கள் அந்த ஆறாம் நூற்றாண்டில் யூதர்கள் குறித்து சரியாக அறிந்திருக்கவில்லை. எனவே, படைத்தவனை விட்டுவிட்டு, படைப்பினங்களை வணங்கக்கூடிய இந்திய மக்களின் சிந்தனைத் தடுமாற்றத்திற்கு மட்டுமே விளக்கம் அளித்திருக்க முடியும். உலகின் மற்ற இடங்களில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்கள் குறித்து முழுமையான விளக்கம் அளித்திருக்க முடியாது. அப்படியே விளக்கம் கூறியிருந்தாலும் யூதர்கள் குறித்து ஒன்றும் புரியாத மக்களுக்குப் பெரும் குழப்பம்தான் ஏற்படுமே தவிர, தெளிவு ஏற்படாது. அது மட்டுமல்லாது இன்று கணிசமாக வாழும் யூதர்களுக்கு இறைச்செய்தியும் முறையாக எட்டி இருக்காது.

அவ்வாறே அந்த 6-ம் நூற்றாண்டில் ஆஸ்திரேலியாவுக்கு இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அனுப்பப்பட்டிருந்தால் அங்குள்ள மக்களின் மூடப்பழக்கங்கள் மட்டுமே திருத்தத்திற்கு உள்ளாகி இருக்கும். கிருஸ்தவர்களின் வாடையைக் கூட அறியாதவர்களாக இருந்த அவர்களிடம் கிருஸ்துவக் கொள்கைகளையும், அது பற்றிய விளக்கங்களையும் கூறி இறைச்செய்தியைத் தெளிவுபடுத்தி இருந்தால், அவர்களுக்கு எவ்விதப் பயனும் இல்லாது போயிருக்கும்; அல்லது அப்படியே கிருஸ்தவர்களைப் பற்றி எதுவுமே கூறாது விட்டிருந்தால், இன்றைய உலகில் பெருமளவு வாழும் கிருத்தவர் களுக்கு இறைச் செய்தி கிடைக்காமலே போயிருக்கும்.



இறைச்செய்தி - திருக்குர்ஆன், உலகில் வாழும் மக்கள் அனைவருக்கும் பொதுவானது. குறிப்பிட்ட மொழி, இனம், மதம், தேசமென்ற அடிப்படையில் எங்களுக்கு மட்டுமே சொந்தம் யாரும் உரிமை கோர முடியாது. எனவேதான், அனைத்துச் சிந்தனையுடைய மக்களும் ஒட்டுமொத்தமாக வாழ்ந்த அந்த அரபு நாட்டில் இறைவன் தன் தூதரை அனுப்பியுள்ளான். ஏக இறைவனின் அந்த அருளில் மனித சமூகம் பயன்பெற வேண்டும்

## அவரென்ன தத்துவ ஞானியா?

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த தத்துவ ஞானிகளின் தத்துவங்கள் இன்றும் பேசப்பட்டு வருகின்றன. உண்மையில் அவை வியப்பாகவே உள்ளன. **சாக்ரட்டீஸ், பிளாட்டோ, அரிஸ்டாட்டில்** போன்றோர் தத்துவ மேதைகள் என பெரும் பெயர் பெற்றவர்கள். பிளாட்டோவால் எழுதப்பட்ட 'அரசியல் சான்றோர்' மற்றும் 'குடியரசு' ஆகிய நூல்கள் பிரபலமானவை. இவற்றில் சமூகச் சித்தாந்தங்களும், அரசியல் தத்துவங்களும், தந்திரங்களும் காணப்படுகின்றன.

பொதுவாகத் தத்துவ ஞானிகள் பலர், தாங்கள் வாழ்ந்த காலத்தில் மொழிப் புலமை மிக்கவர்களாகவும், தர்க்கவாதிகளாகவும் திகழ்ந்துள்ளார்கள். இவர்கள் வாழ்ந்தபோது சமூகத்திற்கெதிரான கொடுமைகளைக் கண்டு அதற்கு சரியான தீர்வைக் கூறினார்களென உறுதிபடக் கூறமுடியாது. ஒரு விஷயத்திற்குக்கூட அவர்களில் யாரும் தீர்வு கூறவே இல்லை என மறுக்கவும் முடியாது. ஆனால், கொடுமைகள் மலிந்திருந்தபோது பாராமுகமாக இருந்து எவ்வாறு சமூகக் கடமையாற்றினார்கள் என்ற கேள்வி எழுகிறது.

சில தத்துவ மேதைகள் அரசர்களுக்கும், ஆதிக்க வர்க்கத்திற்கும் அஞ்சியவர்களாக, அநியாயங்கள் புரிவதற்கு ஏதுவாகத் தங்களின் தத்துவங்களை உதிர்த்துள்ளார்கள். மேல்வர்க்கம், கீழ்வர்க்கம் என மக்களை பலவாறு கூறுபோட்டு, அந்தப் பிரிவினைகளைச் சட்டமாவும் ஆக்கினார்கள். இதில் பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோரும் தப்பவில்லை.

பிளாட்டோ தன் **'குடியரசு'** என்னும் நூலில் அடிமைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

**"அடிமைகள் இருந்தால்தான் அவர்களின் மீதும் கடும் உடல் உழைப்புப் பணிகள் சுமத்தப்பட்டு, ஆள்வோர் பிற பணிகளில் ஈடுபட முடியும். எனவே, அடிமைமுறை அரசியல் ஒன்றிய பண்பாகும்"** எனக் குறிப்பிட்டுள்ளார்.

அரிஸ்டாட்டில் தன் **'அரசியல்'** எனும் நூலில் அடிமைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

**"வீட்டை நிர்வகிக்க உதவும் பல சாதனங்கள், கருவிகளைப் போல, உயிருள்ள அடிமையும் ஒரு சாதனமாக அல்லது கருவியாக பயன்படுகிறான்"** எனக் கூறியுள்ளார்.

இதே தத்துவ ஞானிகள் வாழ்ந்த காலத்தில்தான் இவர்களின் நாட்டில் அடிமைகளை நிர்வாணமாகச் சிங்கத்துடன் மோத விட்டு, அவன் கிழித்துக் கொல்லப்படுவதைப் பார்த்து ஆதிக்க வர்க்கத்தினர் ரசித்து வந்தார்கள். அப்போது இந்தத் தத்துவ ஞானிகள் அக்கொடுமைகளுக்கு எதிராக வாயைக்கூடத் திறக்க வில்லை என்பதும் கிரேக்க வரலாறு.

இந்தத் தத்துவ ஞானிகளைப் போன்றே இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் ஒரு தத்துவஞானி என எழுத்தாளர்களில் சிலர் சித்தரிக்கிறார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்), பிற தத்துவ ஞானிகளைப் போல மனித இனத்திற்கெதிரான அல்லது நடைமுறைக்குச் சாத்தியமற்ற தத்துவங்களை உதிர்க்கவில்லை. இறைவன் அவர்களுக்குக் கொடுத்த செய்தியை மட்டுமே உலக மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். சுயமாகத் தத்துவங்களை உதிர்த்த 'தத்துவஞானி' என அவர்கள் போற்றப்படவில்லை. சாக்ரடீஸின் மாணவர் பிளாட்டோ; பிளாட்டோவின் மாணவர் அரிஸ்டாட்டில். இது உலகறிந்த உண்மை. ஆனால், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) யாருக்கும் மாணவராக இல்லை. அவருக்கு நான்தான் ஆசான் என யாரும் கூறியதில்லை. அதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. இறைவன்தான் அவர்களுக்கு ஆசான். மக்களுக்கு அவர் ஆசான் என்ற நிலைதான் நீடித்தது; நீடிக்கவும் செய்கிறது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) வாழ்ந்த காலகட்டத்தில் சமூகத்திற்கு எதிரான பல கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. இருந்தாலும் அவர்கள் இறைத்தூதர் என்பதால் அது சம்பந்தமாக இறைவனின் கட்டளைகள் வரும் வரை தாமாக எவ்விதக் கட்டளையும் பிறப்பிக்கவில்லை, எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இறைவனிடமிருந்து செய்தி வந்த பின்னரே சமூகத்திற்கு எதிரான கொடுமைகளைக் கடுமையாக எதிர்த்தார்கள். இறைவனின் தயவைத் தவிர்த்து வேறு எவரின் தயவையும்



அவர்கள் எதிர்பார்த்ததில்லை. அவ்வாறே, இறைக்கட்டளை களுக்குச் செயல்வடிவம் தருவதில் தாமதமோ, தயக்கமோ காட்டியதில்லை. இன்னதைச் சொன்னால், செய்தால் எதிர்ப்புகள் வலுப்படுமென அஞ்சியதில்லை; யோசித்ததில்லை. ஆதிக்கவர்க் கத்தினரை அண்டி வாழும் தத்துவ ஞானிகளுக்கும் இறைத்தூதர் களுக்கும் உள்ள வேறுபாடு இவ்வாறே காணப்படுகிறது.

அன்றைய அரபு மக்களின் கடும் கொடுமைகளில் சிக்கித் தவித் தோர் வரிசையில் அடிமைகளும் அடங்குவர். கிரேக்க தத்துவ ஞானிகள் தத்துவங்கள் பேசினார்கள். ஆனால், சமூகக் கொடுமைகளுக்கு ஆதரவாகவும் இருந்தார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) சமூகக் கொடுமைகளுக்கு எதிராக தத்துவங்களை மட்டும் உதிர்த்துவிட்டு மௌனம் காக்கவில்லை. அடிமைகளை நிரந்தரமாக விடுவிப்பதற்கு இறைவன் காட்டிய வழியைச் செயல்முறைப்படுத்துவதில் மிகத் தீவிரமாய் இருந்தார்கள். எந்த ஒரு விஷயத்திலும் இறைவன் தற்காலிகத் தீர்வைத் தரவில்லை; நிரந்தரமான தீர்வைக் கொடுத்தான். "நமக்கு விடியல் என்று?" என்ற கேள்விக்கு இறைச்செய்தியில் இடமில்லை. எதிலும் உடனடித் தீர்வு; அதுவும் நிரந்தரத் தீர்வு. இதுதான் இறைத்தூதரின் வாழ்க்கைமுறை.

"இறைநம்பிக்கையாளன் ஒருவன் மற்றோர் இறை நம்பிக்கை யாளனைக் கொலை செய்வது ஆகுமானதன்று. மாறாக, தவறு தலாக அவ்வாறு கொலை செய்தால் இறை நம்பிக்கையுள்ள ஓர் அடிமையை விடுதலை செய்தல் வேண்டும்."[46]

"ஒருவர் தன் மனைவியுடன் உறவு கொள்ளக் கூடாதென்பதற்காக அவளைத் தன் தாய்க்குச் சமமெனக் கூறி, அதன் பின்னர், மீண்டும் அவளுடன் தாம்பத்ய உறவை விரும்பினால், வசதி இருக்கும் பட்சத்தில் ஓர் அடிமையை விடுவிக்க வேண்டும்."[47]

அடிமைகளை விடுதலை செய்வதற்காக 'ஜகாத்' எனும் முஸ்லிம் களின் பொதுநிதியைப் பயன்படுத்தலாம்.[48]

ஈடுபெற்றோ, உபகாரமாகவோ அடிமையை விடுதலை செய்யலாம்.[49]

---

46. காண்க! திருக்குர்ஆன் 4:92
47. காண்க! திருக்குர்ஆன் 58:15
48. காண்க! திருக்குர்ஆன் 9:60
49. காண்க! திருக்குர்ஆன் 24:33

ஓர் அடிமையை விடுவித்தல் தன்னை நரகத்தை விட்டுக் காப்பதாகும்.[50]

பல அடிமைகளை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) விடுவித்து தாம் ஒரு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் இக்கொள்கைத் தாக்கத்தால் அவர்களின் மனைவி ஆயிஷா(ரலி) அவர்களும், தோழர்கள் அபூபக்கர்(ரலி), அப்பாஸ்(ரலி), அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி), அப்துர் ரஹ்மான்(ரலி) முதலியோரும் அடிமைகளை விலைக்கு வாங்கி விடுதலை செய்துள்ளார்கள். இது வரலாற்று ஏடுகளின் நிலைத்து நிற்கும் சான்றுகள். இதன் தொடர்ச்சியாகத் தான் இன்று முஸ்லிம்களிடம் அடிமைகளே இல்லாத சூழல் உருவாகியுள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் **ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன்** தம்முடைய ஆட்சிக் காலத்தில், கருப்பு நிற அடிமைகள் எழுபதாயிரம் பேரை ஒரே நேரத்தில் விடுவித்து உலக மக்களை வியப்பில் ஆழ்த்தினார். ஆபிரகாம் லிங்கன் அவர்களின் இச்சேவை பெரிதும் போற்றுதலுக்குரியதே. ஆனால், அடிமைகளை விடுவிப்பதற்கு நிரந்தரத் தீர்வைக் கூறவில்லை. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு அடிமைகளை விடுவிப்பதற்கான நிரந்தரத் தீர்வை இறைவன் அளித்தான். அதற்கு அவர்கள் செயல்வடிவம் கொடுத்தார்கள். மேலும் அடிமைகள் உருவாகும் காலமெல்லாம் அவர்களை விடுவித்துக் கொண்டே இருப்பதற்கு இறைக்கட்டளைப்படி வழியும் காட்டினார்கள்.

இஸ்லாமை சரிவர அறியாமல் நுனிப்புல் மேய்ந்தவர்கள், இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரிக்கிறது என குற்றம் சுமத்துகிறார்கள். அவர்களின் குற்றச்சாட்டுப்படி இன்று முஸ்லிம்களிடம் அடிமைகளே இல்லை என்பதே அவர்களின் தவறான புரிதலுக்கு சரியான பதிலாகும். இஸ்லாமில் அடிமை முறை தற்காலிகமானது; நிரந்தரமானது அல்ல.

**அடிமைகள் மூன்று வழிகளில் உருவாக்கப்படுகிறார்கள்.**

1. சுதந்திரமாக இருக்கும் ஒருவனை அதிகார வர்க்கம் பிடித்து விற்பனை செய்வது. இது கடந்த காலங்களில் நடந்தது; இன்றும் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

2. இந்த இரண்டிற்கு அப்பாற்பட்டு வகுப்புவாத அடிப்படையில்

50. காண்க! திருக்குர்ஆன் 90:10-13



ஒரு மனிதன் இன்னொரு மனிதனை அடிமைப்படுத்தும் நிலையும் காணப்படுகிறது. இந்த அடிமைத் தனம் சற்று வீரியம் குறைந்தது எனலாம். ஆனாலும், அடிமை அடிமைதான் என்பதில் மாற்றமில்லை.

3. போரில் பிடிபட்ட எதிரி நாட்டைச் சேர்ந்தவர்களை அடிமைகளக்குதல்.

மேற்கண்டதில் முதல் இரண்டு அடிமைத் தனத்தை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை. அவ்விரண்டையும் ஒட்டுமொத்தமாக ஒழித்துக் கட்டிவிட்டது. மூன்றாவது அடிமைமுறை காலச் சூழலுக்கு ஏற்றவாறு நிர்ப்பந்த நிலையில் உருவாகும் வாய்ப்பை பெற்றதாகும். இருந்தாலும், அந்த அடிமைகளையும் விடுதலை செய்வதற்கான வழிமுறைகளைத்தான் இறைவனும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களும் கூறியுள்ளார்கள்.

தத்துவ ஞானிகளில் பலர் பல விஷயங்கள் குறித்து வாயே திறக்கவில்லை என்பது ஒரு பக்கமிருக்கட்டும் அவர்கள் போதித்ததை யாவது சாதித்தார்களா என்பதும் கேள்விக்குரியதாகவே உள்ளது.

தத்துவஞானிகளில் பலரின் தத்துவங்கள் அவர்களின் வாழ்க்கையில் கூடச் செயல்வடிவம் பெறாமல் போயிருக்கின்றன.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தம் வாழ்க்கையில் சாதித்ததையே போதித்தார்கள். போதித்த ஒவ்வொன்றையும் சாதித்து காட்டினார்கள். அவர்கள் மனித இனத்திற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார்கள்.

இறைநம்பிக்கையாளர்களே! நீங்கள் செய்யாததை ஏன் சொல்கிறீர்கள். நீங்கள் செய்யாததை கூறுவது இறைவனிடம் பெரும் வெறுப்புடையதாகும்.[51]

இறைவனின் இக்கட்டளை இறைத்தூதர்(ஸல்) முதல் இறைநம்பிக்கையாளர்கள் அனைவருக்கும் இடப்பட்டதாகும்.

தத்துவஞானிகளால் போதிக்கப்பட்ட சித்தாந்தங்களும், அறிவுரைகளும் செயல்வடிவம் பெற்றிருந்தால் மட்டுமே அவை அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கை முறை எனக் கருதப்படும். செயல்வடிவம் பெறாத சித்தாந்தங்கள் மனித வாழ்க்கையில் அங்கீகாரம் பெறுமெனக் கூறமுடியாது.

51. காண்க! திருக்குர்ஆன் 61:2,3

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு இறைவன் அளித்த திருக்குர்ஆன் கி.பி. 6-ம் நூற்றாண்டில் ஒரு சீரிய சமுதாயத்தை உருவாக்கியது. அச்சமுதாயம் உலகிற்கே வழிகாட்டியாகத் தன் வாழ்க்கையை அமைத்தது. அதற்கு முழுமையான மற்றும் முதன்மையான காரணமாக இறைவேதம் திருக்குர்ஆன் திகழ்ந் துள்ளது. இது யாரும் மறுக்க முடியாத வரலாற்று உண்மை.

அன்று வாழ்ந்த அந்த முஸ்லிம் சமுதாயத்தைப் போல இன்றைய முஸ்லிம் சமுதாயத்தின் வாழ்க்கை நிலை ஏன் இல்லையென்ற கேள்வி எழலாம். இஸ்லாம் என்ற பெயரால் அனாச்சாரங்கள் அரங்கேறும்போது இது மாதிரியான கேள்விகளுக்கு விடை அளிப்பது கடமைதான்.

ஓர் உண்மையை விளங்கவேண்டும். முஸ்லிம்களென்ற பெயரி லிருக்கும் வேடதாரிகளும், இஸ்லாம் குறித்து அறியாத பாமரர் களுமே இவ்வாறு உள்ளனர். உண்மையிலேயே இஸ்லாமை அதன் தூயவடிவில் பின்பற்றும் முஸ்லிம்களிடம் இன்றும் சீரிய பண்புகள் அனைத்தும் காணப்படுகின்றன. முஸ்லிம்களில் பலர் இஸ்லாமை அறியாததால் இன்றும் ஏதோ தாங்கள் ஒரு சாதியில் அல்லது மதவாதத்தில் இருப்பதாக எண்ணிக் கொள்கிறார்கள். அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழல்தான் இதற்கு முக்கியக் காரணமாக அமைந்துள்ளது.

மனித வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்குக் திருக்குர்ஆன் முழுமையான தீர்வைத் தராது என வாதிடுவோர், அதைவிடச் சிறந்த ஒன்றைக் காண்பித்தப் பின்னர் வாதிடுவதே நியாயமாகும். எந்த ஒரு விஷயத்திலும் இஸ்லாம் கூறிய தீர்வுக்கு மாற்றமாக சரியான ஒரு தீர்வை யாராலும் கொண்டு வரவே முடியாது. இது திருக்குர்ஆன் விடும் சவாலாகும்.

*நம் அடியாருக்கு (முஹம்மதுக்கு) நாம் அருளியதை (இவ்வேதத்தை) நீங்கள் சந்தேகித்து, (உங்கள் சந்தேகத்தில்) நீங்கள் உண்மையாளர் களாகவும் இருந்தால், அல்லாஹ்வைத் தவிர உங்களின் உதவியா ளர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு இதைப்போல ஓர் அத்தியாயமேனும் கொண்டுவாருங்கள்! நீங்கள் (அவ்வாறு) செய்யாவிட்டால்? (உங்களை என்ன செய்வது? உண்மையில்) உங்களால் செய்யவே முடியாது! (எனவே, தீய) மனிதர்களையும், கற்களையும் எரி பொருளாகக் கொண்டு, மறுப்போருக்காகவே தயாரிக்கப்பட்டுள்ள (நரக) நெருப்பை அஞ்சுங்கள்![52]*

52. காண்க! திருக்குர்ஆன் 2:23,24



இறைச்செய்தி - திருக்குர்ஆன் ஒரு வாழ்க்கைநெறியாகும். இது பக்திபரவசத்திற்கு மட்டும் உரிய வேதம் அல்ல. உலகை ஆளும் சட்டங்களை உள்ளடக்கியதே இறைச்செய்தி - திருக்குர்ஆன். இங்கு திருக்குர்ஆன் விடும் சவால் என்னவென்றால், இது இறைச்செய்தியல்ல; இறைச்சட்டமல்ல; இதனால் மனித வாழ்க்கையில் ஏற்படும் பிரச்னைகளுக்கு முழுமையான தீர்வைத் தரமுடியாது என நீங்கள் கருதினால், இதைவிட சிறந்த சட்டம், வாழ்க்கைநெறியை நீங்கள் கொண்டுவாருங்கள் என்பதுதான். இந்த சவாலுக்கு இன்றுவரை யாரும் பதில்கூறமுடியவில்லையே ஏன்?

இறைவனிடமிருந்து உயிரோட்டமுள்ள கொள்கை, வாழ்க்கைநெறி மற்றும் சட்டங்களைப் பெற்றுத்தந்த இறைத்தூதர் முஹம்மத்(ஸல்), தத்துவஞானிகளிடமிருந்து இவ்வாவே வேறுபட்டும் தனித்துவம் பெற்றுமுள்ளார்கள்.

## சிந்தனைப் புரட்சி

"மதம் விஞ்ஞானத்தின் எதிரி, மனிதர்களை மயக்கும் அபின் போன்ற போதை!" என்றதொரு கருத்தோட்டம் மார்க்ஸியச் சித்தாந்தம் என்றாலும் பலரின் இதயங்களை அது ஆக்கிரமித்துள்ளது.

ஐரோப்பியச் சிந்தனையாளர்களும், அவர்களின் சிந்தனையைக் கடனாகப் பெற்றுள்ள பிறநாட்டு அறிஞர்களில் சிலரும் மதங்களை விமர்சிக்கத் தவறியதில்லை. மார்க்ஸியத்தின் கணிப்பு ஓரளவு உண்மையும்கூட! ஏனெனில், ஐரோப்பியர்கள் வாழ்ந்த அப்பகுதியில் தான் அங்குள்ள விஞ்ஞானிகளின் அரிய கண்டுபிடிப்புகள் அங்கேயிருந்த அன்றைய மதவாதிகளால் முற்றாக நிராகரிக்கப் பட்டன. அந்த மதவாதிகள் விஞ்ஞான உண்மைகளை எதிர்த்தற்குக் காரணமுண்டு. பல ஆண்டுகளாய் உண்மை என நம்பிவந்த தங்களின் மதக்கோட்பாடுகளுக்கு எதிராகவே விஞ்ஞான உண்மைகள் அமைந்திருந்தன. மதவாதிகளின் கடின அச்சுறுத்தலால் விஞ்ஞானிகள் பலர் தங்களின் கருத்துக்களையும், கண்டுபிடிப்புக் களையும் வெளிக்கொண்டுவராமலேயே மடிந்திருக்கிறார்கள்.

பூமி சூரியனைச் சுற்றி வருகிறதென்ற உண்மையை கிருஸ்துவத் திருச்சபைக்கு எடுத்துரைக்கப் பயந்து மறைமுகமாகச் சிலரிடம் மட்டுமே தம் கருத்துக்களைச் சொல்லிவந்த **'கோபர்நிகஸ்'** பூமி தட்டையானதல்ல, உருண்டையானதென்ற உண்மையைச் சொன்னதற்காகச் சிறையில் அடைக்கப்பட்ட **'கலீலியோ'**

போன்ற விஞ்ஞானிகளுக்கும், மதவாதிகளுக்கும் இருந்த வெறுப்புணர்வு வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

**'மதம்'** என்ற முட்டுக்கட்டையைத் தகர்த்தெறிந்த பின்னரே ஐரோப்பா விஞ்ஞானத்தில் வீறுநடை போட்டது. ஆனால், ஐரோப்பாவின் விஞ்ஞான மேன்மைக்கு வித்திட்டதே இஸ்லாம் தான். விஞ்ஞான உண்மைக்கு நேர்மாறாக உள்ள பிற மதங்களைப் போன்று இஸ்லாமிய மார்க்கம் இல்லை. இன்றளவும் விஞ்ஞானச் சொற்கள் பல அரபிமொழியில் அமைந்து இந்த உண்மையை உரைக்கின்றன.

இதற்கொரு சிறிய உதாரணமாக, *The Random House Dictionary of the English Language Complied by: Lawrance Urdang-p Al-Gebra (Ap), Al-Chemy Chemistry* (அல்கெமி), *Al-Cohol* (ஆல்கஹால்), *Al-kali* (அல்கலி), *Al-Gorithm* (அல்காரிதம்) போன்ற சில விஞ்ஞானச் சொற்களைக் குறிப்பிடலாம். சுருக்கமாகக் கூறினால் *`Marguis'* என்னும் அறிஞர் தம் *`Speeches Delivered in India'* என்னும் நூலில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

*``It is to musalman science, to musalman art and to musalman literature that Europe has been in a great means indebted for its extrication from darkness of the middle ages."*

"ஐரோப்பா இடைக்காலத்தில் அறியாமை எனும் இருளை விட்டு வெளிவரக் காரணமாக முஸ்லிம்களின் கலை, முஸ்லிம்களின் விஞ்ஞானம், முஸ்லிம்களின் இலக்கியம் இருந்தன. இவற்றிற்கு ஐரோப்பா பெருமளவில் நன்றிக்கடன் பட்டிருக்கிறது."

இதிலும் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், ஐரோப்பிய நடைமுறைக்கு நேர்மாறாகச் செயல்பட்ட அதே கி.பி 6-ம் நூற்றாண்டிலிருந்து கி.பி 14-ம் நூற்றாண்டு வரையில் விஞ்ஞானத்தின் தூண்டுகோலாகத் திகழ்ந்தது இஸ்லாமிய நாகரிகமேயாகும்.

அறிவுப்பூர்வமாக சிந்திப்பது மதநம்பிக்கைகளுக்கு ஆபத்தை விளைவிக்குமென்ற காரணத்தால் மதவாதிகள் மக்களின் அறிவுக்குத் திரைபோட்டிருக்கிறார்கள். ஆனால், இஸ்லாம் சிந்தனைக்கு முக்கியத்துவம் அளித்த காரணத்தால் அன்றைய அரபு மக்களில் பலர், பல விஞ்ஞானச் சாதனைகளைப் புரிந்துள்ளார்கள்.

சீன, கிரேக்க நாகரிகங்கள் விஞ்ஞான மேன்மைக்குத் தங்களின் பங்கை அளித்ததுபோன்று, இஸ்லாமிய நாகரிகமும் தன் பங்கை



அளித்துள்ளதுபோலும் என இதைச் சாதாரணமாக எடுக்க முடியாது. ஏனெனில், சீன, கிரேக்க நாகரிகங்களின் வளர்ச்சிக்குப் பின்னால் ஒரு தனிமனிதனின் தாக்கமோ, கொள்கையோ காரணமாக இருந்ததெனச் சொல்வதற்கில்லை! இந்நாகரிகங்கள் படிப்படியாக முன்னேறின. பலரின் உழைப்பையும் பெற்ற பின்பே வெற்றியடைந்தன.

அன்றைய அரேபியர்கள் பல்லயிரக்கணக்கான ஆண்டுகள் பூமியில் வாழ்ந்த சமுதாயமானாலும் கி.பி. 6-ம் நூற்றாண்டிற்குப் பின்னரே அவர்கள் பிற மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் முன்னேற்றத்தை அடைந்தார்கள். அந்த ஆறாம் நூற்றாண்டில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தங்களின் தூதுத்துவத்தைப் பரப்பிய பின்னரே இத்தகைய விஞ்ஞானச் சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் பிறப்பிற்கு முன் அரபு சமுதாயம் எந்த ஒரு போற்றுதலுக்குரிய செயலுக்காகவும் பேசப்பட்டதே கிடையாது. எனவே, ஒரு தனிமனிதரின் தாக்கமே அன்றைய அரபு முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு அடித்தளமிட்டுள்ளது தெளிவாகிறது. அந்த இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) எனும் தனிமனிதரின் பிறப்பு அரபுலகின் இயற்கைச் சூழலில் ஏதேனும் மாற்றத்தை ஏற்படுத்தியதா என்றால், அதுவுமில்லை. சீன, கிரேக்க நாடுகள் இயற்கை வளத்தைப் பெற்றிருப்பதுபோன்று அரபுலகம், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் பிறப்பிற்கு முன்பும் அவர்கள் வாழ்ந்த காலத்திலும் பெற்றிருக்கவில்லை. பாலைவனமும், மணல்குன்றுகளும்தான் அன்றைய அரபு மக்களின் சொத்தாய் இருந்தது.

அவர்கள் **'அரபியர்கள்'** என்ற இன உணர்வால் தூண்டப்பட்டு, பின்னர் வளர்ச்சியடைந்தார்களென்றும் கூறுவதற்கு வரலாற்றில் இடமில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை, மொழி மற்றும் இன உணர்வு ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டதாகவே காணப்படுகிறது. அனைவரும் இறைவனின் அடிமைகள் என்பதை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மக்களின் மனதில் ஆழமாகப் பதித்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) இறைவனிடமிருந்து பெற்றுத் தந்த இஸ்லாமிய மார்க்கமே அரபு மக்களின் இத்தகைய சாதனைகளுக்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தியது.

சிந்திப்பது பாவமென்று காலம் காலமாக கருத்துகளை மதவாதிகள் பரப்பிவந்தார்கள். ஆனால், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) இதை அங்கீகரிக்கவேயில்லை. மக்களனைவரும் சிந்திக்க வேண்டுமென்றே பணித்தார்கள். திருக்குர்ஆனும் சிந்தனையைத்தான் தூண்டுகிறது.

ஒட்டகம் அது எவ்வாறு படைக்கப்பட்டுள்ளதென்றும், வானம்! அது எவ்வாறு உயர்த்தப்பட்டிருக்கிறதென்றும், மலைகள் அவை எவ்வாறு நடப்பட்டுள்ளனவென்றும், பூமி அது எவ்வாறு விரிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர்கள் சிந்திக்க வேண்டாமா?[53]

விலங்கியல் (Zoology), புவியியல் (Geography), வானவியல் (Astronomy) ஆகியவற்றைப் பற்றிச் சிந்திக்குமாறு திருக்குர்ஆன் கட்டளை யிடுகிறது. மேற்கண்ட வசனங்கள் மட்டுமல்ல இன்னும் ஏராளமான வசனங்கள் மனிதனைச் சிந்திக்கத் தூண்டுவதைத் திருக்குர்ஆனில் காணலாம். அனைத்துத் துறைகளிலும் இறை நம்பிக்கையாளர்கள் தங்கள் சிந்தனையைச் செலுத்தவேண்டும் என்பதை இஸ்லாம் கடமையாக்கியுள்ளது.

ஒட்டகம் அது எவ்வாறு படைக்கப்பட்டுள்ள தென்பதைச் சிந்திக்க வேண்டாமா என்ற இறைவனின் கேள்வி, ஒட்டகத்தின் வெளித் தோற்றத்தையே குறிக்கிறது என இதைச் சாதாரணமாக கருதக்கூடாது. ஒட்டகம் படைக்கப்பட்டுள்ள அதிசயத்தையும், அதன் உள் உறுப்புகள் குறித்த ஆய்வுகளையும் மேற்கொள்ளத் திருக்குர்ஆன் அடியெடுத்துக் கொடுக்கிறது.

அது மட்டுமல்லாமல் இங்கு ஒட்டகமென்று குறிப்பிடப்பட்டுள்ள தால், அதை மட்டுமே ஆய்வு செய்ய வேண்டும் என்பதில்லை. மாறாக, விலங்கியலை (Zoology) உள்ளடக்கிய அனைத்துக் கால் நடைகளையும் ஆய்விற்குட்படுத்த வேண்டும் என்றும் அது பொருள் தருகிறது. அன்றைய அரபு மக்களுக்கிடையில் அதிக பரிச்சயமான கால்நடையாக ஒட்டகம் இருந்த காரணத்தால் இறைவன் இதை உதாரணமாகக் குறிப்பிட்டுள்ளான்.

இவ்வாறே வானங்கள் மற்றும் பூமி குறித்த ஆய்வினையும் மேற்கொள்ள வேண்டுமென இறைவன் குறிப்பிட்டுள்ளான்.

உங்களுக்குள்ளேயே (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன; (அவற்றை) நீங்கள் உற்று நோக்க வேண்டாமா?[54]

53. காண்க! திருக்குர்ஆன் 88:17-20
54. காண்க! திருக்குர்ஆன் 51:21



மேற்கண்ட வசனத்தில் இறைவன், மனிதனுள்ளிருக்கும் அதிசயங்கள் பற்றிய ஆய்வை மேற்கொள்ளச் சொல்கிறான். சுருங்கச் சொல்வதானால், மனித சமுதாயத்தில், (Anatomy and Physiology) உடற்கூறுயியல் மற்றும் உடற்செயலியல் படித்த அதாவது இன்று மருத்துவர்கள் (Doctors) எனக் கூறப்படுவோரும் உருவாக வேண்டும் என்பதையும் இறைவன் கூறுகிறான்.

"நீங்கள் ஏன் சிந்திப்பதில்லை, அவர்கள் ஏன் சிந்திப்பதில்லை" என்ற வினாவைத் திருக்குர்ஆன் 56-க்கும் மேற்பட்ட இடங்களில் எழுப்பியுள்ளது. சிந்தனைக்கும், அறிவுத்திறனுக்கும் இஸ்லாம் கொடுத்துள்ளது போன்ற முக்கியத்துவத்தை வேறு எந்தச் சிந்தாந்தமும் கொடுக்கவில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மக்களுக்கிடையில் இறைத்தூதை எடுத்துவைத்தபோதெல்லாம் பலமுறை, **"நீங்கள் சிந்திக்க வேண்டாமா அவர்கள் சிந்திக்க மாட்டார்களா?"** என்ற கேள்வியுடனேயே கொள்கையை முன்வைத்தார்கள். "நான் கூறும் கொள்கைகளை, கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளுங்கள்" என அவர்கள் கூறியதே இல்லை.

இக்கருத்தைப் பிரதிபலிக்கும் முகமாக உலகப்புகழ் பெற்ற `Readers digest' வெளியிட்ட `The last Two million years' எனும் நூலில் `The great civilization' என்ற அத்தியாயத்தில் பக்கம் 15-ல் உள்ளதை குறிப்பிடலாம்.

***The Self Sufficient World***

*Islamic Civilization was a product of many minds, of many races. But their individual talents might easily have gone to vast had it not been for the genius of Mohamed...*

*...During the five centuries when Arabic was the international language of silene a man could live a full, useful and rich life within the world of Islam, with no thought for the darkness outside.*

## தன்னிறைவான உலகம்

இஸ்லாமிய நாகரிகம் என்பது பல்வேறு இன, மொழி, கலாச் சாரத்தைச் சார்ந்த மக்களின் சங்கமம். ஆனால், இம்மக்களின் அனைத்து முன்னேற்றமும் முஹம்மத்(ஸல்) அவர்களின் ஞான வழிகாட்டுதல் இல்லாமல் நடந்தேறியிருக்காது.

விஞ்ஞானத்தின் சர்வதேச மொழியாக அரபுமொழி இருந்த ஐந்து நூற்றாண்டுகளில் ஒரு சராசரி மனிதனால் பிற மக்களின் எதிர்மறையான தாக்கத்திலிருந்து தன்னைக் காத்துக் கொண்டு, முழுமையான, கம்பீரமான வாழ்வை இஸ்லாமிய உலகிற்குள் வாழமுடிந்தது.

சாதனைகள் படைத்த விஞ்ஞானிகளைச் சாடிய மதத்தலைவர்கள் வரலாற்றில் மிகைத்து இருந்தார்கள். எந்த இறைவன் படைப்புகளைப் படைத்தானோ அதைப் பற்றிச் சிந்திக்கத் தடை செய்யும் விதமாக, இறைத்தூதர்கள் எப்படிச் செயல்பட்டிருக்க முடியும்? எனவேதான், விஞ்ஞானத்திற்குப் பெரும் பங்காற்றிய மகத்துவமிக்க சமுதாயத்தை உருவாக்கியவர்களாக இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மிளிர்ந்துள்ளார்கள். இதனால்தான், அவர்கள் இறைவனால் அனுப்பப்பட்ட தூதர் மற்றும் விஞ்ஞான உலகின் ஆசான் என முஸ்லிம் சமுதாயம் அவர்களை போற்றிக் கொண்டிருக்கிறது.

## விஞ்ஞான உலகின் வழிகாட்டி

14 ஆம் நூற்றாண்டு வரை உலகில் விஞ்ஞான உண்மைகளைச் சொல்வதற்கு மதம் ஒரு தடைக் கல்லாக இருந்தது. கிருத்துவத் திருச்சபை இதற்கு சாட்சி. சிந்திப்பதற்கக்கூட மனிதனுக்கு உரிமை மறுக்கப்பட்டுவந்தது. இந்தக் காலககட்டத்தில் சிந்திப்பதற்கும், விஞ்ஞான உண்மைகளைச் சொல்வதற்கும் உலகளவில் மனிதனுக்கு முழுமையான சுதந்திரத்தை இஸ்லாம் மட்டுமே வழங்கி வந்தது. இந்தச் சுதந்திரம் நிரந்தரமானது. காரணம் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு இறைவனின் வழிகாட்டுதல் இருந்தது.

இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு இறைவன் வழங்கிய இறுதி வேதம் திருக்குர்ஆன் மனிதனின் சிந்தனையைத் தூண்டுகிறது, விஞ்ஞானத்திற்கு வித்திட்டு வழிகாட்டுகிறது. அவற்றில் எம் சிற்றறிவுக்கு எட்டியதில் சில வசனங்கள் மட்டுமே இங்கு பதிவு செய்யப்படுகின்றன.

14 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஒருவர் தொட்டு ஒருவர் என விஞ்ஞானிகள் உருவானது உண்மை. ஆனால், அவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தது யார் என்பதுதான் முக்கியம்.

**ஆதிமனிதன் களி மண்ணிலிருந்து (Adam Created From Clay)**

முதன்முதலாக மனிதன் படைக்கப்பட்டது மற்றும் களி மண் (Clay) குறித்து திருக்குர்ஆன் பின் வருமாறு கூறுகிறது.



உங்களைக் களி மண்ணிலிருந்து இறைவன்தான் படைத்தான், பின்னர் உங்களுக்குத் தவணையையும் ஏற்படுத்தினான். குறிக்கப்பட்ட தவணையும் அவனிடமே உள்ளது. இதன் பிறகும் நீங்கள் சந்தேகப்படுகிறீர்கள்.[55]

களி மண்ணில் உள்ள தாதுப் பொருள்களின் மீது தற்போது ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. மனித மரபணு உருவாவதற்கு க்ரியா ஊக்கியாக இந்தத் தாதுப் பொருள்கள் செயல்படுவதாக இந்த ஆராய்ச்சி கூறுகிறது.[56]

ஆதி மனிதனின் படைப்பு களி மண்ணிலிருந்துதான் என்ற ரகசியத்தை இறைவனின் வழிகாட்டுதல் இல்லாமல் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு தனி மனிதர் கூறுவது சாத்தியமற்றதே. ஆனால், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) கூறினார்கள். காரணம், அவர்கள் இறைவனின் இறுதித்தூதர் இறைவனின் வழிகாட்டுதலின் படியே இவ்வாறு கூறினார்கள்.

**கருவியல் (Embryology)**

மனிதனின் படைப்பு குறித்து திருக்குர்ஆன் கூறும் இன்னொரு அதிசயத்தைப் பாருங்கள்!

களி மண்ணில் உள்ள சத்திலிருந்தே நாம் (ஆதி) மனிதரைப் படைத்தோம்.

பின்னர் அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம்.

பின்னர் அந்த விந்துத்துளியை **'அலக்'** எனும் தொங்கும் நிலையில் ஆக்கினோம். அதன் பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக ஆக்கினோம். பின்னர் அத்தசைப் பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம். பின்னர், அந்த எலும்புகளுக்கு சதையை அணிவித்தோம். பின்னர் அதனை வேறு ஒரு படைப்பாய் ஆக்கினோம். இவ்வாறு படைத்த பாக்கியமிக்க அல்லாஹ் மிக அழகிய படைப்பாளன்.[57]

**'நுத்ஃபா'** என்னும் சொல் ஆணின் விந்தைக் குறிக்கிறது. மனிதன் விந்திலிருந்து படைக்கப்பட்டான் என்பதை திருக்குர்ஆன் 11

55. காண்க! திருக்குர்ஆன் 6:2
56. காண்க! *Understanding the Earth a new synthesis' - G.C. Brown P 438*
57. காண்க! திருக்குர்ஆன் 23:12-14

இடங்களில் குறிப்பிடுகிறது. ஆணின் விந்தில் முப்பது இலட்சம் உயிரணுக்கள் உள்ளன. அவற்றில் ஒன்று மட்டுமே பெண்ணின் சினை முட்டையுடன் சேர்ந்து, அது குழந்தை உருப்பெறுகிறது.

ஆணின் உயிரணுவும், பெண்ணின் சினை முட்டையும் இணைந்த பின்பு அது ஒரு மனித உயிராகிவிடுகிறது. அது அங்கிருந்து கருவறைக்குப் பயணமாகி, அதன் சுவற்றைப் பற்றிக் கொண்டு அட்டைப் பூச்சி போல் தொங்குகிறது. இந்த நிலையைத்தான் திருக்குர்ஆன் **'அலக்'** எனக் குறிப்பிடுகிறது.

அட்டைப் பூச்சிபோல் தொங்கும் நிலைக்கு அரபுமொழியில் **'அலக்'** என்பர். கருவின் **'அலக்'** எனும் ஆரம்ப நிலை தோற்றத்திலும் செயலிலும் அட்டைப் புழுவை ஒத்திருக்கிறது என ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்துகின்றன.[58]

அதன் பின்னர், **'முள்கா'** என்னும் நிலைக்கு கரு மாறுகிறது. இந்த நிலையில் கரு சதைத் துண்டு போல காட்சியளிக்கிறது. அதாவது பற்களால் மென்ற சதைபோல் இருக்கிறது. கருவின் இந்த நிலையைத்தான் திருக்குர்ஆன் **'முள்கா'** எனக் குறிக்கிறது

இந்த மூன்று நிலைகளில் மருத்துவ விஞ்ஞானம் இன்று வரை எந்த மாற்றத்தையும் காணவில்லை என்பது உண்மை.

தற்போதைய மருத்துவர்கள் போல இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) உடற்கூறுயியல், உடலியல் மற்றும் பெண்ணோயியல் (Anatomy, Physiology and Gynecology) படித்த மேதை அல்ல என்பதை அனைவரும் அறிவர். மனிதக் கருவின் உருவம் எப்படி இருக்கும் என்பதை யாருமே அறிந்து கொள்ள முடியாத அந்த 7 ஆம் நூற்றாண்டில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களால் மட்டும் எப்படி இவ்வளவு தெளிவாகச் சொல்லமுடிந்தது. இறைவனின் வழிகாட்டுதல் இல்லாமல் இப்படிப்பட்ட செய்திகளை ஒருவர் அறிவித்தல் என்பது நினைத்துக் கூட பார்க்க முடியாது ஒன்று.

### விலங்கியல் (Zoology)

விலங்கியல் குறித்து திருக்குர்ஆனில் ஏராளமான உண்மைகள் கூறப்பட்டுள்ளன. உதாரணத்திற்காக இங்கு பின்வரும் விஷயம் தரப்படுகிறது.

இறுதியாக, எறும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கிற்கு அவர்கள் வந்தபோது, "எறும்புகளே! ஸுலைமானும் அவரின் சேனைகளும்,

58. காண்க! நூல்: `The Developing human' - by Dr. Keith L. Moore 5/e P 8



அவர்கள் அறியாதிருக்கும் நிலையில் உங்களை நசுக்கிவிடாது இருக்க, உங்களின் வீடுகளுக்குள் நுழைந்து கொள்ளுங்கள்!" என ஒரு பெண் எறும்பு கூறியது.[58A]

இங்கு ஓர் எறும்பின் தகவல் பரிமாற்றம் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. எறும்பின் மூளையில் கோடிக்கணக்கான நரம்புகள் உள்ளன. அவற்றின் மூலமாக அவை தகவல் பரிமாற்றங்கள் நிகழ்த்துகின்றன.[59]

எறும்புகள் பேசுவதில்லை; தகவல் பரிமாற்றம் Transmitter and Receiver) மட்டுமே செய்கின்றன என்பதும், எறும்புகளுக்கு தலைமை வகிப்பது பெண் எறும்பே என நவீன விஞ்ஞானம் கூறுகிறது.

அந்த 7 ஆம் நூற்றாண்டில் விலங்கியல் (Zoology) குறித்த அறிவை யார் பெற்றிருந்தார்? இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு மட்டும் இந்த விஷயம் தெரிகிறது என்றால் அது இறைவழி காட்டுதலைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

### வானவியல் (Astronomy)

பூமியிலுள்ள அனைத்தையும் உங்களுக்காகப் படைத்தவனே, பின்னர் வானங்களைப் படைக்க நாடி அவற்றை ஏழு வானங்களாகச் சீரமைத்தான். அவன் ஒவ்வொன்றையும் நன்கறிந்தவன்.[60]

இன்றைய நவீன விஞ்ஞானம் வான்வெளியை ஏழு அடுக்குகளாகப் பிரித்துள்ளது. அவை முறையே,

*1. Troposphere, 2. Stratosphere, 3. Mesosphere, 4. Thermosphere, 5. Exosphere, 6. Ionosphere, 7. Magnetosphere*[61]

இறைவன் குறிப்பிடும் ஏழுவானங்கள் இவையே என்பதை நாம் உறுதிபடுத்தாவிட்டாலும் வானங்களில் ஏழு அடுக்குகள் உள்ளன என்பது உறுதியான செய்தி என்பதை மறுக்கமுடியாது. 7ஆம் நூற்றாண்டில் இந்த ரகசியத்தை அறிவித்தல் வியப்பல்லவா?

### புவியியல் (Geography)

அல்லாஹ்வே ஏழு வானங்களையும், அவற்றைப் போல பூமியையும் படைத்தான். அவற்றிற்கிடையில் கட்டளைகளை இறக்கிக் கொண்டே இருக்கிறான். அல்லாஹ்வே ஒவ்வொரு பொருளின் மீதும் சக்தி உடையவன் என்பதையும், அல்லாஹ் தன் ஞானத்தால்

58A. காண்க! திருக்குர்ஆன் 27:18
58. காண்க! `The Ants' by Bert Holldobler & Edward O.Wilson p 227.
60. காண்க! திருக்குர்ஆன் 2:29
61. காண்க! `Atmospheric layers' by. Michael Pidwirny 1996.

ஒவ்வொரு பொருளையும் உறுதியாகச் சூழ்ந்தறிகிறான் என்பதையும் நீங்கள் அறிவதற்காக.[62]

வானங்களில் இருப்பதுபோல பூமியிலும் ஏழு அடுக்குகள் உள்ளன என நவீன விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். அவை

*1st layer: Lithosphere (water), 2nd layer: Lithosphere (land), 3rd layer: Asthenosphere, 4th layer: Upper Mantle, 5th layer: Inner Mantle, 6th layer: Outer Core, 7th layer: Inner Core*[63]

உங்களுடன் பூமி அசையாதிருப்பதற்காக, அதன் மீது உறுதியான மலைகளை நிறுத்தினான். இன்னும், நீங்கள் சரியான வழியை அறிவதற்காக அவன் ஆறுகளையும், இயற்கைப் பாதைகளையும் அமைத்தான்; அடையாளங்களையும் (அமைத்துள்ளான்). நட்சத்திரத்தைக் கொண்டு அவர்கள் (பயணிகள்) வழிகளையும் அறிகிறார்கள்.[64]

இன்னும், இப்பூமி அவர்களுடன் சாயாதிருக்கும் பொருட்டு, அதில் நிலையான மலைகளை அமைத்தோம். அவர்கள் நேர்வழி பெறும் பொருட்டு, விசாலமான இயற்கைப் பாதைகளையும் அமைத்தோம்.[65]

மலைகள் பூமிக்குள் *(Verify the crust)* ஆழமாக ஊன்றப்பட்டுள்ளதால் பூமி அசையாதிருக்கிறது.[66]

### Big Crunch Theory

எழுதப்பட்ட ஏடுகளைச் சுருட்டுவதைப்போல் வானத்தை நாம் சுருட்டிவிடும் அந்நாளில், முதலில் படைப்புகளை ஆரம்பித்ததைப் போலவே அதனை மீட்போம். இது நம் மீதுள்ள வாக்குறுதி. நிச்சயமாக இதனைச் செய்வோம்.[67]

இந்த அகிலம் முழுமையாக ஒரு நாள் சுருங்கி அழிந்துவிடும் என பல விஞ்ஞானக் கோட்பாடுகள் *(Big Crunch Theory)* இன்று முன்வைக்கப்படுகின்றன.[68]

62. காண்க! திருக்குர்ஆன் 65:12
63. காண்க! *"Inside the Earth,"* http://pubs.usgs.gov/publications/text/inside.html.
64. காண்க! திருக்குர்ஆன் 16:15,16
65. காண்க! திருக்குர்ஆன் 21:31
66. காண்க! *The Earth' - by Frank press and Siever - P 435.*
67. காண்க! திருக்குர்ஆன் 21:104
68. காண்க! *Philip Ball, "Black Crunch Jams Universal Cycle," NATURE, 23 December 2002*



### பெருவெடிப்புக் கொள்கை *(Big bang theory)*

ஒவ்வொரு பொருளையும் இறைவன்தான் படைத்தான். பின்னர் அவற்றை அதனதன் அளவுப்படி அமைத்தான்.[69]

இதற்கு ஓர் உதாரணம்: பெருவெடிப்புக் கொள்கையின் *(Big bang theory)* படி இந்த உலகம் விரிவடைந்தபோது ஒருநொடிப் பொழுதேனும் காலதாமதம் ஏற்பட்டிருப்பின் இந்த உலகில் எதுவும் உருவாகி இருக்காது என இன்றைய அறிவியல் ஆராய்ச்சி தெரிவிக்கிறது. ஆனால் அனைத்தும் இறைவனின் குறிப்பிட்ட திட்டப்படி நடந்தேறின.[70]

பின்னர் வானம் புகையாய் இருக்கும் நிலையில் அவன் (அதைப்) படைக்க நாடினான். எனவே, "நீங்கள் விருப்புடனாயினும் அல்லது வெறுப்பிருப்பினும் வாருங்கள்" என அவன் அதற்கும் (பூமிக்கும்) கூறினான். "விருப்பத்துடனேயே வருகிறோம்" என அவை இரண்டும் கூறின.[71]

இந்த அகிலம் எவ்வாறு உருவானது என்பது குறித்து பலகோட்பாடுகள் தற்போது முன்வைக்கப்படுகின்றன. அவற்றுள் பெருவெடிப்புக் கொள்கை (Big bang theory) அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இந்த அகிலம் முழுமையும் புகை மண்டலமாய் இருந்து பின்னர் அவை வெடித்துச் சிதறி இன்றைய அண்டம் (Universe) உருவானதென்றும், இவையனைத்தும் தற்போது விரிவடைந்து கொண்டே செல்கின்றன என்றும் இக்கொள்கை கூறுகிறது.

அவனே ஏழு வானங்களையும் அடுக்கடுக்காகப் படைத்தான். அளவற்ற அருளாளனின் படைப்பில் குறையை நீர் காண மாட்டீர்! பின்னர், பார்வையை மீட்டிப்பார்! ஏதாவது பிளவைக் காண்கிறாயா? பின்னர் இரண்டு முறை உன் பார்வையை மீட்டிப் பார்! உன் பார்வை களைத்து, சிறுமையடைந்து உன்னிடமே திரும்பும்.[72]

எவ்விதக் குறையுமின்றி செவ்வையாக இவ்வுலகை இறைவன் படைத்துள்ளான் என்பதற்கு விண்வெளி ஒரு சான்றாகும். ஒரு நட்சத்திரக் கூட்டத்தில் *(Galaxy)* சுமார் 20 முதல் 30 கோடி நட்சத்திரங்கள் உள்ளன. இவற்றில் ஒவ்வொன்றும் சுற்றிக் கொண்டிருக்கிறது. நம் சூரிய குடும்பம் *(Solar system)* மணிக்கு 7,20,000 கிமீ

69. காண்க! திருக்குர்ஆன் 25:2
70. காண்க! *`A Brief history of time' - by Stephen Hawkins p 121-125.*
71. காண்க! திருக்குர்ஆன் 41:11
72. காண்க! திருக்குர்ஆன் 67:3,4

வேகத்தில் சுழல்கிறது. இது இன்று விஞ்ஞானிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.[73]

**Mantle Convection**

வெடிப்பை உடைய பூமியின் மீதும் சத்தியமாக![74]

பூமியின் மேல் பகுதி தாவரங்கள் வளர்வதற்காக வெடிக்கிறது. இவ்வாறே எதுவும் முளைக்காத போது பூமியின் உள்ளேயும் பல வெடிப்புகள் உள்ளன. எரிமலை வெடிப்பு இந்த வெடிப்புகளுக்கு இடையில்தான் நிகழ்கிறது. இதனை *Mantle Convection* என்பார்கள்.[75]

**சூரியனும் நகர்கிறது**

சூரியனும் தன் தங்கும் இடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக் கிறது; இது மிகைத்தவனும், நன்கறிந்தவனும் விதித்ததாகும்.[76]

சூரியன் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு அங்கேயே நிற்கிறது என முந்தைய விஞ்ஞானம் கூறியது. சூரியன் தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருக்கிறது; அத்துடன் சூரிய குடும்பம் ஒட்டு மொத்தமாக நகர்ந்து சென்றுகொண்டிருக்கிறது என இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது.

சூரியன் நிலவையும் பிடிக்க முடியாது; இரவு பகலை முந்த முடியாது. இவ்வாறே ஒவ்வொன்றும் தன் சுழற்சிப் பாதையில் (*Orbits*) நீந்திச்செல்கின்றன.[77]

ஒவ்வொரு கோளும் தம் வட்டயறைக்குள் (*Orbits*) சுழன்று சுற்றுகிறது என்பதை தந்போதைய விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. வானவியல் தொடர்பான இந்த ரகசியங்களை 7 ஆம் நூற்றாண்டில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தவிர யார் அறிந்திருந்தார்?

**பூமிக்குள் எரிபொருள் (Petrol)**

பின்னர், **அவற்றை உலர்ந்த கூளங்களாய்** ஆக்கினான்.[78]

73. காண்க! *`The Anthropic Principle: Laws and Environment' - by: George F. Ellis, p - 30.*

74. காண்க! திருக்குர்ஆன் 86:12

75. காண்க! *"Tetsuzo Seno, Satoru Honda, "Mantle Convection and The Global Sea Level: When Did Plate Tectonics Begin on The Earth?" www.eri.u-tokyo.ac.jp/seno/sealevel_abst.html; "Mantle Convection," http://theory.uwinnipeg.ca/mod_tech/node195.html; Prof. Zaghloul El-Naggar, "Scientific Signs in the Qur'an: Examples from the Area of Earth Sciences, www.nekkah.com/Main/EngPage/Scientific_Signs_in_the_Quran.htm.*

76. காண்க! திருக்குர்ஆன் 36:38

77. காண்க! திருக்குர்ஆன் 36:40.

78. காண்க! திருக்குர்ஆன் 87:5



இவ்வசனத்தில் இடம்பெற்றுள்ள **'குஸாஅன்'** எனும் வார்த்தைக்கு **உலர்ந்த மற்றும் வாந்தி எடுத்தல்** என்று பொருள். ஒரு காலத்தில் மடிந்த தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் மக்கிய பொருட்கள் பூமியின் அடியில் தங்கியிருப்பதிலிருந்தே இன்று பெட்ரோல் (அவற்றின் வாந்தியாக) வெளியாகிறது.

**மேகங்கள் ஒன்று கூட்டப்படுதல்:**

(தூதரே!) நீர் பார்க்கவில்லையா? நிச்சயமாக அல்லாஹ் மேகத்தை மெதுவாய் இழுத்து, அவற்றை ஒன்றிணைத்து, அதை ஒன்றன் மீது ஒன்றாக்கி, அதன் பின்னர் அவற்றின் நடுவிலிருந்து மழையை வெளியாக்குவதைப் பார்க்கிறீர்! அவன் வானத்தில் (மேகங்களி லிருந்து), மலைகளிலிருந்து பனிக்கட்டியையும் இறக்கி வைக்கிறான். அதை, தான் நாடியவர்களின் மீது விழச்செய்கிறான். தான் நாடியவர்களைவிட்டு அதை விலக்கியும் விடுகிறான். அதன் மின்னல் பார்வையினைப் பறிக்க நெருங்குகிறது.[79]

மழை பொழிவதற்கு முன்னர் அது (*Cumulus - Growing - Joining together - Stacking*) ஆகிய நிலைகளைக் கடப்பதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.[80]

மேகங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கப்படுவதை 7 ஆம் நூற்றாண்டில் அறிந்தவர் யார்?

திருக்குர்ஆனிலும், நபிமொழிகளிலும் விஞ்ஞானத்திற்கு வித்திட்டுள்ள செய்திகள் ஏராளம். சில செய்திகள் மட்டுமே இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் நாம் முன்வைக்கும்போது, முஹம்மத்(ஸல்) எதார்த்தமாய் இவ்வாறு கூறியிருக்கலாம் என சில அறிவு(?) ஜீவிகள் மளுப்புவதுண்டு.

ஏதோ ஓரிரு செய்திகள் விஞ்ஞானத்துடன் ஒத்துப்போனால் இவர்களின் வாதம் நியாயமாக இருக்கலாம். ஏராளமான செய்திகள் விஞ்ஞானத்திற்கே வித்திட்டுள்ளதை இவர்கள் எப்படி மறுக்க முடியும்? முழுப் பூசணியைச் சோற்றில் மறைக்க முடியுமா என்ன!

இஸ்லாமிய பங்களிப்புடன்தான் இந்த உலகம் 7 ஆம் நூற்றாண்டிற்குப் பின் விஞ்ஞானத்தில் வீறுநடைபோட்டு வருவதை உலக ஆய்வாளர்களும் வரலாற்று ஆசிரியர்களும் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

79. காண்க! திருக்குர்ஆன் 24:43

80. காண்க! *`Elements of Meterology' - by Miller & Thampson P 141,142*

ஆனால், **உண்மை செருப்பணியும் முன்பு பொய் உலகத்தையே சுற்றிவந்துவிட்டது.** என்னதான் பொய் உலகத்தைச் சுற்றினாலும் பொய்மை ஓங்காது; உண்மை தூங்காது. சத்தியம் வெல்லும்; வென்றே தீரும்.

## தூதுத்துவம் சிந்தனைக்கு எதிரானதா?

கடந்த சில காலங்களாகவே முஸ்லிம் அறிஞர்களில் பலர் கம்யூனிஸத்தை எதிர்த்து பேசியும், எழுதியும் வந்தார்கள். தற்போது கம்யூனிஸம் மரணப்பிடியில் சிக்கியுள்ளது. தெளிவாகச் சொல்வதானால் மார்க்ஸ் கண்ட கனவான கம்யூனிஸம் இன்னும் முழுமையாக உருப்பெற்றதேயில்லை. கம்யூனிஸம் கொடி கட்டிப் பறந்த ரஷியாவில்கூட தன்னுடைய செல்வாக்கை இழந்து நிற்கும் நிர்பந்தத்திற்குள்ளாகிப்போனது.

முஸ்லிம் அறிஞர்களின் தற்போதைய பார்வை மேற்கத்திய வாழ்க்கை *(Westernism)* மற்றும் கலாச்சாரத்தின் மீது பாய்கிறது. இக்கொள்கை மற்றும் கலாச்சாரத்தை எதிர்க்கும் முஸ்லிம் அறிஞர்கள் சிலரின் எழுத்தில் சற்று தடுமாற்றம் இருக்கலாம்; ஆனால், இஸ்லாமில் இல்லை. மேற்கத்திய கொள்கை மற்றும் கலாச்சாரத்தை எதிர்ப்பதோடு அவர்களின் தொழில் நுட்ப சாதனைகளையும், சாதனங்களையும்கூட (Technology) எதிர்க் கிறார்கள். தங்களின் தாய்நாடு இந்தியாவின் சுதந்திரத்திற்காக ஆங்கிலேய அரசை எதிர்த்து முஸ்லிம்கள் போராடியபோது, முஸ்லிம் அறிஞர்களில் பலர், ஆங்கிலம் கற்பதைக்கூட 'ஹராம்' (தடுக்கப்பட்டது - குற்றம்) என தீர்ப்பளித்தார்கள்.

உண்மையிலேயே இவர்கள் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை ஏற்பவர்களாக இருப்பின் அவர்கள் போதித்த இறைச்சட்டங்களுக்கு எதிரான கொள்கைகள், சித்தாந்தங்கள் மற்றும் கலாச்சாரங்களை மட்டுமே விமர்சித்திருப்பார்கள். அவர்களின் தொழில் நுட்பங்களையும், அரிய கண்டுபிடிப்பு களையும் சாடியிருக்கமாட்டார்கள்.. ஏனெனில், விஞ்ஞான அறிவை இஸ்லாம்தான் உலகிற்கு புகட்டியது. அது ஒருபோதும், கலைகளையும், தொழில நுட்பங்களையும் எதிர்த்ததில்லை.

முஸ்லிம்களில் சிலரின் தவறான நடவடிக்கைகளால் ஒட்டு மொத்த இஸ்லாமையும் குறையுள்ளதாய் எண்ணும் வாய்ப்புண்டு. உண்மை யில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் போதனைகள் இன்று நாம் எண்ணுவது போல தவறான வழியைக் காட்டவில்லை.



இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மதீனா வந்தடைந்த, 18வது மாதத்தில் நிகழ்ந்த 'பத்ர்' போரில் பலர் யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு மதீனா கொண்டு வரப்பட்டார்கள். அவர்களில் பலர் தங்களின் உறவினர்களால் ஈட்டுத்தொகை கொடுக்கப்பட்டு இஸ்லாமிய அரசிடமிருந்து மீட்கப்பட்டார்கள். சிலர் ஈட்டுத் தொகை கொடுப்பதற்குத் வழியின்றி தத்தளித்தார்கள். அப்போது அவர்கள் பயின்றிருந்த கல்வியை மதீனா தேசத்தின் முஸ்லிம்களுக்கு கற்றுக் கொடுத்துவிட்டு, விடுதலையாகிச் செல்லலாம் என்ற சலுகையை மதீனாவின் அதிபர் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) வழங்கினார்கள். அதற்கிணங்கிய யுத்தக் கைதிகள் தாங்கள் கற்றிருந்த கல்வியை மக்களுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டு, விடுதலையானார்கள் என்ற செய்தியை இப்னு ஹிஷாம் உட்பட பல வரலாற்று அறிஞர்கள் எழுதிய நூல்களில் காணமுடிகிறது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டுதல் மனித சமூகத்தால் கடைபிடிக்கப்பட வேண்டியதாகும். மேற்கத்திய நாடுகள் பலதொழில் நுட்பங்களில் முன்னேறியுள்ளன. அவற்றைப் பெற்று, மனித சமுதாயத்தைப் பயன்பெறச் செய்வது முஸ்லிம்களின் கடமையாகும்.

மேற்கத்தியக் கொள்கைகள் மற்றும் கலாச்சாரங்களை எதிர்க் கிறோமென்ற பெயரில் அவர்களால் தயாரிக்கப்படும் உடைகள், எழுதுகோல்களையும், மின் உபயோகப் பொருட்களையும் இதர தயாரிப்புகளையும் பயன்படுத்தக்கூடாதென்றும் அவர்கள் போதிக்கும் விஞ்ஞானக் கல்வியைக் கற்கக்கூடாது என்றும் வாதிடுவது மனித சமூகத்திற்கு நன்மை செய்வதாகாது. உண்மையில் இது அறிவுக்குத் திரையிடுவதாகும். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மற்றும் திருக்குர்ஆனின் போதனைப்படி, உலகிலேயே மனிதன் தான் சிறந்த படைப்பு; பகுத்தறியக் கூடிய ஆற்றல் என்ற ஒன்று இருப்பதால் மட்டுமே மனிதனைச் சிறந்த படைப்பு எனப் புகழ்ந்து பேசுகிறோம்.

முதல் மனிதர் ஆதம்(அலை) அவர்கள் படைக்கப்பட்டதும், கல்வியைக் கொண்டே அவர்களுக்குச் சிறப்பு வழங்கப்பட்டது.

"ஒவ்வொரு பொருளின் பெயர்களையும் ஆதத்திற்கு இறைவன் கற்றுக் கொடுத்தான். பிறகு அவற்றை வானவர்களின் முன் வைத்து; உங்கள் கருத்து சரியானால், இவற்றின் பெயர்களைச் சற்று சொல்லுங்கள்" எனக் கூறினான்.

“குறை ஏதுமில்லா தூயவன் நீயே! நீ கற்றுக் கொடுத்ததைத் தவிர வேறெதுவும் எங்களுக்கு தெரியாது. உண்மையில் நீ மட்டுமே பேரறிவும் மிக்க ஞானமும் உடையவன்!” என (வானவர்கள்) கூறினார்கள்.

“ஆதமே! இவற்றின் பெயர்களை நீர் அவர்களுக்கு அறிவியும்” என இறைவன் கூறினான்.

அவற்றின் பெயர்களை அவர் அறிவித்ததும்,

“வானங்களிலும், பூமியிலும் (உங்களுக்கு) மறைந்து இருக்கக் கூடிய (உண்மைகள்) அனைத்தையும் நான் நன்கு அறிவேன். மேலும் நீங்கள் வெளிப்படுத்துபவற்றையும், மறைத்திருப்ப வற்றையும் நான் நன்கறிவேன் என உங்களிடம் நான் கூற வில்லையா?” என இறைவன் கேட்டான். அதன் பின்னர்,

“நீங்கள் ஆதத்துக்குப் பணியுங்கள்!” என வானவர்களுக்கு அவன் கட்டளையிட்டபோது, இப்லீஸைத் தவிர அவர்கள் எல்லோரும் பணிந்தனர். மேலும் அவன் (இறை) கட்டளையை மறுத்தான்; ஆணவமும் கொண்டான், (இதனால்) இறை மறுப்பாளர்களில் ஒருவனாகவும் ஆனான்.[81]

சில தலைவர்கள் தங்களின் சுயவிருப்பு வெறுப்புக்காக “இங்கு செல் இங்கு செல்லாதே! இதை வாங்கு இதை வாங்காதே!” என போதிக்கிறார்கள். இது மனித இயல்பு. இறைத்தூதர்களிடம் இப்படிப்பட்ட பண்புகளைக் காணமுடியாது. மனித குலத்தை அறிவு ரீதியாக மேம்படுத்துவதே அவர்களுக்கு இடப்பட்ட கட்டளையாகும். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அறிவுக்கு ஒருபோதும் தடைபோட்டதில்லை; அறிவியலுக்கு அவர்கள் அடித்தளமிட்டார்கள். அவர்களின் வரலாறு இதை இன்றும் மெய்ப்பிக்கிறது.

## தலைவர்களும் தொண்டர்களும்

அரசாள்பவர்கள் தங்களுக்குக் கீழிருப்போரை “அடிமைகளே!” என்றழைக்கிறார்கள். அவர்களும் இவர்களும் அகிலமெல்லாம் படைத்த இறைவன் ஒருவனுக்கு மட்டுமே அடிமை என்பதை மறந்துவிட்டார்கள் போலும்.

81. காண்க! திருக்குர்ஆன் 2:30-34



ஆன்மிகத் தலைவர்கள், தங்களுக்குக் கீழுள்ளோரைச் “சீடர்களே! பாவிகளே!!” என்றழைக்கிறார்கள். இவர்களென்ன பாவமே செய்யாத பரிசுத்தவான்களா?

அரசியல் தலைவர்கள், “தொண்டர்களே!” என்றழைக்கிறார்கள். இத்தலைவர்களுக்குத் தொண்டு செய்யத்தான் அவர்கள் பிறந்துள்ளார்களா?

இவ்வாறான அடிமை விலங்கு மனிதச் சிந்தனையில் வெகு காலங்களுக்கு முன்பிருந்தே போடப்பட்டுள்ளது. இதை உடைத் தெறியும் திறனுடையவர் எவருமில்லை. இதற்காக முயன்றோரின் உள்ளங்களே உடைக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக பலரின் இரத்தம் குடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றும் தீர்வு கிடைத்த பாடில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கையிலும், அவர்கள் கொண்டுவந்த திருக்குர்ஆனிலும் இவற்றிற்கெல்லாம் தெளிவாக தீர்வு இருக்கின்றன.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் இறைவனிடமிருந்து பெற்றுத்தந்த வாழ்க்கைநெறி அடிமை விலங்குகள் அனைத்தையும் தகர்த்துவிட்டது. அடிமைகளாக அடக்குமுறைக்குள்ளான பலர் இன்றைய அரபுலகின் கௌரவமிக்க குடிமக்களாக வாழ்கிறார்கள். அவர்களை இன்று யாரும் அடிமைகளென நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் காலத்தில் அடிமையாக இருந்து மீட்கப்பட்டவரான பிலால்(ரலி) தான் அன்றைய இஸ்லாமிய அரசின் நிதிமைச்சராக இருந்தார்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தம் தோழர்களுக்கிடையே செல்வந்தர், ஏழை, கருப்பர், வெள்ளையர், அடிமை, எஜமானர் என்ற எவ்வித வித்தியாசத்தையும் காண்பிக்கவில்லை. இறையச்சத்தில் மிகைத்தவர் மட்டுமே உயர்ந்தவரென்ற கொள்கையில் மிக உறுதியாயிருந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தம் தோழர்களைத் ‘தோழர்களே!’ என்பதைத் தவிர்த்து வேறு வார்த்தைகளால் ஒருபோதும் அழைத்த தில்லை. ஏன்? தம்மைத் திட்டிய எதிரியைக்கூட இழித்தோ பழித்தோ பேசியதில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் மீது அவர்களின் தோழர்கள் ஈடில்லா அன்பு கொண்டிருந்தார்கள். அவர்கள் அதற்காக இறைத்தூதரை சிலை வடித்து அதற்கு மாலையிட்டோ, படங்கள் வரைந்து பத்திகள் கொளுத்தியோ, உடலில் பச்சை குத்தியோ பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட முறையில் அன்பை வெளிப் படுத்தியதில்லை. இறைத்தூதரின் முந்நிலையில் கைகளைக் கட்டி நின்று நடிக்கவில்லை; காலில் விழுந்து ஏமாற்றவில்லை; இறைத் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களும் அதை அனுமதிக்கவில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் கட்டளையைத் தோழர்கள் அனைவரும் முறையாக நிறைவேற்றித் தங்களின் அன்பைக் காண்பித்தார்கள். இதுவல்லாத முறைகளில் அன்பைக் வெளிப்படுத்துகிறோமென்ற பெயரில் தம் சமுதாயம் வழிதவறிச் செல்வதை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) ஒருபோதும் அனுமதிக்க வில்லை. தம்மை ஓர் இறைத்தூதரென்ற தரத்திற்குமேல் உயர்த்து வதை ஷிர்க் - இறைவனுக்கு இணைவைத்தல் என்னும் பெரும் பாவமென்றும், அதற்கு இறைவனிடம் மன்னிப்பே இல்லை என்றும் தம் தோழர்களை எச்சரித்து வந்தார்கள்.

இன்றைய சூழலில், நாங்கள் எங்களுடைய தலைவர்களின் மீது அன்பு வைத்திருக்கிறோம் என்போர் பலர் தலைவர்களின் சிலைகள் மற்றும் படங்களின் மீதே போலியான அன்பு வைத்திருக்கிறார்கள். அவர்களின் அன்பு உள்ளத்தில் ஊன்றி தங்கள் தலைவர்களின் கொள்கைகளை நிலைத்திருக்கச் செய்யவில்லை. இன்றைய தலைவர்களில் சிலர் தங்களின் சிலைகளையும், படங்களையும் தாங்களே திறந்து வைத்து மகிழ்கிறார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் மீது அன்றைய தோழர்கள் கொண்டிருந்த அன்பும் சரி, இன்றைய முஸ்லிம் சமுதாயம் கொண்டிருக்கும் அன்பும் சரி ஈடு இணையற்றது. இவர்கள் அனைவரும் இறைத்தூதர்(ஸல்) அவர்களைத் தங்கள் உயிரினும் மேலாக மதிக்கிறார்கள்.

இன்று இருக்கும் அனைத்துத் துறைகளின் தலைவர்களும் தங்களைப் பின்தொடர்வோரைக் காலில் விழவைத்து மகிழும் காட்சிகளும், வெட்கத்தையே இழந்து இவர்களின் கால்களில் விழுந்து தம்மைத்தாமே தரந்தாழ்த்தும் தொண்டர்களின் மடமையும் சுயமரியாதையுடன் இருப்போருக்கு வேதனையை அளிப்பதோடு தலைக் குனிவையும் ஏற்படுத்துகிறது.



இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களிடம் அவர்களின் தோழர்களில் ஒருவர் வந்து; “இறைத்தூதர் அவர்களே! நாங்கள் சிரியா நாட்டிற்குச் சென்றபோது, அங்குள்ள மக்கள் தங்கள் அரசரின் காலில் விழுகிறார்கள். ஆனால் அவரோ அதற்கு அருகதை அற்றவர். தங்களை எங்களில் மிகவும் உயர்ந்தவராகக் காண்கிறோம். எனவே, நாங்கள் தங்களின் காலில் விழலாம் தானே!” எனக் கேட்டார்.

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்), அதைத் தடை செய்து, வணக்கம் என்பது இறைவன் ஒருவனுக்கு மட்டுமே தவிர வேறு எவருக்கு மில்லை என்பதைத் தம் தோழர்களுக்கு உணர்த்தினார்களென்ற செய்தி இப்னு மாஜா எனும் நூலில் உள்ளது.

இன்றைய அரசியல் தலைவர்கள் லஞ்சம் பெற்றும், கொள்ளை யடித்தும், நிதியுதவியென்ற பெயரில் தம் தொண்டர்களிடம் கௌரவமாக நிதி பெற்றும் தங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி வருகிறார்கள்.

அரசியல் தலைவர்களின் மீது தொண்டர்கள் கொண்டிருக்கும் அன்பைவிடப் பலமடங்கு அன்பைத் தம் தோழர்களிடமிருந்து பெற்றிருந்த இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நினைத்திருந்தால், உலகப் பணக்காரர்களின் வரிசையில் இடம் பெற்றிருப்பார்கள். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்ய வில்லை. ‘ஸதகா’ மற்றும் ‘ஜகாத்’ எனும் பொது நிதியையும், தர்மப் பொருட்களையும், தங்களுக்கும் தங்களின் வாரிசுகளுக்கும் முற்றிலுமாகத் தடைசெய்துள்ளார்கள்.

ஒரு முறை மதீனா நகரில் ஜகாத் நிதி திரட்டப்பட்டு பேரீச்சம் பழத்தின் ஒரு பெரும் குவியல் குவிக்கப்பட்டிருந்தது. அப்போது இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் பேரப்பிள்ளையான ஹஸன்(ரலி) அங்கு வருகிறார். பேரீச்சம்பழத்தின் பெரும் குவியலைப் பார்த்த அவர் அதிலிருந்து ஒரு பழத்தை எடுத்துச் சாப்பிடுகிறார். அதைக் கண்ணுற்ற இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அதைத் துப்பிவிடுமாறு கூறி; “தர்மப் பொருட்களை நாம் சாப்பிடக் கூடாது என்பது உனக்குத் தெரியாதா?” எனக் கேட்டார்கள் எனும் செய்தி புகாரீ மற்றும் முஸ்லிம் எனும் நூல்களில் காணப்படுகிறது.

ஹஸன்(ரலி) அப்போது சிறு குழந்தைகள்தான். இது பொதுநிதி என்பதைப் புரிந்துகொள்ளும் வயது அவருக்கு இல்லை. எனவே தான் அதை எடுத்து உண்ண முற்பட்டார். அதனால் பாதிப்பு ஏதும்

ஏற்படப்போவதில்லை. இருப்பினும்கூட இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அதைத் தடுத்து, மனித சமுதாயத்தில் தமக்குப் பின்பு வரும் தலைவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) குறித்து, "அவர்கள் என்னிடமே அதிகமான பிரியத்துடனிருந்தார்கள்'' என்றே அவர்களின் தோழர்கள் குறிப்பிடும் அளவிற்கு இறைத்தூதரின் அன்பு இருந்தது. உலக வரலாற்றில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு நிகராக ஒரு தலைவர் இருந்தாரென்று எவரைத்தான் கூறமுடியும்? இறைத்தூதுத்துவமே அவர்களை இந்த அளவிற்கு உயர்த்தியது.

இறைத்தூர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை களங்கமற்ற வெளிச்சத்தைப் போன்று வெளிப்படையானது. அதில் பார்வையைச் செலுத்துபவர்கள் அப்பழுக்கற்ற தூய்மையைத்தான் காண்பார்கள். அந்த தூய்மையைக் கண்டு இன்றைய அகிலமே வியந்துநிற்கிறது.

இச்சிறப்பு இந்த உலக வாழ்க்கைக்கு மட்டுமல்ல, மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்க்கைக்கும் அவசியமென்பதே இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கை.

## ஆன்மிகம்

இறைவனை அடைவதற்கும், அவனைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் ஒவ்வொரு சமூகமும் குறிப்பிட்ட மகான்களை, ரிஷிகளைப் பின்பற்றுகிறது. இந்த மகான்களையும் ரிஷிகளையும் இறைவனின் அவதாரம் என அந்தச் சமூகங்கள் எண்ணுகின்றன. ஒவ்வொரு கூட்டத்திற்கும் இப்படி மகான், ரிஷி இருப்பது போன்று இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களும் முஸ்லிம்களின் மகான் அல்லது ரிஷி என சிலர் எண்ணுகிறார்கள். இவர்களின் கணிப்பு தவறானது.

## அரங்கமும், அந்தரங்கமும்

மிகச்சொற்பமானவர்களைத் தவிர பலஆன்மிகத் தலைவர்களின் வாழ்க்கை இரண்டு பக்கங்களுடையதாகவே இருக்கிறது. அரங்கம் ஒன்று! அந்தரங்கம் மற்றொன்று! எனவேதான், இன்று ஆன்மிகவாதிகளென அழைக்கப்படும் சிலர் வெளியில் பல கதைகளைச் சொல்லி, அதிசயங்களை(?) நிகழ்த்துகிறார்கள்.

தான் பிறந்த மண்ணில் தன்னைப் பற்றி எல்லோரும் அறிந்திருப்பதால், தன் கருத்து அங்கு தன் கருத்து எடுபடாது என்ற காரணத்தால் பெரும்பாலான ஆன்மிகவாதிகள் தன்னைச் சுற்றி இருப்போரைத் தவிர்த்து, பிறரை நாடிச் செல்கின்றனர். இவர்களைப் பற்றிய ஆரம்பகால உண்மை (வரலாறு)களை அறியாத மக்கள் மட்டுமே இவர்களைப் பின்பற்றுவார்கள்.



உதாரணமாக, சென்ற இருபதாம் நூற்றாண்டில் சலசலப்பை ஏற்படுத்தி, தன்னைப் பின்பற்றும் மக்கள் கூட்டத்தை உருவாக்கிய **'ஓஷோ'** என்றழைக்கப்படும் ரஜினிஷைக் குறிப்பிடலாம். ஒஷோ மத்தியப் பிரதேசத்தில் **'ருட்சுவாடா'** எனும் ஊரில் பிறந்தார். ஆனால், அவர் சர்ச்சைக்குரிய ஆன்மிக அறைகூவலிட்டது அமெரிக்காவில்! ஒஷோ இந்தியாவில் இருக்கும்போது தன்னை ஒரு பெரும் ஆன்மிகவாதியாக, தத்துவஞானியாக அறிமுகம் செய்தார். ஆனால் சிலகாலம் கழித்து,

"*I am the beginning of a new Religious Consciousness*"

"ஒரு நவீன மதத்தின் மனசாட்சிக்கு நான் ஆரம்பமாவேன்" என "*I say unto you*" எனும் நூலில் '*About Osho*" எனும் அத்தி யாயத்தில் ரஜினீஷ் குறிப்பிடுகிறார். இதை அவர் அமெரிக்காவில் கூறினார். தன்னை இந்தியாவில் இவ்வாறு அவர் ஏன் அறிமுகம் செய்யவில்லையென்றால், **தத்துவ இயலில்** தன் இளங்கலைப் பட்டப் படிப்பை இந்தியாவில் கற்ற பின்னர் சில ஆண்டுகள் தத்துவ இயல் துறையில் **ஜபல்பூர் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக ரஜினீஷ் பணியாற்றினார்.** இச்செய்தி மேற்குறிப்பிட்ட நூலில் காணப்படுகிறது. ஆனால், அங்கு அவர் தன்னை மகானாகக் காட்டவில்லை.

ஒஷோவின் சிந்தனைகளெல்லாம் சுய ஞானத்தால் உதித்தவை அல்ல. கல்வி ஞானத்தால் வந்தவை என்பதைச் சக மனிதர்கள் அறிந்திருந்த காரணத்தால் ஓஷோவின் சிந்தனைகள் இந்திய மக்களிடம் அங்கீகாரம் பெறவில்லை. 'ரஜினீஷ்' என்ற தனி மனிதர் மட்டுமல்லர், பெரும் ஆன்மிகவாதிகளின் போதனைகள்கூட, இலாப நோக்கிலிருக்கும் அவர்களின் நெருங்கிய சுற்றத்தாரிடமோ தொலைதூர மக்களிடமோதான் அரங்கேறுகின்றன.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) இதில் வித்தியாசப்படுகிறார்கள். மேலும் அவர்கள் ஓர் ஒப்பற்ற ஆன்மிகத் தலைவராகவும் திகழ்ந்து. இன்று வரை எல்லோராலும் பின்பற்றப்படுகிறார்கள்.

"*No one is a Hero in his Homeland concept MOHAMMAD*"

"தாய்மண்ணில் தலைவராக முஹம்மதைத் தவிர எவரும் அங்கீகரிக்கப்பட்டதில்லை".

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மக்களிடம் தம் கொள்கையை எடுத்து வைத்தபோது, அதை உண்மையென முதலில் ஏற்றவர்கள் அவர்களின் நெருங்கிய நண்பர்கள் உறவினர்கள் மட்டுமே. ஆனால், அதில் அவர்கள் இந்த உலகில் அதற்காக எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்கவில்லை. இறைப் பொருத்தம் ஒன்றை மட்டுமே நோக்கமாகக் கொண்டார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) கூறினார்களென்றால் அது உண்மை தான். எனவே அங்கு மறுபரிசீலனைக்கு இடமில்லை, அதற்கு எவ்வித அத்தாட்சியும் தேவையில்லையென ஏகத்துவக் கொள் கையை ஏற்றவர்களின் முதன்மை வகித்தோர் அவர்களின் நெருங்கிய நண்பர் அபூபக்கர்(ரலி) அவர்களும், உறவுக்காரர் அலீ(ரலி) அவர்களும்தாம்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் கொள்கைக்கு மக்களுக்கிடையில் கடும் எதிர்ப்பு இருந்தது உண்மையே. ஆனால், அவர்களில் பலர் உண்மையை விளங்கி இருந்தும் வறட்டுக் கௌர வத்திற்காக இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை எதிர்த் தார்கள். ஆனால், எதிர்த்த அதே மக்கள் குறுகிய காலத்தில் அவர்கள் உயிர் வாழ்ந்தபோதே அவர்களை முழுமையாக ஏற்றுக் கொண்டார்கள்.

## மக்களைக் கவர்ந்த விதம்

இறைவன் எமக்கு அருட்செய்துள்ளான். நான் உங்களுக்கு வழிகாட்டுகிறேன்(!) என்றுரைத்த ஆன்மிகவாதிகள் மக்களிடம் வித்தைகள் காட்டியே அவர்களை வியப்படையச் செய்தனர்.

திடீரென்று புகழ்பெற்ற கம்பெனியின் கைக்கடிகாரங்களை வரவழைப்பதும், எலுமிச்சைப் பழங்களை வரவழைப்பதும், மல்லிகைப்பூ சிந்தவைப்பதும் இன்றைய ஆன்மிகத் தலைவர்களின் சாதனைகளில் பிரபலமானவை. இவர்களைப் பொருத்த மட்டும் அகிலங்களை எல்லாம் படைத்துப் பாதுகாக்கும் இறைவனின் சக்தி இவ்வளவுதான் போலும். இவர்களின் செயல்கள் பார்ப்பதற்கு அதிசயமாக இருந்தாலும் சிந்தித்தால் சிரிப்புதான் வரும்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) வித்தைகளைக் காட்டி மக்களை மயக்கிய மந்திரவாதி அல்லர்.

“மக்களே! என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு அதிசயங்களைக் காட்டுகிறேன்; உங்களைப் பற்றிய மறைவான விஷயங்களை உங்களுக்குச் சொல்கிறேன்; உங்கள் எதிர்காலம் செல்வச் செழிப்புற வகை செய்கிறேன்” எனக் கூக்குரலிட்டு எவரையும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அழைத்ததே இல்லை. மாறாக,



“என்னிடம் இறைவனின் பொக்கிஷம் இருக்கிறது. புதையல் இருக்கிறதென்று நான் கூறவில்லை. மறைவான விஷயங்களை நான் அறிந்தவனென்றும் நான் கூறவில்லை. நான் ஒரு ‘வானவர்’ என்றும் கூறவில்லை. நான் உங்களைப் போன்று மனிதனே. நான் இறைவனின் தூதர். உங்களை அச்சுறுத்தி எச்சரிக்க வந்திருப்பவன். எனவே, நீங்கள் உங்களைப் படைத்த அந்த ஒரே இறைவனை மட்டுமே வணங்குங்கள். அவனுக்கு மட்டுமே கட்டுப்படுங்கள். அவனை அஞ்சி வாழுங்கள். கல்லையும், மண்ணையும், மரத்தையும் நீங்கள் வணங்கி, உங்கள் அறிவுக்கு நீங்களே திரை போட வேண்டாம். நீங்கள் வணங்கும் இந்தச் சிலைகள் உங்களைப் படைத்தனவா? அல்லது நீங்கள்தான் அவற்றைப் படைத்தீர்களா? என்னையும், உங்களையும், நமக்கு முன்பிருந்தோரையும் படைத்த அந்த ஒரே இறைவனை மட்டும் நான் வணங்கச் சொல்கிறேன்!” எனக் கூறித்தான் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மக்களைத் தன் பக்கம் அழைத்தார்கள்.

ஆன்மிகத் தலைவர்களில் வேறு சிலர் மனிதர்களை விட்டும் தங்களை வித்தியாசப்படுத்தி பெயர் பெற்று மக்களைக் கவர்ந்துள்ளார்கள்.

அவர்களின் உடை வித்தியாசமானது; இருப்பிடம் வித்தியாச மானது; பேச்சுமுறை வித்தியாசமானது; ஏன்? அவர்களின் வாழ்க்கையே முன்னுக்குப் பின் முரணானது.

வேறு சிலர் பெண்ணின் வாழ்க்கை மற்றும் வாடைகூடத் தம் மீது படக்கூடாதென்று கூறித் தம்மை மனிதர்களிலிருந்து வித்தியாசப் படுத்திக் காண்பித்துள்ளார்கள். இதற்கு உதாரணமாக முனிவர் களையும், ரிஷிகளையும் குறிப்பிடலாம். இவர்கள் காடு மேடுகளைச் சுற்றித் தங்களையே மாய்த்தவர்கள். மக்கள் தொடர்பை அறுத்தவர்கள். இவர்களால் மக்களுக்குத் தீர்வு ஏதும் கூற முடியுமா? உண்மையில், இவர்களின் வாழ்க்கை அறிவுபூர்வமானதன்று. இவர்களின் வாழ்க்கையைப் பின்பற்றினால் குறுகிய காலத்திற் குள்ளேயே மனித இனம் முற்றாக அழிந்துவிடும். மனித இனப் பெருக்கம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் இணைந்தால் மட்டுமே சாத்தியம். ஆனால், பெண் வாடையே கூடாது என மனித இனத்தை அமைதியாக அழிக்கும் திட்டத்தையே இவர்கள் அறிமுகம் செய்துள்ளார்கள். இது எந்த வகையில் மனித

இனத்திற்கு வழிகாட்டும் செயலாகும்? இது ஒட்டுமொத்த மனித இனத்திற்கே சமாதிகட்டும் செயலல்லவா?

முனிவர்களும், ரிஷிகளும் தங்களை வித்தியாசப்படுத்திக் காண்பித்து மக்களைக் கவர்ந்தது போன்று இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) யாருடைய கவனத்தையும் கவரவில்லை மாறாக,

“நானும், உங்களைப் போன்று மனிதனே. நான் இரவில் விழித்திருந்து வணங்கவும் செய்கிறேன்; தூங்கவும் செய்கிறேன். உங்களையும் என்னையும் படைத்தவனுக்காக (பகல்) காலமெல்லாம் நோன்பும் நோற்கிறேன். நோன்பு நோற்றகாமல் இருந்து உண்ணவும் செய்கிறேன். நான் திருமணம் செய்து வாழ்கிறேன். இவ்வாறு செய்யாதவர் என்னைச் சார்ந்தவர் அல்லர்' என இறைத்தூதர்(ஸல்) தம் தோழர்களுக்கு உபதேசம் செய்தார்கள்” என அனஸ்(ரலி) அறிவித்தார்.[82]

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் மகனார் இப்ராஹீம் அவர்கள் சிறுவயதிலேயே இறந்துபோனார்கள். அப்போது அங்கு அமர்ந்திருந்த இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் கண்களில் நீர் தளும்பியது! இதைக் கண்ட அவர்களின் தோழர்களுக்கு வியப்பு! இவ்வளவு பெரிய மகான் அழுகிறாரே என்பது போல பார்க்கலாயினர். அப்போது முஹம்மத்(ஸல்) தோழர்களைப் பார்த்து ‘நானும் உங்களைப் போலவே பிள்ளைப் பாசம் கொண்ட மனிதனே' என்பதை உணர்த்தினார்கள் என அனஸ்(ரலி) அறிவித்தார்.[83]

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கையை எந்தவொரு கோணத்தில் ஆய்வு செய்தாலும், அவர்கள் தம்மைப் பிற மனிதர்களிடமிருந்து வேறுபடுத்திக் காண்பித்து வந்தார்கள் என்பதற்கு துளியளவும் இடமே இல்லை. அவர்கள் தங்கள் நற்குணம் மற்றும் நற்செயலால் மட்டுமே பிற மனிதர்களை விட்டும் வேறுபட்டு உயர்ந்து காணப்பட்டார்கள்.

இறைவனின் மீது தாம் கொண்ட நம்பிக்கை மற்றும் அச்சத்தின் மூலம், எதார்த்தமான ஓரிறைக் கொள்கையை மிக ஆழமாகப் போதித்துத்தான், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) மக்களை இறைவழியில் ஈர்த்தார்களே தவிர, அதிசயத்தைக் கண்டு மயங்கும் மனிதனின் மனரீதியான பலவீனத்தைப் பயன்படுத்தி அல்ல!.

82. காண்க! ஸஹீஹ் அல் புகாரீ
83. காண்க! ஸஹீஹ் அல் புகாரீ, முஸ்லிம் மற்றும் அஹ்மத்



# ஆன்மிகவாதிகளின் ஆன்மிக அறிவு

“நான் உங்களுக்கு இறைவனிடத்திலிருந்து செய்தியைப் பெற்றுத் தருகிறேன்” எனக் கூறும் ஆன்மிகவாதிகள் உண்மையிலேயே இறைவனிடத்திலிருந்துதான் செய்திகளைப் பெற்றார்களா என்பது அறியப்படவேண்டிய ஒன்று. இதில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு முன்பிருந்தோரை இணைக்க இயலாது. ஏனெனில், அவர்களில் பலர் உண்மையிலேயே இறைத்தூதர்களாய் இருந்தார்கள். அவர்களைப் பிரித்தறிவது இயலாத ஒன்று. எனவே, அவர்களைப் பற்றிய விமர்சனங்கள் தவிர்க்கப்படுகின்றன.

இன்றைய மதங்களின் ஸ்தாபகர்கள் பல மதங்களின் கொள்கைத் துளிகளை ஒன்றிணைத்து, அவற்றிலிருந்து புதியதோர் மதத்தை உருவாக்கியுள்ளார்கள். இதற்கு உதாரணமாக சீக்கிய மத ஸ்தாபகர் **குருநானக்**கைக் குறிப்பிடலாம்.

“ He is Precocius and wellversed in Hindu Scriptures'' என்று `Major Religion of India' எனும் நூலில் `Sikhism' எனும் அத்தியாயத்தில் அதன் நூலாசிரியர் `SUSMA WEERAPERUAM' குறிப்பிடுகிறார்.

மேலும் குருநானக் மக்கா மற்றும் மதீனாவிற்குச் சென்றாரென்ற செய்தி, ‘GLIMESES OF WORLD RELIGIOUS' எனும் நூலில் ‘Sikhism' என்ற அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளது. இந்நூல் ‘JAICO PUBLISHING HOUSE' வெளியீடாகும். இதைப் போல் பல நூல்களில் மேற்கண்ட செய்தி காணப்படுகிறது. உண்மையில் இவர் மக்கா மற்றும் மதீனாவிற்குள் அனுமதிக்கப்பட்டாரா, இல்லையா என்ற வாதம் ஒருபுறமிருந்தாலும், இவர் இஸ்லாம் குறித்து அறிந்தவராகவே இருந்தார் என்பது தெளிவாகிறது. இதன் காரணமாக இவரால் உருவாக்கப்பட்ட **சீக்கிய மதம் இந்து மற்றும் இஸ்லாமியப் போதனைகளின் கலவையாகவே உள்ளது**.

இதே போல இந்து மதத்தின் பெரும் ஆன்மிகவாதி எனப்படும் **விவேகானந்தர்**கூட தன் குருவான **இராமகிருஷ்ண பரமஹம்ஸ**ரிடம்தான் ஆன்மிக ஞானம்(!) பெற்றார்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) பிற ஆன்மிகவாதிகளைப் போல எந்த குரு இடமும் கற்றதில்லை. எவரும் “நான் இவருக்குக் கற்றுக் கொடுத்தேன்” எனக் கூறவுமில்லை. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) தாமாகக் கற்பதற்கு அரபுமொழியில் எந்த வேதமும் அப்போது

இல்லை. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது. அதை திருக்குர்ஆன் கீழ்வருமாறு கூறுகிறது:

''அல்லாஹ்வையும், எழுதப்படிக்கத் தெரியாத தூதரான முஹம்மதையும் நம்புங்கள்'' என 'அல்அஃராஃப்' எனும் அத்தியாயத்தில் 158-வது வசனம் சான்று பகர்கிறது.

முஹம்மத்(ஸல்) முழுக்கமுழுக்க இறைவனின் தூதராகவே இருந்தார்கள். இறைவனிடமிருந்து மட்டுமே ஞானம் அனைத்தையும் அவர்கள் பெற்றார்கள்.

## ஆன்மிகவாதிகளின் வாழ்க்கை நிலை

வாழ்க்கையில் பொருளாதார மேம்பாட்டை அடைவதற்குச் சிலர் இரண்டு வழிகளைக் கையாள்கின்றனர். ஒன்று அரசியல், மற்றொன்று ஆன்மிகம்.

ஆம்! நேற்றுவரை பொருளாதாரத்தில் பின்தங்கிக் கீழ்நிலையில் இருந்தவர்கள், இன்று ஆன்மிகவாதிகளாக ஆனவுடன் சொகுசு வாகனங்களில் வலம் வருகிறார்கள். இவர்களின் ஞானவெளிப்பாடெல்லாம் சுயநலத்தின் அடிப்படையில்தான் தோன்றி இருக்குமோ எனும் சந்தேகத்தை இவர்களின் வாழ்க்கை முறை வலுப்படுத்துகிறது.

இந்த ஆன்மிகவாதிகள் தங்களின் சீடர்களாகச் செல்வந்தர்கள் மற்றும் அரசியல்வாதிகளையே தேர்ந்தெடுக்கிறார்கள். இவற்றை எல்லாம் நிரூபிக்கும் வகையில் இன்றும் பல நிகழ்வுகள் நடக்கின்றன.

இதற்கு உதாரணமாக இந்தியாவில் அரசியல் வழி தலைவர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் கட்டளையிடும் அளவிற்கு கணிசமான மக்களை பக்தர்களாகப் பெற்றிருந்த பாபாக்களில் ஒருவரைக் குறிப்பிடலாம். பெரும் செல்வம் கைவரப் பெற்ற அவர்,

*``AVOID POM, EXHIBITION AND BOASTING; BE SIMPLE"*

"பகட்டு, அலங்காரம் மற்றும் பெருமை ஆகியவற்றைத் தவிர்த்து விடுங்கள்! எளிமையாக இருங்கள்."

*Tablets of Truth Sterling Publisher* நிறுவன வெளியீட்டில் 74ஆம் பக்கத்தில் கூறியுள்ளார்.

ஆனால், அவர் இதற்கு முற்றிலும் பொருத்தமற்றவராக வாழ்ந்தார் என்பது உலகறிந்த உண்மை. வறுமையின் விளிம்பிலிருக்கும் கூலித் தொழிலாளியிடம் தன்னைப் பற்றிய நம்பிக்கையை ஊட்டிப் பக்தராக்கியுள்ள அவரின் அகராதியில் எப்போதும் பட்டாடை அணிந்திருப்பதே பகட்டற்ற தன்மைபோலும்! சொகுசுவாகனங்களில் வலம்வருவதே எளிமையின் அடையாளம் போலும்! எளிமையின் முக்கியத்துவத்தை விளக்கும்(?) இந்த ஆன்மிகவாதிகளின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.



இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை மிகமிக எளிமையானது; அவர்களின் வாழ்க்கை வெளிப்படையானது. வாய்ப்பிருந்தும்கூட அவர்கள், தாம் படுப்பதற்குப் பட்டுமெத்தை வைத்திருக்கவில்லை; ஏன் சாதரன மெத்தைகூட வைத்திருக்கவில்லை. ஈச்ச நாரில் பின்னப்பட்ட கட்டிலில் படுத்ததால் அவர்களின் உடலில் நார் அழுந்திய தடம் ஏற்படும் அளவிற்கு எளிமையாய் வாழ்ந்தார்கள். ஒரு நாட்டிற்கே ஆட்சியாளராய் இருக்கும் நிலையிலும் இவ்வாறு எளிமையிலும் வாழ்ந்தார்களென்றால் அவரின் எளிமை பற்றி இதற்குமேல் விவரிக்கவேண்டுமா?

இவ்வாறு மனித குலத்தின் அனைத்துத் துறைக்கும் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ள அந்த மாமனிதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வழி நடக்க இந்த மனித குலம் முன்வரவேண்டும்.

## எதிரிகளின் வாக்கு மூலம்

ஆன்மிக பீடங்களில் ஏதாவது குற்றச் செயல்கள் நடந்தேறினால், அதற்கு ஒருவர் மற்றவரை குறைகூறுவதும், குருவுக்கு எதிராக சீடர்கள் சாட்சியளிப்பதும், ஆன்மிகத் தலைவர்கள் ஒன்று இரண்டு என சிறைக்கம்பிகளை எண்ணிக் கொண்டிருப்பதும் நம் நாட்டின் அன்றாட நிகழ்வுகள். ஆன்மிகத் தலைவர்களோடு கூட இருந்தவர்களும், கூடியிருந்தவர்களும் தங்களின் ஆன்மிகத் தலைவர்களுக்கே குழிபறிக்கிறார்கள். இதுதான் இன்றைய நிலை.

அரபு நாட்டின் வணிகக் குழு ஒன்று சிரிய நாட்டிற்கு வந்திருந்த செய்தி ரோமப் பேரரசின் மன்னர் ஹெர்குலிஸிற்குத் தெரிவிக்கப்பட்டது. அரபு நாட்டில் 'குறைஷி'களென அழைக்கப்படும் குலத்தாரின் முக்கியப் பிரமுகர்களில் ஒருவரான அபூஸுஃப்யானும் அந்த வணிகக் கூட்டத்தில் வந்திருந்தார். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கும் இறைமறுப்பாளர்களுக்கும் இடையே நடந்த 'உஹத்' யுத்தத்தில் அபூஸுஃப்யான் தலைமை தாங்கியவர். அன்றைய காலகட்டத்தில் முஸ்லிம்களின்

பெரும் எதிரிகளில் இவரும் ஒருவர். இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களால் போதிக்கப்படும் கொள்கையை எப்படியும் அழித்தாக வேண்டுமென்பதில் குறியாய் இருந்தவர்.

பொதுவாக ஒரு நபர் குறித்து அவரின் எதிரியிடம் கருத்துக் கேட்கப்பட்டால், இல்லாததை எல்லாம் சொல்லி இழிவுபடுத்து வதே வழக்கம். ஆனால் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களைப் பற்றி அவர்களின் எதிரிகள்கூடப் பொய் யுரைத்து இழிவுபடுத்திய தில்லை. அந்த மக்கள் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் கொள்கையை எதிர்த்தார்களே தவிர, அவர்களின் மேன்மையான மனித நேயப் பண்பிலோ அல்லது ஒழுக்க மாண்புகளிலோ குறைகண்டதில்லை. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) குறித்து ரோமப் பேரரசரின் கேள்விகளுக்குப் பொய்யுரைக்க வழியின்றி உண்மையை உரைத்த ஒரு வணிகக் கூட்டத்தின் சம்பவம் வரலாற்று ஏடுகளில் இன்றும் மிளிர்கிறது. அச்செய்தி புகாரீ உள்ளிட்ட பல நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அரபு நாட்டு வணிகர்கள் அனைவரும் அரசவைக்கு வருமாறு ஹெர்குலிஸ் மன்னரிடமிருந்து அழைப்புவிடப்பட்டது. அழைப்பை ஏற்று அனைவரும் மன்னரின் அவைக்குச் செல்கிறார்கள். மன்னர் தம் மொழி பெயர்ப்பாளரையும் அழைத்து வரச் செய்தார்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) பற்றி அவர்களின் எதிரிகளிடம் வாக்குமூலம் கேட்பதற்காக அரசர் அவர்களை அழைக்கிறார்.

**'பைத்துல் முகத்தஸ்'** எனும் இறைஇல்லத்தில் அரசர் முகாமிட் டிருக்கிறார். அரசவையில் அமைச்சர்களும், முக்கிய அதிகாரிகளும் கூடி இருக்கிறார்கள். அரசர் அரபு நாட்டு வணிகக் குழுவிடம் பேசத் தொடங்குகிறார்.

**அரசர்:** தம்மை இறைத்தூதரென எண்ணும் அம்மனிதருக்கு உங்களில் மிக நெருங்கிய உறவுக்காரர் யார்?

**அபூ ஸுஃப்யான்:** நான்

**அரசர்:** (தம் அதிகாரிகளிடம்) அவரை என்னருகில் அழைத்து வாருங்கள், அவருடன் வந்திருப்போரை அவருக்குப் பின்னால் நிறுத்துங்கள்.

அரசரின் கட்டளைக்கு இணங்க, அனைவரும் அரசருக்கு அருகில் நிறுத்தப்பட்டார்கள்.



**அரசர்:** (தம் மொழி பெயர்ப்பாளரிடம்) அபூஸுஃப்யான் ஏதா வது பொய்யுரைத்தால் அதை என்னிடம் கூறி விட வேண்டும் என அம்மக்களுக்குக் கூறும்!

அரசரின் கட்டளையை ஏற்ற மொழி பெயர்ப்பாளர் அந்த அரபு வணிகக் கூட்டத்திடம் இதனைச் சொல்கிறார். தாம் பொய் யுரைத்தால் இவர்கள் அரசரிடம் சொல்லி விடுவார்களென்ற வெட்கத்தில் அபூஸுஃப்யான் நிற்கிறார்.

**அரசர்:** அவருடைய குலம் உங்களில் எத்தகையது?

**அபூ ஸுஃஃப்யான்:** அவர் எங்களில் உயர்ந்த குலத்தவர்.

**அரசர்:** இவருக்கு முன்பு உங்களில் யாரேனும் தம்மை இறைத் தூதரென வாதிட்டதுண்டா?

**அபூ ஸுஃப்யான்:** இல்லை.

**அரசர்:** அவரைப் பின்பற்றுவோர் மக்களில் உயர்ந்தவர்களா, சாமானியர்களா?

**அபூ ஸுஃப்யான்:** அவர்கள் சாமானியர்கள் தான்.

**அரசர்:** அவரின் மார்க்கத்தை ஏற்ற பின்பு அதன் மீது அதிருப்தியுற்று யாரேனும் மதம் திரும்பியதுண்டா?

**அபூ ஸுஃப்யான்:** இல்லை.

**அரசர்:** அவர் எப்போதாவது வாக்குமீறி இருக்கிறாரா?

**அபூ ஸுஃப்யான்:** இது வரை இல்லை. இப்போது அவருடன் நாங்கள் ஓர் உடன்படிக்கை செய்துள்ளோம். அவர் அதை எப்படி கையாளப்போகிறார் என்பது எங்களுக்குத் தெரியாது.

**அரசர்:** அவருடன் நீங்கள் போர் புரிந்திருக்கிறீர்களா?

**அபூ ஸுஃப்யான்:** ஆம்.

**அரசர்:** அவருடன் நீங்கள் நடத்திய போரின் முடிவுகள் எவ்வாறு இருந்தன?

**அபூ ஸுஃப்யான்:** எங்களுக்கும் அவருக்கும் வெற்றியும், தோல்வியும் மாறி மாறி வந்திருக்கின்றன. சில சமயம் அவர் எங்களை வென்றிருக்கிறார், சில சமயம் நாங்கள் அவரை வென்றிருக்கிறோம்.

**அரசர்:** அவர் உங்களுக்கு என்ன ஏவுகிறார்?

**அபூ ஸுஃப்யான்:** இறைவன் ஒருவனை மட்டுமே வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள். உங்கள் முன்னோர் கூறியவற்றை எல்லாம் விட்டுவிடுங்கள் என்கிறார். தொழுகை, உண்மை, கற்பு, நெறி, உறவினர்களுடன் இணங்கி வாழுதல் போன்ற பண்புகளை ஏவுகிறார்.

**அரசர்:** (தம் மொழி பெயர்ப்பாளரை நோக்கி) நான் சொல்வதை எல்லாம் அவர்களிடம் மொழி பெயர்த்துக் கூறும்!

மொழி பெயர்ப்பாளர் தயாராக நிற்கிறார்.

**அரசர்:** அவரின் குலம் குறித்து உம்மிடம் நான் விசாரித்தற்கு அவர் உங்களில் உயர்ந்த குலத்தைச் சார்ந்தவர்தாம் என நீர் குறிப்பிட்டீர். இறைத் தூதர்கள் அனைவரும் இப்படித்தான் அவர்கள் வாழும் சமூகத்தில் உயர்ந்த குலத்தில் அனுப்பப் பட்டுள்ளார்கள்.

தாம் இறைத்தூதரென்ற இவ்வாதத்தை உங்களில் யாரேனும் இவருக்கு முன்பு செய்ததுண்டாவென நான் கேட்டதற்கு நீர் இல்லையென குறிப்பிட்டீர். இவருடைய முன்னோர்களில் 'யாரேனும் மன்னராக இருந்திருப்பின், இவர் தம் முன்னோரின் ஆட்சியை அடைய விரும்பும் ஒரு மனிதரென நான் கூறிஇருப்பேன்.

"இவ்வாதத்தை அவர் எடுத்து வைப்பதற்கு முன்பு அவர் பொய் சொல்லக் கூடியவரென நீங்கள் அவரைச் சந்தேகித்ததுண்டா?" என நான் உம்மிடம் கேட்டதற்கு நீர் இல்லையெனக் குறிப்பிட்டீர். மக்களிடம் பொய் சொல்லத் துணியாத ஒருவர் இறைவன் விஷயத்திலும் பொய் சொல்லமாட்டாரென நான் உறுதியாக நம்புகிறேன்.

"மக்களில் சிறப்புவாய்ந்தவர்கள் அவரைப் பின்பற்றுகிறார்களா? சாமானியர்கள் அவரைப் பின்பற்றுகிகிறார்களா?" என்று நான் உம்மிடம் கேட்டதற்குச் சாமானிய மக்கள் தாம் அவரைப் பின்பற்றுகிறார்களென நீர் குறிப்பிட்டீர். இறைத்தூதர்களை இப்படிப்பட்டவர்களே தொடக்கத்தில் பின்பற்றுவோராக இருந்திருக்கிறார்கள்.

அவரைப் பின்பற்றுகிறவர்கள் அதிகரிக்கிறார்களா, குறைந்து வருகின்றனரா?" என நான் உம்மிடம் கேட்டதற்கு அவர்கள் அதிகரித்து வருகிறார்களென நீர் குறிப்பிட்டீர். இறைநம்பிக்கை நிறைவுபெறும் வரை இவ்வாறு (வளர்ந்து கொண்டே) இருக்கும்.



"இவரின் மார்க்கத்தில் நுழைநத பின்னர் அதிருப்தியுற்று யாரேனும் மதம் மாறி இருக்கிறார்களா?" என்று நான் உம்மிடம் கேட்டதற்கு நீர் இல்லையென குறிப்பிட்டீர். இதயத்தில் நுழைந்து விட்ட இறைநம்பிக்கையின் எழில் இப்படித் தான் (உறுதியானதாக) இருக்கும்.

"அவர் எப்போதேனும் வாக்கு மாறியது உண்டா?" என நான் உம்மிடம் கேட்டதற்கு நீர் இல்லையென குறிப்பிட்டீர். இறைத் தூதர்கள் இவ்வாறே வாக்கு மீறாதிருப்பார்கள்.

"அவர் உங்களுக்க எதைக் கட்டளையிடுகிறார்?" என்று நான் உம்மிடம் கேட்டதற்கு இறைவன் ஒருவனை மட்டும் வணங்க வேண்டும் என்றும், அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது என்றும் அவர் உங்களுக்கு ஏவுவதாகவும், சிலை வணக்கங் களிலிருந்து அவர் உங்களைத் தடுப்பதாகவும், தொழுகை, உண்மை, கற்புநெறி ஆகியவற்றை ஏவுவதாகவும் நீர் கூறினீர். நீர் கூறியவை அனைத்தும் உண்மையானால் (ஒரு காலத்தில்) என் இரு பாதங்களுக்குக் கீழுள்ள இந்த இடத்தையும் அவர் ஆள்வார். (விரைவில் இப்படிப்பட்ட) இறைத்தூதர் ஒருவர் அனுப்பப்படுவார் என நான் முன்பே அறிந்திருந்தேன்.

ஆனால், அவர் (அரபிகளாகிய) உங்களில் தாம் தோன்றுவார் என நான் கருதவில்லை. அவரைச் சென்றடையும் வழியை நான் அறிந்திருந்தால் மிகச் சிரமப்பட்டாவது அவரைச் சந்தித் திருப்பேன். (இப்போது) நான் அவர் அருகே இருந்தால் அவரின் பாதகங்களைக் கழுவிவிடுவேன்.

மன்னர் இதைக் கூறிவிட்டு புஸ்ராவின் ஆளுநர் மூலம் தம்மிடம் கொடுப்பதற்காக இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) கொடுத்து அனுப்பிய கடிதத்தைத் தருமாறு ஆணையிட்டார். ஆளுநர் அதை மன்னரிடம் ஒப்படைத்தார். மன்னர் அதைப் படித்தார். அக்கடிதத்தில்:

அளவற்ற அருளாளனும் நிகரில்லா அன்புடையோனுமாகிய ஏக இறைவனின் திருப்பெயரால்...

இறைவனின் அடியாரும் அவனுடைய தூதருமான முஹம்மத் என்பவர், ரோமாபுரிச் சக்கரவர்த்தி ஹெர்குலிஸ் அவர்களுக்கு எழுதுவது. நேர்வழியைப் பின்பற்றுவோரின் மீது சாந்தி நிலவட்டு மாக! நிற்க, இஸ்லாத்தைத் தழுவுமாறு உமக்கு நான் அழைப்பு

விடுகிறேன்! நீர் இஸ்லாத்தை ஏற்பீராக! இதனால் நீர் ஈடேற்றம் பெறுவீராக! இறைவன் உமக்கு இருமடங்கு சன்மானம் வழங்குவான். (இவ்வழைப்பை) நீர் புறக்கணித்தால் உம்முடைய குடிமக்களின் பாவமும் உம்மைச் சாரும்!

வேதக்காரர்களே! நாம் இறைவனைத் தவிர்த்து (வேறு எவரை யும்) வணங்கக் கூடாது; அவனுக்கு எதையும் இணையாக்கக் கூடாது. இறைவனை விட்டுவிட்டு நம்மில் சிலர், சிலரை நம் இரட்சகர்களாக ஆக்கக் கூடாது; எங்களுக்கும் உங்களுக்கும் உள்ள பொதுவான ஒரு கொள்கையை நோக்கி வாருங்கள். (இக்கொள்கையை) நீங்கள் (ஏற்க மறுத்து) புறக் கணித்தால், நாங்கள் (அந்த ஒரே இறைவனுக்குக் கீழ்படிந்து) முஸ்லிம்கள் என்பதற்கு நீங்களே சாட்சியாளர்களாக ஆகி விடுங்களென எழுதப்பட்டிருந்தது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) குறித்து அவர்களுடைய எதிரிகளின் வாக்கு மூலத்தையும், இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் அழைப்பையும் கண்ட மன்னர் ஹெர்குலிஸ் வியப்பில் ஆழ்ந்தார். உண்மை நிலையை அறிந்தார்.[84]

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் அந்த அழைப்பு ஹெர்குலிஸ் மன்னருக்கு மட்டுமல்ல. இன்றைய உலக நாடுகளின் அதிபர்கள், தலைவர்கள், பிரதமர்கள், ஆளுநர்கள் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் உரியதாகும். இவர்கள் அனை வரும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் அழைப்பை ஏற்பார் களாயின், ஈருலக வெற்றிக்குச் சொந்தக்காரர்கள் ஆவர்.

இறைவனும், இறைவனை மட்டுமே நம்பி வாழ்வோரும் இன்றைய உலக மக்களிடம் இதை மட்டுமே எதிர்பார்க்கிறார் கள். உலக மக்கள் அனைவருக்கும் பொதுவாக இறைவன் அளித்துள்ள இச் செய்தி தங்களுக்கும் தெரிவிக்கப்பட்டதற்கு இந்நூல் சாட்சியாக இருக்கட்டும்.

*******

84. காண்க: ஸஹீஹ் அல் புகாரீ